16-31 ஜூலை 2001

www.padippakam.com

ரூ. 5.00


# புதிய ஜனநாயகம்



**கொள்ளைக்காரன் வீரப்பனைத் தேடி கொலைகாரன் தேவாரம்**




படிப்பகம்

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## இந்து மதவெறியர்களின் ஐ.எஸ்.ஐ. பூச்சாண்டி

விசுவ இந்து பரிசத் நடத்தி வரும் டிரஸ்டான ராமஜென்ம பூமி நியாஸின் துணைத் தலைவர் நிருத்ய கோபால் தாஸ் மீது கடந்த மே மாதம் 28-ஆம் தேதி நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இத்தாக்குதலில் அவர் பலமாக காயப்படவில்லையென்ற போதும், அவரது பாதுகாவலரும், அவருடன் இருந்த வேறு நால்வரும் பலத்த காயமடைந்தனர். இந்து மதவெறி அமைப்புகள் இத்தாக்குதலை, பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.இன் சதி எனச் சித்தரித்து, இந்து தேசியவெறியைத் தூண்டிவிட்டனர். ஆனால், இத்தாக்குதல் பற்றி நடந்த விசாரணையில் இந்தச் சாமியாரின் முன்னாள் சீடரான தேவ்ராம் தாஸ் வேதாந்திதான் குற்றவாளி எனத் தெரிய வந்துள்ளது. ராமர் கோவிலைக் கட்டுவதற்காகத் திரட்டப்பட்ட பல நூறு கோடி ரூபாய் சொத்துக்களைக் கைப்பற்றி அனுபவிக்க இந்து மதவெறியர்களுக்குள் நடந்து வரும் போட்டா போட்டிதான் இத்தாக்குதலுக்கான காரணம் என்றும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

## குஜராத் பூகம்பமும் வசூல் வேட்டையும்

பூகம்பம் குஜராத்தை உலுக்கிய மறு நிமிடமே அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் சிலர் ''அமெரிக்க இந்திய பவுண்டேஷன்'' என்ற அமைப்பை நிறுவி, குஜராத் இடிபாடுகளைக் காட்டி அமெரிக்காவில் வசூல் வேட்டையைத் தொடங்கினர். 230 கோடி ரூபாய் நிதி திரட்டப் போவதாகத் தம்பட்டம் அடித்த இவ்வமைப்பு, இந்த நிதியைத் திரட்ட கிளிண்டனைக் கவர்ச்சி கதாநாயகனாக்கியது. அவரும் குஜராத்திற்கு வந்து ''உச்'' கொட்டி விட்டுச் சென்றார். இதுவரை 47 கோடி ரூபாயை நிதியாகத் திரட்டியிருக்கும் இவ்வமைப்பு, அதில் ஒரு பைசாவைக் கூடப் பூகம்பம் பாதித்த பகுதிகளுக்கு அனுப்பவில்லை. அந்த அமைப்பு இன்னும் நிதி திரட்டுகிறதா? இல்லை, திரட்டிய பணத்தோடு கம்பி நீட்டி விட்டதா எனத் தெரியவில்லை என அரசு சாரா நிறுவனங்கள் புலம்புகின்றன.

## கொத்தடிமை மீட்பு கானல் நீரா?

1997-ஆம் ஆண்டு கொத்தடிமைத்தனம் பற்றி ஆய்வு நடத்திய தமிழக அரசு, தமிழகத்தில் பீடித் தொழில், செங்கற்சூளை, தீப்பெட்டி தொழில் மற்றும் விவசாயப் பண்ணைகளில் கிட்டதட்ட 25 இலட்சம் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக இருப்பதாகக் கண்டறிந்தது. இவர்களில் 35,855 தொழிலாளர்களை உடனடியாக விடுவிக்கப் போவதாக அறிவித்த அரசு, கடந்த ஐந்தாண்டுகளில் 10,283 தொழிலாளர்களைத் தான் நட்டஈடு கொடுத்து விடுவித்துள்ளது. மீதி 25,572 தொழிலாளர்களை விடுவிக்கப் பணம் இல்லை எனக் கை விரித்து விட்டது. 25,000 தொழிலாளர்களை விடுவிக்கவே வக்கற்ற அரசு, இன்னும் 20 இலட்சம் தொழிலாளர்களை இனி எந்தக் காலத்தில் விடுவிக்கும்? அத்தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகவே வாழ்ந்து சாக வேண்டியதுதானா?

சட்ட விரோத குழந்தைத் திருமணத்தில் கலந்து கொண்ட அமைச்சர் விமல் முந்தாதா (வலது ஓரம்).



## மகாராஷ்டிரா: பிற்போக்குத் தனத்தின் கோட்டை

மகாராஷ்டிரா மாநில அரசின் பெண்கள் மற்றும் குழந்தை நல அமைச்சர் விமல் முந்தாதா, அம்மாநிலத்திலுள்ள ஆம்பேஜோகாய் என்ற கிராமத்தில் நடந்த குழந்தை திருமணத்தில் கலந்து கொண்டு, பதிமூன்றே வயதான மணப்பெண்ணை வாழ்த்தியிருக்கிறார். பெண்கள் மற்றும் குழந்தை நல அமைச்சரே இந்தப் பிற்போக்குத்தனத்திற்கு ஆதரவாக இருந்தால், குழந்தை திருமணத் தடைச் சட்டம் அம்மாநிலத்தில் எந்த இலட்சணத்தில் அமல்படுத்தப்படும் எனச் சொல்லத் தேவையில்லை. அம்மாநிலமெங்கும் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் 29 சதவீதப் பெண்களுக்குத் திருமண வயதை எட்டும் முன்பே திருமணம் நடந்து விடுவதாகவும், நந்தேட் மாவட்டத்தில் இந்த எண்ணிக்கை 64 சதவீதமாக இருப்பதும் தெரிய வந்துள்ளது.

## இந்தியாவின் ஏற்றுமதி சாதனை!

உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும் என்பதற்கு எதிராக தரகு முதலாளிகளின் சங்கமான சி.ஐ.ஐ., சமீபத்தில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில், ''உலகின் மொத்த ஏற்றுமதியில் இந்தியாவில் பங்கு கடந்த ஐந்தாண்டுகளில் 0.6 சதவீதத்தில் இருந்து 0.65 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது மிகக் குறைவான வளர்ச்சி என்ற போதும், உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து விலகினால், ஏற்றுமதி குறைந்து, தேசநலன் பாதிக்கப்படும்'' எனத் தரகு முதலாளிகள் பயமுறுத்தியிருக்கிறார்கள். சுண்டைக்காய் கால் பணம், சுமைகூலி முக்கால் பணம் என்ற கதைதான் இது.

## ரவுடித்தனம் தேசபக்தியாகுமா?

மகாராஷ்டிரா மாநிலத்தின் பூனாவிலுள்ள ஃபெர்குஸன் கல்லூரி வெளியிட்டிருந்த கல்லூரி மலரில், அக்கல்லூரியில் படித்த பிரபலமானவர்களின் வரிசையில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் புட்டோவின் பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது. இதைக்கூடச் சகித்துக் கொள்ள முடியாத சிவசேனா குண்டர்கள், அக்கல்லூரி முதல்வரின் முகத்தில் கரியைப் பூசி, அவரது சட்டை முழுவதும் மையைத் தெளித்து, அவரது கழுத்தில் ''நான் ஒரு ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட்'' என்று எழுதப்பட்ட பலகையை மாட்டி, அடித்து உதைத்து அவமானப்படுத்தியிருக்கின்றனர். ஒருபுறம் முஷாரப்புடன் பேச்சுவார்த்தை - சமாதான நாடகம்; இன்னொருபுறம் சகிப்புத்தன்மையற்ற இந்து மத தேசிய வெறியாட்டம்.

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 15-17**

16 ஜூன் 2001-31 ஜூலை 2001

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**



**மின் அஞ்சல் முகவரி:**
**puthiyajananayagam@hotmail.com**

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# வெறிநாய்களின் ஆட்சியில் சாமானியர்களின் கதி என்ன?

**ஊ**ருக்குள் புகுந்து நான்கைந்து பேரைக் கடித்துக் குதறிய ஒரு கொடிய மிருகம், ஊர் மக்கள் எழுப்பிய கூச்சலைக் கேட்டு மீண்டும் காட்டுக்குள் ஓடிப் பதுங்கிக் கொண்டது. அது பயந்து ஓடிப் போய் விட்டது, மீண்டும் தாக்குவதற்கு வராது என்று நம்பி ஊர் மக்கள் உறங்கப் போய் விட்டார்கள். ஆனால், அந்தக் கொடிய மிருகமோ மீண்டும் பாய்வதற்குத் தக்க தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அப்படிச் செய்வது சரியா, தவறா என்று எண்ணிப் பார்க்கும் பகுத்தறிவு அதற்குக் கிடையாது. அதற்கு இருப்பதெல்லாம் வெறி மட்டுமே. அதன் கோரப் பசிக்கு நரமாமிசம் தேவை. தமிழக முதல்வர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் பாசிச - வக்கிரம் நிரம்பிய ஜெயலலிதாதான் அந்த மிருகம். அரசியல் பழிவாங்கும் வெறி - அதிகார ஆணவத் திமிர் தலைக்கேறிய ஜெயலலிதா ஏவிய போலீசு வெறி நாய்கள் தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி, இன்னாள் மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், டி.ஆர். பாலு மற்றும் திமுக அணிகள் மீது பாய்ந்து கடித்துக் குதறின. கூண்டோடு சிறையிலடைக்கப்பட்டு, ஒடுக்கி வைக்கப்பட்டிருந்தனர். நாடு முழுவதும் எழுந்த கடும் கண்டனம், மைய அரசு விடுத்த எச்சரிக்கை காரணமாக அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதனால், கருணாநிதி கைதையொட்டி எழுந்த அரசியல் நெருக்கடி தீர்ந்து விட்டது; அரசியல் சூடு தணிந்து விட்டது என்று ஜனநாயக அபிமானிகள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். ஆனால், பாசிச ஜெயா-சசி கும்பல் அதன் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டு, அரசியலில் இருந்து அறவே விரட்டியடிக்கப்படும் வரை இந்த நெருக்கடியும், சூடும் தணியாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் ஜெயலலிதாவும், அவருடைய சகபாடிகளும் அல்ல; அவர்களுடைய அரசியல் எதிரிகள்தாம். ஏனென்றால், மத்திய அரசு விடுத்திருக்கும் எச்சரிக்கை என்பது ஜெயலலிதாவாலும் அவருடைய சகபாடிகளாலும் வெறும் கழிப்பறைக் காகிதங்களாக மட்டுமே பயன்படுத்தப்படும். அந்த எச்சரிக்கைக்கு வேறெந்த மதிப்பும் கிடையாது என்பதை அவர்கள் இப்போதே தெரிவித்து விட்டார்கள்.

***

ஜெயலலிதா தேர்தலின்போதே பகிரங்கமாகத் தெரிவித்த ஒரே நோக்கம் இதுதான்: "கருணாநிதி என்னை கிரிமினல் முறையில் துன்புறுத்திய தீய சக்தி. கருணாநிதியை அழிக்க வேண்டும். சென்னை மத்திய சிறையில் நான் அடைக்கப்பட்ட அதே அறையில் கருணாநிதியைப் பூட்டி, அதே தட்டில் சிறை சோறு தின்ன வைப்பேன்." இது ஜெயலலிதாவின் முதன்மையான நோக்கம் தான்; ஆனால் இது மட்டுமே அவரது நோக்கம் கிடையாது. தன் மீது போடப்பட்டுள்ள வழக்குகளில் இருந்து எப்படியாவது விடுபடுவது; ஏற்கனவே கொள்ளையடித்த சொத்துக்களோடு இன்னும் தடையின்றிக் கொள்ளையைத் தொடருவது என்ற பேராசையும் இல்லாமல் இல்லை. இதற்காக எல்லாருமே ஊழல் பேர்வழிகள் தாம், ஊழல் இல்லாமல் யாரும் ஆளவே முடியாது என்பதை சமூகம் முழுவதையும் ஏற்க வைப்பதும்; தமது ஆட்சிக்கு எதிராக சாதாரண முணுமுணுப்புத் தெரிவிப்பவர்களைக் கூட அடக்கி ஒடுக்குவதும் கூட ஜெயலலிதாவின் நோக்கமாக உள்ளது.

ஜெயலலிதாவின் பதவியேற்பு விழாவிலேயே, 1991-96 ஆண்டுகளில் ஆட்சியின் போது அவருடைய இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உல்லாச-ஊதாரித்தனம் ஆகியவற்றுக்குத் துணை நின்ற அரசு - போலீசு உயரதிகாரிகள் அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர். குறிப்பாக, அரிபாஸ்கர் போன்ற ஊழல் பெருச்சாளிகளும், தேவாரம் போன்ற விசுவாச ஊழியர்களும் ஜெயலலிதா அரசின் அறிவிக்கப்படாத ஆலோசகர்களாகப் பதவியேற்றனர். முதலமைச்சராக மட்டுமல்ல, போலீசு மந்திரியாகவும் பொறுப்பேற்ற ஜெயலலிதாவின் கீழ் இருந்து கொண்டு அவருக்கு எதிராகவே வழக்குகளை நடத்த முடியாது என்பதால், குற்றப் புலனாய்வு போலீசு அதிகாரிகளும் வழக்குரைஞர்களும் பதவி விலகினர். இதையே எதிர்பார்த்துக் காத்திருந்த ஜெயலலிதா தனக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கவும் நீதிமன்றங்களில் வாதாடவும் தனது எடுபிடிகளையே நியமித்தார். இன்னும் சில வழக்குகளுக்குப் பொறுப்பானவர்களை நியமிப்பதை நிறுத்தி வைத்தார். இதன்மூலம் எல்லா வழக்குகளையும் முடக்கி வைத்தார்.

அரிபாஸ்கர், தேவாரம் ஆகியோரின் ஆலோசனையின் பேரில், சசி குடும்பத்தினரிடம் கப்பம் கட்டி கடாட்சம் பெற்றவர்கள் அரசின் முக்கியப் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். திமுக அடிமட்ட அணிகளைத் தாக்குவதில் அதிமுக ரௌடிகளுக்கு துணை நிற்பதும், தாக்கப்பட்டவர்கள் மீதே பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைப்பதும் போலீசு அதிகாரிகளின் முதற்பணியாக அளிக்கப்பட்டது. அமைச்சர்களின் முதற்பணி ஆட்சி நிர்வாகத்தைக் கவனிப்பதல்ல. அவர்கள் தம் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள் புரிந்துள்ள குற்றங்குறைகளைக் கண்டுபிடித்து ஜெயலலிதாவின் கவனத்துக்குக் கொண்டு வருவதுதான் முதன்மைப் பணியென இடப்பட்டது. இதை யார் முதலில் சாதித்து ஜெயலலிதாவின் சன்மானத்தைப் பெறுவது என்கிற

படிப்பகம்

www.padippakam.com

போட்டியே ஆரம்பமாகி விட்டது. அப்படிப் பட்ட குற்றங் கண்டுபிடிப்பதில் போதிய கவனம் செலுத்தாத மந்திரிகள், தனக்கு விசுவாசம் காட்டத் தவறிய மந்திரிகள், மந்திரி பதவி ஜெயலலிதா இட்ட பிச்சைதான் என்பதை மறந்து, சுயசம்பாதனை என்று எண்ணியவர்கள் அமைச்சரவையிலிருந்தே தூக்கி வீசப்பட்டனர்.

கருணாநிதி முதலியவர்கள் கைது நிகழ்ச்சியை ஒட்டி எழுந்த கண்டனங்கள் - அனுதாப அலையைக் கண்டஞ்சிய ஜெயலலிதா நலன் விரும்பிகள் பலரும் கூட, அவர் அவசரம் காட்டிவிட்டார், நிதானமாக நடந்திருக்கலாம் என்று எண்ணுகின்றனர். அவர்கள் அனைவரும் ஒன்று ஜெயலலிதாவின் பண்புகளை அறியாதவர்கள் அல்லது காலத்துக்கு எதிராகப் போட்டி- போட்டுக் கொண்டு செயல்பட வேண்டிய கட்டாயத்தில் ஜெயலலிதா இருக்கிறார் என்பதை அறியாதவர்களாக உள்ளனர். ஆறுமாத கால அவகாசம் தான் இருக்கிறது. அதற்குள் ஏதாவது செய்து தேர்தல்களில் போட்டியிடும் தகுதியைப் பெற்றாக வேண்டும். ஆனால், அதற்கான காலம் மட்டுமல்ல, வாய்ப்புகளும் ஒரு சிலதான் உள்ளன.



ஓர் அரசு உத்திரவு போட்டு வழக்குகளையெல்லாம் இரத்து செய்து சிறப்பு நீதிமன்றங்களைக் கலைத்துவிட வேண்டும். அல்லது மந்திரிசபை தீர்மானம் போட்டு ஜெயா-சசி கும்பலை மன்னித்து வழக்குகளில் இருந்தும் தண்டனையில் இருந்தும் விடுவிக்கும்படி ஆளுநர் மூலம் உத்திரவு போட வேண்டும். பாத்திமா பீவி அதற்கும் தயாராக இருந்தார். அல்லது உயர்நீதி மன்ற நீதிபதிகளை விலைக்கு வாங்க வேண்டும் அல்லது மிரட்டிப் பணிய வைக்க வேண்டும். இவற்றில் எதைச் செய்தாலும் உயர்நீதி மன்ற - உச்சநீதி மன்ற வழக்கு, தடை-தலையீடும் கூடவே வரும். இந்த நிலையில் பொற்கை பாண்டியன் கதைபோல ''எல்லோரும் இலஞ்ச - ஊழல் பேர்வழிகள்தாம், யாரும் யோக்கியதை கிடையாது; நானும் அப்படித்தான்.'' என்ற வாதத்தை உறுதிப்படுத்தவும், கருணாநிதியை அரசியல் பழிதீர்க்கவும் அவசரப்பட்டார் ஜெயலலிதா. நாளும் ஒரு குற்றச்சாட்டு, தொடர்ந்து வெளியிட்டு கருணாநிதி - ஸ்டாலினைக் கைது செய்து சிறையிலடைக்கத் திட்டமிட்டார்.

கருணாநிதி ஆட்சியில் சத்துணவுத் திட்டத்தில் சோயா மாவுக்குப் பதில் கடலைப் புண்ணாக்குப் போடப்பட்டதாகக் குற்றஞ் சாட்டினார்கள். அது வெங்காயத் தோலை உரித்தாற்போன்றதாகவே முடிந்தது. ஒரு துளி கிருஷ்ணா நீர்கூட சென்னை வரவில்லை; ஆந்திர அரசோடு சேர்ந்து கருணாநிதி மோசடி செய்து விட்டார் என்று புளுகினார் ஜெயலலிதா. பிறகு, கஜானா காலியாக வைத்த குற்றச்சாட்டை எழுப்பினார். அரிசி கையிருப்பைக் காட்டினார் கருணாநிதி. உடனே கையிருப்பு அரிசி புழுத்துப் போனது, அதை வாங்குவதில் 65 கோடி ஊழல் நடந்துள்ளது என்று அறிவித்தார், ஜெயலலிதா.

இதற்கிடையே நகராட்சி, மாநகராட்சிகளில் கருணாநிதி படத்தை அகற்றி ஜெயலலிதா படத்தை வைக்கும் ''இலட்சியப் போராட்டம்(!)'' வெடித்தது. ஆற்காடு வீராசாமி தம்பியை பழைய வழக்கொன்றில் பிடித்துச் சிறையிலடைத்தனர். நெடுஞ்சாலைத் துறையில் ஊழல் நடந்ததாகக் கூறினாலும், தனியார் ஒப்பந்தக்காரரின் புகாரின் பேரில் திமுக முன்னாள் எம்.பி.யைக் கைது செய்தனர். இந்த வழக்கில் ஸ்டாலின் கைதாவார் என்று வதந்தியைப் பரப்பினர். எச்சரிக்கை அடைந்த ஸ்டாலின் பிடிபடாமல் ஓடிப் பிடித்து விளையாடினார். பின்னர் அவர்மீது வழக்கு ஒன்றுமில்லை என்று போலீசு அதிகாரியே அறிவித்தார்.

இதற்கிடையே ''புழுத்த அரிசிப் புகார் பொய்யானது'' என்பதை நிரூபிக்கும் அதிரடி வேலையில் பொன்முடி இறங்கினார். பல பத்திரிகையாளர்களுடன் விழுப்புரம் அரிசி கிடங்குக்குப் போய் மூட்டைகளில் இருந்து அரிசி எடுத்து அவை நல்லவைதான் என்று நிரூபித்தார். பொன்முடியையும், சன் தொலைக்காட்சி நிருபரையும் கைது செய்து பல பொய் வழக்குகள் போட்டது ஜெயா அரசு. இதன் மூலம் தேன் கூட்டைக் கலைத்த நிலைக்கு ஆளானது. பத்திரிகையாளர்கள் கொதித்தெழுந்து போராட்டத்தில் குதித்தனர். மனுக் கொடுக்கப் போன அவர்களை அடித்து விரட்டும்படி போலீசை ஏவினார். இதெல்லாம் கருணாநிதியின் சதியென்று அவதூறு பேசினார். கருணாநிதி கிண்டலடித்து முரசொலியில் எழுதியது கண்டு ஆத்திரமடைந்தார்.

இதற்கிடையே தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஜெயலலிதாவை முதல்வராக்கியதை எதிர்த்த வழக்குகள் விசாரிக்கத்தக்கவைதாம் என்று உச்சநீதி மன்றம் ஏற்று, அரசியல் அமர்வுப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட போது, ஜெயலலிதாவின் அரசியல் வாழ்வுக்கு மாட்டப்பட்ட சுருக்குக் கயிறு இறுகுவதை உணர்ந்தார். உள்ளுக்குள் உதறல் இருந்தாலும் வெளியிலே வீரசவடால் அடித்தார். உடனடியாகக் கருணாநிதி மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி சிறையிலடைப்பதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க முடிவு செய்தார். அது திரும்பி வந்து தன் மண்டையையே தாக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. கருணாநிதியைக் கைது செய்வதன் மூலம் பழிவாங்குவது என்ற சபதத்தை நிறைவேற்றுவதோடு, அந்தச் சமயத்தில் ஆளுநர் உத்தரவு மூலம் தன் மீதான வழக்குகளை இரத்து செய்யவும் எண்ணியிருந்தார். அப்படிச் செய்தால் அதைக் கடுமையாக எதிர்க்கும் ஒரே கட்சியான தி.மு.க.வுக்குத் தக்க பதிலடி கொடுத்து சமாளிக்க முடியும் என்றும் நம்பினார். ''நீயே ஒரு ஊழல் குற்றவாளி, என் மீதான வழக்குகளை இரத்து செய்வதை எதிர்ப்பதற்கு உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது'' என்று பதிலடி தரலாம். ''ஊழல் குற்றவாளி கருணாநிதி போட்ட வழக்குகள் அரசியல் உள்நோக்கத்துடன் போடப்பட்ட பொய் வழக்குகள்'' என்று வாதாடி வலுச்சேர்க்கலாம். சிறையிலடைக்கப்பட்ட கருணாநிதி எதிர்ப்பு - கண்டன அறிக்கைக்கு மேல் வேறு ஒன்றும் செய்ய முடியாது - இவைதான் ஜெயலலிதாவின் திட்டம். ஆனால், விவகாரம் வேறு விதமாகத் திரும்பிவிட்டது.

குற்றப் புகார் தயாரிப்பதற்காகவே சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்ட ஜெயாவின் ஊழல் சகபாடி ஆச்சார்யலு, தமாகா - அதிமுக பொறுக்கி அரசியல்வாதிகளான வெற்றிவேல், ''கராத்தே'' தியாகராசன் ஆகிய மாநகர மன்ற உறுப்பினர்கள் வைத்திருந்த அரைவேக்காடு புகாரை வாங்கி ஜெயலலிதாவிடம் கொடுத்தார். சில மணி நேரங்களுக்குள்ளாகவே புகார் மனு, முதல் தகவலறிக்கை தயாராகி, அன்று நள்ளிரவே தேவாரத்தின் சீடரான குற்றப்புலனாய்வுத் துறை டி.ஐ.ஜி. முகமது அலி, சசிக


படிப்பகம்

www.padippakam.com

லாவின் உறவினரான பிரபாகரன் மற்றும் பிற கைதேர்ந்த விசுவாச அதிகாரிகள் கருணாநிதி வீட்டிற்கு ''வீடியோ'' கருவி சகிதம் அனுப்பப்பட்டனர்.

நள்ளிரவில் தொழில்முறை குற்றக் கும்பலைப் போல பூட்டை உடைத்துக் கொண்டு கருணாநிதியின் படுக்கை அறைக்குள் நுழைந்தது ஜெயாவின் போலீசுப் படை. சுதாரித்துக் கொண்ட கருணாநிதி, தனது மருமகனும் மத்திய மந்திரியுமான மாறனுக்கு தகவல் தரவே, அவர் தன் குடும்பம் மற்றும் சன் தொலைக்காட்சி படப்பிடிப்புக் குழுவோடு வந்திறங்கி விட்டார். கருணாநிதியும் மாறனும் கைதுக்கான ஆவணங்கள் விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே முகமது அலி - பிரபாகரன் படை தாக்குதலைத் துவங்கி விட்டது. கருணாநிதியை வன்முறையாகப் பிடித்து இழுத்துச் சென்றது, தடுக்க முயன்ற மாறனை இடித்துத் தள்ளியது. கருணாநிதியின் மனைவி ராஜாத்தி அம்மாள் இழுத்துத் தள்ளப்பட்டார்.

குற்றப்பிரிவு மற்றும் வேப்பேரி காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்ட கருணாநிதியை மீட்கவும், வாதிடவும் போன மாறனும், டி.ஆர். பாலுவும், கனிமொழியும் மட்டுமல்ல, செய்தி சேகரிக்கப் போன பத்திரிகையாளர்களும் தாக்கப்பட்டனர். கருணாநிதியை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட காரில் ஏறிய மாறன் குண்டுக்கட்டாக தூக்கிச் செல்லப்பட்டார். விடியும் வரை அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்ட கருணாநிதியைத் தகுந்த ஆவணங்கள் இல்லாமல் சென்னை மாநகர முதன்மை அமர்வு நீதிபதி முன்பு ஆஜர்படுத்தி, அவரோடு முன்னாள் தலைமைச் செயலர் நம்பியார், தொழில்நுட்ப ஆலோசகர் சீனிவாசன் ஆகியோரையும் சிறையிலடைக்கும் உத்திரவைப் பெற்றனர்.

மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி நீதிபதி போட்ட உத்தரவை மீறி நேரடியாக மத்திய சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்ட கருணாநிதி, சிறை வாசலிலேயே உட்கார்ந்து மறியலில் ஈடுபட்டார். அதற்குள் கருணாநிதி கைது சாட்சிகளை ''சன்'' தொலைக்காட்சியில் கண்ட தி.மு. கழக உடன்பிறப்புகள் சிறைச்சாலை முன்பு குவியத் தொடங்கி விட்டனர். அங்கே அவர்கள் மீது மிருகத்தனமாக போலீசு நாய்களின் வெறியாட்டம் நாள் முழுவதும் தொடர்ந்தது. அது மாநிலம் முழுவதும் பரவியது. கைதுக் காட்சிகளைக் கண்ட சிலர் மாரடைப்பாலும், சிலர் தீக்குளித்தும் மாண்டனர். சுமார் 25 ஆயிரம் பேர் சிறையிலடைக்கப்பட்டனர். சிறைகள் நிரம்பி வழிந்தன. நீரின்றி, உணவின்றி, படுக்க இடமின்றி அலைந்த கழகத்தவர்கள் அங்கும் அடித்து நொறுக்கப்பட்டனர்.

இதற்கிடையே ஸ்டாலினைத் தேடி ஜெயா ஏவிவிட்ட போலீசுப் படை மாறன், ஸ்டாலின் வீடுகளைச் சூறையாடியது. சொகுசாக வாழ்ந்து வந்த அக்குடும்பங்களுக்கு போலீசு என்றால் பாதுகாப்பு ஊழியம் செய்வது மட்டுமல்ல, சீருடை ரௌடிகளும் தான் என்பதைக் காட்டியது. தலைமறைவாகி இருந்த ஸ்டாலின் நீதிபதியிடம் சரணடைய, அவரை சென்னை சிறையிலேயே அடைக்கும்படி உத்திரவிடப்பட்டும், அதை மீறி மதுரைக்கு அனுப்பப்பட்டார்.



இதையெல்லாம் சன் தொலைக்காட்சி திரும்பத் திரும்ப ஒளி பரப்புவதும், ஜெயா தொலைக்காட்சி எதிர்ப்பிரச்சாரம் செய்வதும் தொடர்கிறது. சன் தொலைக்காட்சியைத் தடை செய்யப் போவதாக போலீசு ஆணையாளர் முத்துக் கருப்பன் மூலம் எச்சரித்தார் ஜெயலலிதா. உள்ளே புகுந்து நாசம் விளைவிக்கவும் போலீசை ஏவினார். அதற்குள் கருணாநிதிக்கு ஆதரவான அனுதாப அலை ஓங்கி வீசத் துவங்கிவிட்டது. பா.ஜ.க. - தி.மு.க. அணியினர் மட்டுமல்லாது, கட்சி சார்பற்றவர்களும், செய்தி ஊடகங்களும் கடும் கண்டனம் தெரிவித்தன. ஜெயலலிதா - போலீசின் செயலை நியாயப்படுத்த இயலாத நிலையில் அவரது கூட்டணியினரும் கண்டனக் கூப்பாட்டில் கலந்து கொண்டனர். வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் கூடுதலான பேரம் நடத்துவதற்கு வசதியாக இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்பதைத் தவிர ஜெயலலிதா அணியினருக்கு வேறு எந்த நோக்கமும் - மனித உரிமை, ஜனநாயகத்தின் மீது பற்றோ பாசமோ கிடையாது என்பதுதான் உண்மை.

தி.மு.க.வைக் கழட்டி விட்டுவிட்டு அதிமுக - பாமகவுடன் கூட்டு வைத்துக் கொள்வதா, இல்லையா? ஜெயலலிதா முதல்வராகப் பதவி ஏற்றது மீதான வழக்கில் அவரை ஆதரிப்பதா, எதிர்ப்பதா? என்று குழம்பிய நிலையில் இருந்த வாஜ்பாயி அரசு ஒரு முடிவெடுக்கும்படி இச்சம்பவம் நிர்பந்தித்து விட்டது. நாடு முழுவதும் எழுந்த கண்டன அலையைக் கண்டு கருணாநிதிக்கு ஆதரவான நிலையெடுத்தது. டெல்லியில் உடனடியாகக் கூடிய தேசிய ஜனநாயகக் கூட்டணியும் அமைச்சரவையும் தமிழ்நாட்டுக்கு தனித்தனி விசாரணைக் குழுக்கள் அனுப்பி, அறிக்கை பெற்றன. தமிழக அரசு தலைமைச் செயலருக்கும் ஆளுநர் பாத்திமா பீவிக்கும் காலக் கெடு வைத்து அறிக்கை அனுப்பும்படி உத்திரவிட்டுப் பெற்றது மத்திய அரசு.

ஜெயலலிதா முறைகேடாகப் பதவியேற்றதிலிருந்து, கருணாநிதி கைதையொட்டிய போலீசு வெறியாட்டம் வரை அவருடன் துணை நின்ற ஆளுநர் பாத்தமா பீவி பதவி நீக்கம் செய்யப்பட்டார். கருணாநிதியைக் கைது செய்த முறையில் மனித உரிமைகள் மீறிய போலீசு அக்கிரமமும், மத்திய அமைச்சர்களைக் கைது செய்ததன் மூலம் கூட்டரசு அரசியல் சட்டத்தையும், மொத்தத்தில் ஜனநாயக உரிமைகளையும் மீறியதாகக் கூறி மாநில அரசுக் கலைப்புக்கு நாடாளுமன்ற பெரும்பான்மை ஆதரவைப் பெற காங்கிரசை பா.ஜ.க. நாடியது. அது மறுத்து விடவே மாநில அரசை எச்சரிக்கும் தாக்கீது மட்டும் அனுப்புவது என்று முடிவானது. அந்த அறிக்கைகளை ஆதாரமாக வைத்து, பிரச்சினை கைமீறிப் போய்விட்டதை உணர்ந்த ஜெயா - சசி கும்பல் இரு மத்திய அமைச்சர்களையும் விடுதலை செய்து, அவர்கள் மீதான வழக்குகளையும் விலக்கிக் கொண்டது. எச்சரிக்கைத் தாக்கீது வருவது உறுதியான பிறகு, சிறையிலிருந்த கருணாநிதி உட்பட திமுக அணிகள்

**தொடர்ச்சி 17-ஆம் பக்கம்**


படிப்பகம்

www.padippakam.com

# அதிகார வர்க்கத்தின் நேர்மை - திறமை - நடுநிலைமை

# துடப்பத்திற்குப் பட்டுக் குஞ்சம்!

பாசிச ஜெயா கும்பல் பதவியைப் பிடித்தவுடன் தமிழகத்தில் மும்முரமாகத் தொடரும் நடவடிக்கைகள்: ஒருபுறம், கைதுகள் - எதிர்த்தரப்பினர் மீது அவதூறு - குற்றச் சாட்டுகள் - பழி வாங்குதல்; மறுபுறம், அதிகாரிகள் மாற்றம்.

ஒவ்வொரு முறையும் புதிய ஆட்சி பதவி ஏற்றவுடனேயே, தமக்கு விசுவாசமான அரசு உயர் அதிகாரிகளையும் போலீசு அதிகாரிகளையும் நியமித்துக் கொள்வது வழக்கம்தான். ஆங்காங்கே சில அரசு அதிகாரிகள், போலீசு அதிகாரிகளை மாற்றி விட்டுத் தமது விசுவாசிகளை நியமித்துக் கொண்டதும் இந்தச் சடங்கு முடிவடைந்து விடும். ஆனால், இப்போது பாசிச ஜெயா பதவியைப் பிடித்ததும் ஏறத்தாழ 125-க்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகளையும் போலீசு அதிகாரிகளையும் தூக்கியடித்துள்ளார். முப்பது மாவட்ட ஆட்சியாளர்களில் 25 மாவட்ட ஆட்சியாளர்களை மாற்றியமைத்துள்ளார்.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்கள் தி.மு.க.வினரோடு நெருக்கமாக இருந்தவர்கள் என்று பட்டியலிட்டு பல அதிகாரிகள் தூக்கியடிக்கப்பட்டுள்ளனர். வேறு சிலர் அதிகாரமில்லாத பதவிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதுதவிர, மற்றவர்களுக்கு மாற்றல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் கூட, மாற்று இடம் அறிவிக்கப்படாமல் ''கட்டாயக் காத்திருப்பு'' என்ற நிலையில் வைக்கப் பட்டுள்ளனர். இன்னும் சிலருக்கு ''உங்களுக்கான பணி உருவாக்கப்படும் வரை காத்திருத்தல்'' என்ற நிலையில் எந்தப் பதவியும் பணியுமின்றி வெறுமனே உட்கார வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி பாசிச ஜெயா கும்பல் தமக்கு விசுவாசமான அதிகார வர்க்க - போலீசு அமைப்பைக் கட்டியமைத்துக் கொண்டு மற்றவர்களைப் பந்தாடத் தொடங்கியதும் இதை நியாயப்படுத்த முடியாமல் முதலாளித்துவ அறிஞர்களும் ஓய்வு பெற்ற அதிகாரிகள் சிலரும் அங்கலாய்க்கின்றனர். ''பெரும்பான்மையினரான நடுநிலை அதிகாரிகளைத் தூக்கியடிப்பதும், கட்டாயக் காத்திருப்பில் வைப்பதும் நிதானமில்லாத நடவடிக்கையாகும். எல்லா அதிகாரிகளையும் அரசியல் கண்கொண்டு பார்க்கக் கூடாது. திறமையும் அனுபவமும் ஆற்றலும் கொண்ட நடுநிலையான அதிகாரிகளை எவ்வித நியாயமுமின்றித் தூக்கியடிப்பதால், அவர்கள் ஆர்வம் குன்றி விரக்தியடைவார்கள். இதனால் நட்டம் அதிகாரிகளுக்கல்ல; நாட்டுக்குத்தான்!'' என்று முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான சா. சுப்பிரமணியம், ஏ.கே. வெங்கட சுப்பிரமணியம் முதலானோரும் துக்ளக் ''சோ''வும் கட்டுரைகள் எழுதி பேட்டியளிக்கின்றனர். பத்திரிகைகளும் தடாலடியாக அதிகாரிகள் மாற்றப்படுவதை விமர்சித்து எழுதுகின்றன.



''அரசியல்வாதிகள்தான் மோசமானவர்கள்; ஊழலில் திளைப்பவர்கள். ஆனால், அதிகார வர்க்கத்தினர் அப்படிப் பட்டவர்கள் அல்ல. அதிகார வர்க்கத்தினர் படித்த மேதாவிகள். நாட்டை நிர்வகித்து வழிநடத்தும் மிக உயரிய பணியைச் செய்பவர்கள். அரசியல் குறுக்கீடுகள் இல்லாவிட்டால் நிர்வாகம் செம்மையாக நடைபெறும். அண்மைக் காலங்களில் அரசியல் குறுக்கீடுகள், நிர்ப்பந்தங்கள், பழிவாங்குதல்கள் அதிகரித்துவிட்ட போதிலும், அவற்றுக்கு வளைந்து கொடுக்காமல் நடுநிலையோடு - சட்டப்படி நேர்மையாகச் செயல்பட்டதாலேயே பல அதிகாரிகள் மக்களிடம் நல்ல பெயர் வாங்கியுள்ளனர். மக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்கள்தான் அதிகாரிகள். அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களைச் சுயமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக அதிகாரிகளைத் தூக்கியடிக்கக் கூடாது'' - இவைதான் இவர்கள் முன் வைக்கும் வாதங்கள்.

அதிகாரிகளைத் தூக்கியடிக்காமல், திறமையானவர்களைச் சரியாகப் பயன்படுத்தி, அரசியல் தலையீடுகள் இல்லாமல் சுதந்திரமாக அதிகார வர்க்கத்தைச் செயல்பட விட்டால், நிர்வாகம் சிறப்பாக மக்களுக்குச் சேவை செய்யும் என்று இவர்கள் நம்பச் சொல்கிறார்கள்.

ஆனால், இது அப்பட்டமான மோசடியே அன்றி வேறில்லை. இவர்கள் வாதிடுவதுபோல, அதிகார வர்க்கம் அரசியலுக்கு அப்பாற்பட்டதோ, நடுநிலையானதோ, புனிதமானதோ, மக்களுக்கும் பொறுப்பானதோ அல்ல. மக்களை இழிவாகக் கருதி ஒடுக்கும், சாதி-மதவெறி பிடித்த மிகப் பெரிய சுரண்டல் - ஊழல் நிறுவனம்தான் அது. நாட்டின் மிகக் கொடிய மக்கள் விரோத - ஜனநாயக விரோத நிறுவனமே, மக்கள் வரிப் பணத்தைத் தின்று கொழுக்கும் ஒட்டுண்ணி நிறுவனமே அரசு எந்திரம்தான்.

எப்படி திறமையாக ஊழல் செய்வது, அதை

www.padippakam.com

எப்படி மூடி மறைப்பது, கொள்ளையடித்த மக்கள் சொத்தையும் கருப்புப் பணத்தையும் எப்படிப் பதுக்குவது, வழக்கு - விசாரணை களிலிருந்து எப்படி தப்பிப்பது என்று ஓட்டுக் கட்சித் தலைவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதே அதிகார வர்க்கம்தான். தி.மு.க. - அ.தி.மு.க., காங்கிரசு - பா.ஜ.க. என்று ஒரு தரப்புக்கு விசுவாசமாகச் செயல்பட்டு பத விகள், சலுகைகள் - சன்மானங்களைப் பெறு வது; தமது ஊழல், கொள்ளை - கிரிமினல் குற்றங்களை மூடி மறைக்கவும் தண்டனையி லிருந்து தப்பிக்கவும் ஒரு தரப்புக்கு விசுவா சமாகச் செயல்படுவது; புதிய துறைகளை உருவாக்கி அரசு எந்திரத்தை ஊதிப் பெருக்க வைத்து தமது வாரிசுகளுக்கும் எடுபிடிக ளுக்கும் பதவிகள் - ஆதாயங்களைப் பெறு வது; அதிகாரப் போட்டியில் எதிர்த்த ரப்பைப் பழிவாங்கு வது என்று ஏற்கனவே அரசு எந்திரம் புழுத்து நாறுகிறது. இந்த அராஜகத்தை மேலும் ஒருபடி தீவிரமாக்கி, அரசு எந்திரத்தின் யோக்கியதையைச் சந்திசிரிக்க வைத்து விட்டார், பாசிச ஜெயா.

இந்த இலட்சணத்தில், அதிகார வர்க்கம் அரசியல் தலையீடு இன்றி சுதந்திரமாகச் செயல்பட்டால், நிர்வாகம் செம்மையாக இயங்கும் என்று இவர்கள் பிரமையூட்டு கிறார்கள். ஓட்டுக் கட்சிகள் மீதும் நாடாளு மன்ற அமைப்பு மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில், அதிகார வர்க்கத்தைக் காட்டி இன்றைய அரசியல மைப்பு முறையை நியாயப்படுத்தவும் நம்பிக்கையூட்டவும் கேடாக முயற்சிக்கி றார்கள். திறமைசாலிகள் என்று இவர்களால் போற்றப்படுபவர்கள் எல்லாம், மக்கள் போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கிய தேவாரம், ஜாங்கிட், சைலேந்திரபாபு முதலா னவர்கள்தான். மிகச்சாதாரண ஜனநாயக உரி மைக்கான போராட்டங்களைக் கூட காட்டுமி ராண்டித்தனமாக நசுக்கி, 'சட்டம் - ஒழுங்கை' நிலைநாட்டுபவர்கள் தான் இவர்களால் பாராட்டப்படும் நேர்மையான அதிகாரிகள். ஒரு ரௌடிக் கும்பலுக்கு ஆதரவாக மற்றொரு கும்பலை ஒடுக்குவதும், ஒரு சாராய கும்பலுக்கு ஆதரவாக மற்றொரு சாராய கும்பலை அடக்கி பெயர் வாங்கு வதும் தான், இவர்களால் பாராட்டப்படும் திறமையான போலீசு அதிகாரிகளின் துணிச்சலான நடவடிக்கைகள்!

இவை எல்லாம் ஒருபுறமிருக்கட்டும். வட சென்னையில் ரௌடிகளின் கொட்டத்தை ஒடுக்கிய துணிச்சலான போலீசு அதிகாரி என்று முதலாளித்துவப் பத்திரிகைகளால் பாராட்டப்பட்ட புதிய கமி ஷனர் முத்துக் கருப்பன்தான், பாசிச ஜெயா கும்பலின் உத்தரவுப்படி, எதிர்க்கட்சித் தலை வரான கருணாநிதியை ஒரு கிரிமினலைப் போல அடித்து இழுத்துச் சென்று சிறையில டைக்க ஆணையிட்டவர். கருணாநிதியைக் கைது செய்த காட்சியைத் தொடர்ந்து ஒளிப ரப்பினால், சன் டி.வி. மீது நடவடிக்கை எடுப்பேன் என்று கருத்து சுதந்திரத்தின் கழுத்தை நெறிக்கக் கிளம்பியவர். கருணா நிதி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நடந்த கடையடைப்புப் போராட்டத்தை ஒடுக்க கண்டதும் சுட உத்தரவு பிறப்பித் தவர். இதுதான் முதலாளித்துவ அறிஞர் களால் ஏற்றிப் போற்றப்படும் திறமையான அதிகாரிகளின் யோக்கியதை!

அப்படியே நடுநிலையாகவும் துணிச்ச லாகவும் செயல்பட்டால் என்ன கதி ஏற்படும் என்பதை தூசி கிராமத்தில் சாராய கும்ப லுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த போலீசு ஆய்வாளர் அரிதாசைக் கேட்டுப் பாருங்கள். அவ்வளவு ஏன்? டான்சி நில ஊழல் வழக்கில் பாசிச ஜெயாவுக்கு எதிராக தைரி யமாகச் சாட்சியமளித்து தண்டனை கிடைக்க வழிவகை செய்தவரும், ஐ.ஏ.எஸ். அதிகா ரிகள் சங்கத் தலைவராகச் செயல்பட்டவரு மான சிரியாக், தேர்தல் முடிவுகள் வெளி வரத் தொடங்கியதும் விருப்ப ஓய்வில் பணி யிலிருந்து விலகி குடும்பத்தோடு தமிழ கத்தை விட்டே ஓடிவிட்டார். துணிச்சலாகச் செயல்பட்ட அதிகாரிக்கே இந்த கதி என்றால், மற்றவர்கள் நடுநிலையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட ஏதாவது அடிப் படை இருக்கிறதா?

இப்படி ஆளும் கும்பலுக்கும் சாதி - மத வெறியர்களுக்கும் ஊழல் பெருச்சாளிக ளுக்கும் விசுவாசமாக உள்ள அதிகார வர்க்கமும் போலீசும் நீதித்துறையும் நடுநி லையானதாக, அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்படுவதாக நம்பி ஏமாற முடியுமா? ஒரு சில அதிகாரிகள் தவறிழைத்திருக் கலாம்; ஆனால் ஓட்டு மொத்த அரசு எந்திரம் அப்படியல்ல; இன்னமும் நேர்மையான வர்கள், நடுநிலையானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று நரகலில் நல்லரிசியைத் தேடத்தான் முடியுமா?

மக்கள் விரோத, மிகப் பெரும் ஊழல் - கிரிமினல் கும்பலான இந்த ஒடுக்குமுறை அரசு எந்திரத்தைக் கொண்டு மக்களுக்கு ஒருபோதும் சேவை செய்ய முடியாது. அதை சீர்படுத்தி மாற்றியமைத்து விடவும் முடியாது. ஆளுங் கும்பலின், சாதி - மத வெறியர்களின் கைப்பாவையாகிவிட்ட, மக்கள் வரிப்பணத்தை உறிஞ்சிக் கொழுக்கும் இந்த ஒட்டுண்ணிக் கூட்டத்தின் மீது நம்பிக்கை வைத்து, இனி உழைக்கும் மக்கள் ஏமாறவும் முடியாது.

• குமார்

# மேடைக்கு ஒழுக்கம்! பிழைப்புக்கு ஊழல்!

மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள நாக்பூர் மாநகராட்சியில், இலஞ்ச ஊழல் மோசடி களில் ஈடுபட்ட 76 மாநகர மன்ற உறுப்பி னர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டுள்ளனர். மாநகராட்சியின் துணை மேயர் உள்ளிட்டு இப்படி பெரும ளவு உறுப்பினர்கள் ஊழலில் சிக்கிக் கைதா வது இந்திய வரலாற்றில் இதுவே முதன்மு றையாகும்.

நாக்பூர் மாநகராட்சியில் இலஞ்ச ஊழல் புழுத்து நாறுவதாக வந்த புகார்கள் - குற்றச் சாட்டுகளைத் தொடர்ந்து, மகாராஷ்டிர அரசு ஒரு விசாரணைக் கமிசனை அமைத்து ஆராய்ந்தது. மாநகராட்சிப் பள்ளிகளுக்கான விளையாட்டு - உடற்பயிற்சி சாதனங்களை வாங்கியதில் ரூ. 2.38 கோடி ஊழல், ஒப்பந் தக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்து அடித்த கொள்ளை, உரிய வருவாய் இல்லாத நிலையில் சம்பளங்கள் - சலுகைகளை அதி கரித்துக் கொண்டு மாநகர் மன்ற உறுப்பி னர்கள் உல்லாசத்தில் மிதப்பது, குடிநீர், துப்பு ரவு, குப்பை அகற்றுதல், சாலை வசதி, சுகா தாரப் பணி, மருத்துவம் - என அனைத் திலும் கமிசன் என்று ரூ. 70 கோடிக்கு மேல் மாநகர மன்ற உறுப்பினர்கள் கூட்டாகச் சுருட் டியதாக விசாரணை கமிசன் தனது அறிக் கையில் குற்றம் சாட்டியுள்ளது. மேலும், ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட இந்த மாநக ராட்சியைக் கலைக்குமாறும், ஊழலில் ஈடு பட்ட மாநகர் மன்ற உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து மகாராஷ்டிர காங்கிரசுக் கூட்டணி அரசு, நாக்பூர் மாநகராட்சியின் மன்ற உறுப்பினர்கள் 76 பேர் மீது கிரிமினல் வழக்கு தொடுத்து பிணையில் வெளிவர முடியாமல், சிறையிலடைத்துள்ளது. இவர்கள் தவிர மாநகராட்சி கமிசனர் மற்றும் சில உயரதிகாரிகளையும் பணி நீக்கம் செய்து கைது செய்துள்ளது.

28 பெண் உறுப்பினர்கள், துணை மேயர் உள்ளிட்டு கைது செய்யப்பட்ட அனைவ ருமே இந்துவெறி பாரதீய ஜனதா கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சியான சமதா லோக் மன்ச் கட்சியைச் சேர்ந்தவர்கள். நாக்பூர் மாநகராட்சியை பா.ஜ.க. கூட்டணி கைப்பற்றி இருப்பதும் இதுவே முதன்முறை யாகும். காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் புகுந்த கதையாக, பதவியைப் பிடித்ததும் இந்த உத்தம சீலர்கள் ஊழலில் ஊறித் திளைத்து இப்போது சந்தி சிரிக்கிறார்கள்.

இந்து வெறியர்களின் தாய் அமைப் பான ஆர்.எஸ்.எஸ்-இன் தலைமைக் குருபீ டமும், ஆர்.எஸ்.எஸ்.-ஐ நிறுவி இயக்கி வரும் சித்பவன பார்ப்பனர்களின் கோட்டை யுமான நாக்பூரிலேயே பா.ஜ.க.வின் யோக்கி யதை இவ்வளவுதான். இந்த இலட்சணத்தில், ஒழுக்கமும் கட்டுப்பாடும் நேர்மையும் கொண்ட கட்சிதான் பா.ஜ.க. என்று இந்து வெறியர்கள் செய்துவரும் பிரச்சாரத்தை இனியும் நம்பி ஏமாறத்தான் முடியுமா?


படிப்பகம்

www.padippakam.com

# சட்ட விரோதக் கொள்ளையனைத் தேடும் சட்டபூர்வ கொலைகாரர்கள்

சந்தன மரங்களையும் யானைகளைக் கொன்று தந்தங்களையும் வெட்டிக் கடத்தி விற்றது; நூற்றுக்கும் மேற்பட்டவர்களைப் படுகொலை செய்தது; முக்கியப் பிரமுகர்களைக் கடத்தி, பணயக் கைதிகளாக வைத்து மிரட்டிப் பணம் பறித்தது போன்ற பல கிரிமினல் குற்றங்களைப் புரிந்து விட்டு, காட்டரசனைப் போல மேற்கு மலைகளில் திரிந்து கொண்டிருக்கும் பயங்கரக் குற்றவாளி வீரப்பன். அந்த வீரப்பனைப் பிடிப்பதற்கு மூவாயிரம் அதிரடிப் படை போலீசுடன் அமாவாசை தினத்தன்று காட்டிற்குள் நுழைந்திருக்கிறார் வால்டர் ஐசக் தேவாரம், தமிழகப் போலீசின் முன்னாள் பொது இயக்குநர்.

வில்லத்தனமான கதாநாயகர்கள் அல்லது கதாநாயகர்களாகத் தோன்றும் வில்லன்கள் வெற்றியும் புகழும் பெறுவது இன்றைய சினிமா - கதைகளில் மட்டுமல்ல, நிஜ வாழ்விலும் உண்டு என்பதற்கு ஜெயலலிதாவோடு வீரப்பன் - தேவாரமும் சாட்சியமாக விளங்குகின்றனர். நிரூபிக்கப்பட்ட இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றவாளி ஜெயலலிதா, தேர்தல்களில் வென்று ஆட்சியைப் பிடித்துள்ளார். யாவரும் அறிந்த பிரபல கடத்தல் - கொலைகாரன் வீரப்பன் தமிழினப் போராளிகளின் தலைவனாக அவதாரம் எடுத்திருக்கிறார். இந்த வரிசையில், இவர்களுடன் தொடர்புடைய தேவாரமும் புறப்பட்டிருக்கிறார். காக்கிச் சட்டைக்குள் ஒளிந்து கொண்டு மிக அதிக அளவு படுகொலைகள் செய்த, மிக அதிக அளவு பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான ஒரே போலீசு அதிகாரிதான் இந்த தேவாரம். அதனால் தானோ என்னவோ தமிழகப் போலீசில் பெரும்பான்மையினரின் கதாநாயகனாக இவர் மதிக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

''ஓய்வு பெற்ற பின்னும் சேமிப்புப் பணத்தைக் கொண்டு பிள்ளை - குட்டியோடு நிம்மதியாக வாழ்வதற்குப் பதிலாக, தனது உயிரையே துச்சமாக மதித்து கொடிய சமூக விரோதி வீரப்பனைப் பிடிப்பதற்கு தானே முன் வந்திருக்கிறார் தேவாரம்'' என்று அவரது ''உறுதியை, துணிவை, சமூகப் பொறுப்பை'' அவரது விசிறிகள் பாராட்டுகின்றனர். இல்லை ஓய்வு பெற்ற பின்னும் தேவாரத்தின் அதிகார வெறி, கொலைவெறி, பாலியல் வெறி அடங்கவில்லை; அதற்கெல்லாம் தீனி தேடிப் புறப்பட்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். தேவாரத்தின் கடந்தகால நடத்தையும் இன்றைய பேச்சும்தான் இதற்கு சாட்சியம்.

''சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு முந்தைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் இரண்டு தரப்பிலும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பதே இதற்கு ஆதாரம். நான் அதிரடிப்படைப் பொறுப்பாளராக இருந்தபோது நூறு பேருக்கு மேலிருந்த வீரப்பன் கும்பலை வெறும் ஐந்து பேராகக் குறைத்து விட்டேன்'' என்ற தேவாரத்தின் பேச்சில் கொலைவெறி கொப்பளிப்பது தெரிகிறது. உயிர்ச்சேதம் ஏற்படவேண்டும் என்பதுதான்.தேவாரத்தின் அகராதியில் உரிய நடவடிக்கை. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அதிரடிப்படைத் தலைவராக் இருந்தபோது வீரப்பனை காட்டச் சொல்லி அப்பாவி இளைஞர்களைப் பிடித்துப் போய் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றார்; மலைவாழ் பெண்களைக் கடத்திக் கொண்டு போய், நிர்வாணப்படுத்தி, பாலியல் வன்முறை செய்தார்; மலைக் கிராமங்களை சூறையாடினார் என்கிற தேவாரத்தின் வில்லத்தனங்களுக்கு ஜெயலலிதா அளித்திருக்கும் பரிசுதான் ஓய்வு பெற்ற பின்னும் அதிரடிப் படைத் தலைவர், அதிகாரபூர்வமற்ற முறையில் போலீசுத் துறை ஆலோசகர் ஆகிய பதவிகள்.

முன்பு தமிழகப் போலீசுத்துறை பொது இயககுநராகவும் அதிரடிப்படைத் தலைவராகவும் இருந்த தேவாரம், விடுமுறைக் கால வேட்டைக்குப் போய் வருவதைப் போலத்தான் வீரப்பனைத் தேடும் வேலையில் ஈடுபட்டார். அங்கு வேட்டையாடியதும் வீரப்பன் கும்பலை அல்ல; அப்பாவி இளைஞர்களையும் பெண்களையும்தான். காட்டிலிருந்து திரும்பியதும் நாட்டில் அவர் செய்ததெல்லாம் ஜெயா - சசி கும்பலுக்கு பாதபூசைதான். ஜெயலலிதா வளர்ப்பு மகன் திருமணத்தின்போது அரசியாருக்கு நடைபாவாடை விரித்ததும் விருந்தினருக்கு பந்திப் போட்டுப் பரிமாறியதும் தேவாரத்தின் இயக்கத்தில் தமிழகப் போலீசின் சாதனைதான். அவருடைய பொறுப்புக் காலத்தில்தான் தராசு பத்திரிகை முதல் ''தாஜ்'' விடுதி வரை அதிமுக கிரிமினல்களின் தாக்குதல்கள் பகிரங்கமாக நடந்தன. ''பாக்சர்'' வடிவேலு, ''பங்கு'' குமார், தாதா வீரமணி போன்ற நகர்ப்புற குற்றக் கும்பல் தலைவர்கள் செழித்து வளர்ந்தார்கள். ஆகவே, ''தேவாரம் ஒரு திறமையான, நேர்மையான, துணிச்சலான போலீசு அதிகாரியாக இருந்தார்; வீரப்பனைப் பிடிப்பதற்கு பொருத்தமானவர் அவர்தான்'' என்பது அதிகாரத்தில் உள்ள கிரிமினல் கும்பல் பரப்பும் திட்டமிட்ட பொய்ச்செய்தி.

துப்பாக்கிச் சுடுவோர் சங்கத் தலைவரான தேவாரம், துப்பாக்கிச் சுடுவதில் பட்டம் பெற்றவர். மனிதர்களைச் சுடுவது அவருக்கு ஒரு விளையாட்டு. அதுவும் தயார் நிலை இலக்கு வைத்துச் சுடுவதில் வல்லவர். அப்படித்தான் நக்சல்பாரிகள், வீரப்பன் கூட்டாளிகள் என்று போலீசார் பிடித்து வருபவர்களைக் கட்டி வைத்துச்



**வீரப்பன் வேட்டை என்ற பெயரால் அப்பாவி மக்களை வேட்டையாடக் கிளம்பிவிட்ட தேவாரமும், அவரது சக அதிகாரிகளும்.**

சுட்டுக் கொன்று ''சாம்பியனும்'' ஆனார். அதோடு சாய்ந்த மரத்தில் குருட்டுத்தன மாகக் கல்லெறிபவனைப் போல நிராயுதபா ணியான மீனவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் நிறைந்த கூட்டத்தின் மீது கண்ணை மூடிக் கொண்டு சுட்டு வீழத்தியவர், தேவாரம். இப்படிப்பட்ட, துப்பாக்கி விசை அழுத்து வதை வேடிக்கையாகக் கொண்டவரிடம், வக்கிரமாகக் கொக்கரிப்பவரிடம் வீரப் பனைத் தேடிப் பிடிக்கும் பொறுப்பு ஒப்ப டைக்கப்பட்டிருக்கிறது. வேறு வகையில் சொல்வதென்றால், மேற்கு மலைத்தொடர் காடுகள், ஆளும் சர்வாதிகாரத்திடம் ஒப்ப டைக்கப்பட்டிருக்கிறது.

''வீரப்பனைச் சரணடைய வைப்பதில் யாருடைய உதவியையும் ஏற்போம்'' என்று முதல்நாள் சொல்கிறார் இந்த தேவாரம். அதற்குத் தயார் என்று முன் வந்தவரை அடுத் தநாள் கைது செய்கிறார், அதே தேவாரம். வீரப்பன் ஒளிந்து திரிவதாகக் கூறப்படும் மேற்கு மலைக் காடுகளிலும், அவற்றை ஒட்டியுள்ள வட்டங்களிலும் உள்ள போலீசு நிலையங்களின் நிர்வாக அதிகாரம் தேவாரம் தலைமையிலான அதிரடிப்படை யிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டிருக்கி றது. வீரப்பன் கும்பல் இதுவரை புரிந்ததாகக் கூறப்படும் குற்றங்களைவிட, பல மடங்கு அதிகமான சமூக விரோதக் கிரிமினல் குற்றங் களைச் சீருடைப் படையினர், கேள்வி முறை யின்றிச் செய்வதற்கு சட்டபூர்வ அதிகாரத் துடன் இறக்கிவிடப்பட்டிருக்கிறது. பாசிச ஜெயா ஆட்சியின் பாதுகாப்பும் ஆதரவும் வழங்கப்பட்டிருக்கிறது. நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடக்கைக்கு ஒரு ஆடு கேட்கத் தானே செய்யும்.

**காக்கிச் சட்டைக்குள் ஒளிந்து கொண்டு மிக அதிக அளவு படுகொலைகள் செய்த, மிக அதிக அளவு பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான ஒரே போலீசு அதிகாரிதான் இந்த தேவாரம்.**

● ஆர்.கே.

# கிறித்தவர்கள் வேட்டை - ஆர்.எஸ்.எஸ்.ஸின் 'இரத்த வெறி'

கடந்த மே மாதம் பதினெட்டாம் தேதி கிறித்துவரான தயூத்பாய் சோலன்கியின் உடல் இறுதி சடங்கிற்காக எடுத்துச் செல்லப் பட்டது. குஜராத் மாநிலம் கேதா மாவட் டத்தில் கபாடுவன்ச் நகரில் இரயிலடி அருகே வழக்கமாய் புதைக்கும் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றபோது அங்கே ஆர்.எஸ்.எஸ்.இன் உள்ளூர் தலைவன் அருண் சுதர் மற்றும் இந்துமதவெறி குண்டர்கள் தகராறு செய்தனர். 'இது வஹிரி இனத்தைச் சேர்ந்த இந்துக்களுக்குச் சொந்த மான இடம்; இங்கு கிறித்துவர்களைப் புதைக்க அனுமதிக்க மாட்டோம்' என்பது அவர்கள் கூறும் காரணம். ஆனால் அந்த இடம் ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலி ருந்தே கிறித்துவர்களின் கல்லறை பூமியா கத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்கின்றனர் கிறித்தவர்கள். பிரச்சனை மேலும் முற்றிக் கொண்டு போகவே போலீசு அங்கு வந்து கண்ணீர் புகை குண்டு வீசியும், தடியடி நடத்தியும் கூட்டத்தைக் கலைத்தது. எனினும் சோலன்கியின் ஈமச் சடங்கு அங்கு நடைபெறவில்லை. மறுநாள் எழுபது கிலோ மீட்டர் தூரத்திலிருந்த அகமதாபாத்திற்கு எடுத்துச் சென்று புதைத் தனர். இச்சம்பவத்தை யொட்டி அருண் சுதரும், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களும். அருண் சுதரும், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களும். கைது செய்யப்பட்டனர். ஆனால் அருண் சுதர் உடனடியாக பிணை யில் வெளிவந்துவிட் டான். இதற்கு முன்பே கிறித்துவர்கள் மீதான தாக்குதல் குஜராத் முழு வதும் உச்சநிலையிலி ருந்த 1998 -ஆம் ஆண்டு இதே நகரில் லசாருங்பாய் சாமுவேல் என்ற கிறித்தவரின் புதைக்கப் பட்ட உடலைத் தோண்டியெடுத்து தேவா லய வளாகத்தினுள் வீசியெறிந்தனர் இந்து மத வெறியர்கள்.

குஜராத்தில் மட்டுமல்ல; வடகிழக்கு மாநிலங்களான அசாமிலும், மணிப்பூரிலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 'வைஷ்ணவர்கள்' என்று தம்மைக் கூறிக் கொண்ட வைஷ்ணவ மத நம்பிக்கைகளைப் பாதுகாக்கும் அடிப்படைவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் இம்பாலில் ஆறு கிறித்துவப் பாதிரியார்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவம் ஏற்படுத்திய அதிர்வுகள் அடங்கும் முன்பாகவே மே மாதம் பதி னைந்தாம் தேதி இம்பாலிலிருந்து 25 கி.மீ. தூரமிருக்கும் மஜூலியில் மூன்று பாதிரியார் களைத் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்துள்ளனர் விசுவ இந்து பரிசத் குண்டர்கள்.

அசாமிலும் மணிப்பூரில் கிறித்துவ நிறு வனங்களுக்கு எதிரான வெறியூட்டும் பிரச் சாரம் ஆர்.எஸ்.எஸ்-ஆல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அசாமில் உள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கிறித்துவ நிறுவ னங்களை ''மேற்கு நாடுகளின் காலாட் படை'' என்று வர்ணிக்கிறது. அசோம் சத்ர மகாசபா என்ற வைஷ்ணவத் துறவிகளை ஒருங்கிணைக்கும் அமைப்பு ''தேவால யங்கள் அசாமில் அரசியல், சமூக துறை களில் உள்ள பிரிவினைவாத சக்திகளோடு கை கோர்த்துக் கொண்டுள்ளன'' என்று குற்றஞ்சாட்டின.

இப்படி தொடர்ந்து அறிக்கைகள், அவ தூறு பிரச்சாரங்கள் மூலம் தாக்குதலுக்கான முன்தயாரிப்புகளைச் செய்து வந்தனர் இந்து மதவெறி அமைப்பினர். இந்நிலையில் வைஷ்ணவர்களின் பாரம்பரிய ஊரான மகூ லியில் கிறித்தவ நிறுவனங்கள் நுழைவதைத் தடுக்கக் கிளம்பியது விசுவ இந்து பரிசத். அதற்கு எச்சரிக்கை விடும் முகமாகவே திட்ட மிட்டே நிகழ்த்தப்பட்டதுதான் மூன்று பாதிரி யார்களின் படுகொலை.

இப்படி நாடு முழுவதும் சிறுபான்மை யினர் மீதான இந்துமத வெறியர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஆனால் பாரதீய ஜனதா கட்சி தன் இந்துத்துவக் கொள்கைகளைக் கைவிட்டுவிட்டதா கவும் தேசிய சனநா யகக் கூட்டணியின் குறைந்தபட்ச செயல் திட்டத்தையே கடைபி டிப்பதாகவும் கூறு வதை அப்படியே நம்பச் சொல்கின்றன தி.மு.க.வும் அதன் கூட்டணிகளும்.

**மணிப்பூரில் படுகொலை செய்யப்பட்ட பாதிரிகள்:**
**இந்து மதவெறியர்களின் தொடரும் அட்டூழியம்.**




படிப்பகம்

www.padippakam.com

# தவிக்குது சென்னை நகரம் கொழிக்குது தண்ணீர் வியாபாரம்

சென்னை நகரம் கடந்த ஒரு மாத காலமாக கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை அனுபவித்து வருகிறது. கடந்த இரு ஆண்டுகளாகவே பருவமழை சரிவரப் பெய்யாமல் பொய்த்துப் போனதால், இப்படிப்பட்ட குடிநீர்த் தட்டுப்பாடு சென்னை நகர மக்களைத் தாக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். கோடையும், தேர்தலும் சேர்ந்து வந்ததால், இந்தத் தட்டுப்பாடு முன் கோடையில் பெரிய அளவில மக்களைப் பாதிக்கவில்லை. மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், தி.மு.க.விற்கு ஓட்டுக் கிடைக்காது என்ற பயத்திலேயே முந்தைய தி.மு.க. அரசு நிலைமை கைமீறிப் போகாமல் சமாளித்தது. பதவியேற்றுள்ள அ.தி.மு.க. அரசோ, "இந்தப் பஞ்சத்திற்கு முந்தைய அரசுதான் காரணம்" என்று கூறி, மக்களின் கோபத்தில் இருந்து புத்திசாலித்தனமாகத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது.

ஓரிரு மாதங்களுக்கு முன்பாக, தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அதைச் செய்வோம், இதைச் செய்வோம் எனச் சவடால் அடித்த ஓட்டுக் கட்சிகள், குறிப்பாக, இன்று எதிர்க் கட்சிகளாக இருப்பவை, சென்னை நகர மக்களை வாட்டி வதைக்கும் இந்தப் பிரச்சினைக்காக ஒரு போராட்டம் கூட நடத்த முன்வரவில்லை; 'மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடு' எனத் தட்டி கட்டுவதையே புரட்சிகர நடவடிக்கையாகக் காட்டிக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'கள் கூட, கூட்டணி என்ற பிளாஸ்திரியை வாயில் ஒட்டிக் கொண்டு விட்டார்கள்.

ஆனால், சென்னை நகர மக்களோ, எதிர்க்கட்சிகளைப் போல ஜெயாவின் பாசிசத் திமிரைக் கண்டு ஒடுங்கிப் போகவுமில்லை; கூட்டணிக் கட்சிகளைப் போல சோரம் போகவுமில்லை. குடிநீர் கேட்டு சென்னையில் தினம் தினம் நடைபெற்று வரும் சாலை மறியல் போராட்டங்களைக் கண்டு அரண்டு போய் நிற்கிறது அதிகார வர்க்கம்.

சென்னைக்கு நெய்வேலியில் இருந்து தண்ணீர், ஈரோட்டில் இருந்து தண்ணீர், மேட்டூரில் இருந்து தண்ணீர் என்ற அதிரடி நடவடிக்கைகளின் மூலம், அ.தி.மு.க. அரசு குடிநீர்த் தட்டுப்பாடை இதோ தீர்த்துவிடப் போகிறோம் என்பது போல காட்டிக் கொள்கிறது. ஆனால், உண்மையென்ன? சென்னைக்கு நாளொன்றுக்கு 25 கோடி லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. மாநகர குடிநீர்த் துறையால் 16 கோடி லிட்டர் தண்ணீர்தான் வழங்க முடிகிறது. அதே சமயம், 9 கோடி லிட்டர் பற்றாக்குறையைப் போக்க, நெய்வேலி மற்றும் ஈரோடு நகரங்களில் இருந்து தருவிக்கப்படும் குடிநீரின் அளவோ வெறும் 1.1 கோடி லிட்டர்தான். இது, யானைப் பசிக்கு சோளப் பொறியைப் போன்றது எனச் சொல்லத் தேவையில்லை.

இந்த அதிரடி நடவடிக்கைகளின் மூலம் தன்னை மக்கள் நல விரும்பியாகக் காட்டிக் கொள்ளும் ஜெயா, இப்பிரச்சினையை வைத்து 'அரசியல்' பண்ணவும் தவறவில்லை. "சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரே வரவில்லை" என்ற குற்றச்சாட்டை எடுத்து வீசிய அவர், "தி.மு.க.வினர் சாலை மறியலைத் தூண்டி விடுகின்றனர்; கூடுதல் தண்ணீர் வேண்டும் என்பதற்காகவே மக்கள் சாலை மறியல் நடத்துகின்றனர்" என்று வாய்க்கொழுப்பெடுத்து பேசினார். தி.மு.க., சென்னையில் தான் வென்ற தொகுதிகளில் குடிநீர் வழங்கப்படாமல் மக்கள் பழிவாங்கப்படுவதை எதிர்த்துப் போராடாமல், ஜெயாவோடு வெறும் அறிக்கைப் போர் நடத்தி முடங்கிவிட்டது. இதன் மூலம், தனது அரசியல் கையாலாகத்தனத்தை வெளிக் காட்டிக் கொண்டது.

இப்படி முட்டி மோதிக் கொள்ளும் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இக்குடிநீர்த் தட்டுப்பாடுக்கான உண்மையான காரணத்தை மறைப்பதில் மட்டும் ஒத்துப் போகின்றன. குடிநீரை லாரியில் எடுத்து வருவ்தால் நடக்கும் ஊழல் - அதிகார முறைகள் பற்றி வெளிச்சம் போட்டுக் காட்டும் பத்திரிகைகள், உண்மைக் காரணத்தை முழுமையாகச் சொல்லாமல் மழுப்பி விடுகின்றன.

சென்னையில் நாளொன்றுக்கு வழங்கப்படும் 16 கோடி லிட்டர் குடிநீரில், சரிபாதியளவு மக்களின் குடிநீர் தேவைக்காக வழங்கப்படுவதில்லை. தொழிற்சாலைகள், ஐந்து நட்சத்திர விடுதிகள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் கிட்டதட்ட 8 கோடி லிட்டர் நீரைத் தங்களின் வியாபாரத் தேவைக்குப் பயன்படுத்துகின்றன.

"குடி தண்ணீர் வாரிய அதிகாரிகளுக்கும் லாரி ஓனர்களுக்கும் ஒரு அன்டர்ஸ்டாண்டிங் இருங்குங்க. பொது மக்களுக்காகத் தெருவுக்குக் கொண்டு போற குடி தண்ணீர் லாரியை அதிகாரிகளுக்கு வேண்டிய சொந்த பந்தங்களுக்கு, ஓட்டலுக்கு ஸ்பெஷலா அனுப்பி வைக்கிறாங்க" எனக் குடிதண்ணீர் லாரி ஓட்டுநர்கள் உண்மையைப் புட்டு வைக்கிறார்கள்.

எந்த நீரை மக்கள் குடிப்பதற்குப் பயன்படுத்துகிறார்களோ, அந்த நீரை ஐந்து நட்சத்திர விடுதிகளில் குளிப்பதற்கும், 'கால் கழுவுவதற்கும்' பயன்படுத்துகிறார்கள். ஏழை, நடுத்தர மக்களுக்கு குழாயின் மூலமும், லாரிகள் மூலமும் குடிநீர் வழங்குவதில் கட்டுப்பாடுகள் விதிக்கும் குடிநீர் வாரியம், தனியார் நிறுவனங்கள் குடிநீரைத் தாராளமாக விரயம் செய்வதைத் தெரிந்தே அனுமதிக்கிறது.

தாராளமயத்திற்குப் பின் சென்னையில் விஜயசாந்தி, ஆஸ்கர், அப்பல்லோ,

**கடற்கரையில் குழி தோண்டி தண்ணீர் எடுத்துச் செல்லும் சென்னை நகர மக்கள்.**




படிப்பகம்

www.padippakam.com



குடிநீர் கேட்டு சென்னை அண்ணாசாலை - நந்தனம் சந்திப்பில் நடந்த சாலை மறியல்.

ஜீரோ-பி எனப் பல தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு குடுவைக் குடிநீர் வியாபாரத்தில் குதித்துள்ளன. இந்நிறுவனங்கள் தங்களின் வியாபாரத்துக்குத் தேவைப்படும் நீரை, சென்னையைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் இருந்துதான் உறிஞ்சி எடுக்கின்றன. தனியார் நிறுவனங்கள் தண்ணீரை பாட்டில்களிலும், கேன்களிலும் அடைத்து விற்கிறதென்றால், சென்னை குடிநீர் வாரியம் தன் பங்குக்கு லாரி லாரியாகத் தண்ணீரை மேட்டுக்குடி கும்பலுக்கு விற்கிறது. இந்தத் தண்ணீர் விற்பனை, எத்தகைய குடிநீர்ப் பஞ்சமும் மேட்டுக் கும்பலைத் தாக்காது என்ற நிலையை உத்திரவாதப்படுத்தி விட்டது.

இது ஒருபுறமிருக்க, இப்பொழுது சென்னையைச் சுற்றி கனிஷ்கா, எம்.ஜி.எம்., வொண்டர் லாண்ட் என இரண்டு, மூன்று ''தீம் பார்க்குகள்'' உருவாகியுள்ளன. தனித்தீவு போல பிரம்மாண்டமாக இருக்கும் இந்தப் பொழுதுபோக்கு அரங்குகளில், செயற்கையாக அருவிகளும், ஏரிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கான தண்ணீர் முழுவதும் நிலத்தடியில் இருந்துதான் உறிஞ்சப்படுகிறது.

மேட்டுக்குடி கும்பலின் உல்லாசம், பொழுதுபோக்கிற்காக நீர் ஆதாரம் இப்படி வீணடிக்கப்படுவது குற்றமாகக் கருதப்படுவதில்லை. மாறாக, இந்த ''தீம் பார்க்குகள்'' சேவைப் பொருளாதாரம் என்ற பெயரில் ஊக்குவிக்கப்படுகின்றன.

சென்னையையொட்டி கார் தொழிற்சாலை அமைத்துள்ள ''ஹுண்டாய்'' என்ற கொரிய பன்னாட்டு நிறுவனம், தனது நீர்த் தேவையை ஈடு செய்து கொள்ள, செம்பரம்பாக்கம் ஏரியில் ஆழ்கிணறு அமைத்து நீர் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களாக மழை இல்லாமல் ஏரி வறண்டு போன பின்னும், ஹுண்டாய் நீர் எடுப்பதை நிறுத்தாமல், தொடர்ந்து நிலத்தடி நீரை உறிஞ்சி வருவதால், தாராளமாகத் தண்ணீர் கிடைத்து வந்த குன்றத்தூர் பகுதியில் குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது; மேலும், விவசாயக் கிணறுகளும் வற்றிப் போய், பயிர்கள் கருகிப் போகும் அபாயம் எழுந்துவிட்டது.

இவையனைத்தும் ''சென்னையையும் அதன் சுற்று வட்டாரத்தையும் தாக்கியுள்ள குடிநீர்ப் பஞ்சத்திற்கு, இரண்டு வருடங்களாக மழை பெய்யவில்லை என்று இயற்கை மீது மட்டும் பழியைத் தூக்கிப் போட முடியாது; மாறாக, தனியார் நிறுவனங்கள் நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்படாமல், பஞ்சம் செயற்கையாக உருவாக்கப்பட்டு, மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது'' என்ற உண்மையைத் தான் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழகத்தில் 64 நகரங்களிலும் ஆந்திரத் தலைநகர் ஐதராபாத்திலும் குடிநீர் வழங்குவதையும், குகாட்பள்ளி நீர்த் தேக்கத் திட்டத்தையும் தனியாருக்குத் தாரை வார்த்துவிடத் திட்டங்கள் தயாராகிவிட்டன. நீர் ஆதாரங்கள் மக்களின் தேவைக்காக சமூகத்தின் கட்டுப்பாடின்றி, தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டால், இனி, ''தண்ணீர் தட்டுப்பாடு; அதனால் குடிநீர்ப் பஞ்சம் என்ற நிலை உருவாகாது.'' மாறாக, ''கையில் காசில்லை; அதனால் குடிநீர் கிடைக்கவில்லை'' என மக்கள் புலம்புவதைத் தான் கேட்க முடியும்.

எனவே, சென்னையின் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாகப் போக்க வீராணம் ஏரியில் இருந்து நீர் கொண்டு வரலாம்; அல்லது பழவேற்காடு ஏரியில் இருந்து குறைந்த செலவில் நீர் கொண்டு வரலாம் எனப் பல மாற்றுத் திட்டங்களை முன்வைத்தால் மட்டும் போதாது. தனியார் நிறுவனங்கள் குடிநீரை விரயமாக்குவதையும், வியாபாரமாக்குவதையும் தடுப்பதோடு, ஏரிகளும், நிலத்தடி நீர் ஆதாரங்களும், குடிநீர் வழங்குவதும் மக்களின் நலனுக்காக அரசின், சமூகத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் எனக் கோரிப் போராடுவதுதான் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்கும்.

• ரஹீம்

# அனைத்துலக ரவுடி அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**அனைத்துலக ரௌடி அமெரிக்க வல்லரசின் பாதந்தாங்கியாகச் செயல்பட்டு வரும் பாரதீய ஜனதா அரசு, பெயரளவில் எஞ்சியிருந்த சுயாதிபத்திய உரிமைகளையும் பறி கொடுத்து வருவது போதாதென்று, அமெரிக்காவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நாட்டை சிக்க வைக்கவும் துணிந்து விட்டது. கடந்த ஜூன் முதல் தேதியிலிருந்து இந்தியாவின் முக்கிய நகரங்களான சென்னை, மும்பய், கல்கத்தா, டெல்லி ஆகியவற்றை செயற்கைக் கோள் மூலம் வேவு பார்க்கத் தொடங்கியுள்ளது, அமெரிக்கா. பொக்ரானில் அமெரிக்காவுக்குத் தெரியாமல் அணுகுண்டு வெடித்ததாக பீற்றிக் கொள்ளும் பா.ஜ.க. அரசு, இக்கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு, ஒரு ஊசிப் பட்டாசைக் கூட உரிமையோடு கொளுத்த முடியாத 'தேசபக்த சாதனை' புரிந்துள்ளது.**

**நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இத்துரோகச் செயலைப் பற்றி 'தேசிய' பத்திரிகைகள் ஒரு மூலையில் பெட்டிச் செய்தி வெளியிட்டு முடங்கிவிட்ட நிலையில், செயற்கைக்கோள் மூலம் நாட்டை வேவு பார்க்கும் அமெரிக்க வல்லரசை எதிர்த்து, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கடந்த ஜூன் 8-ஆம் தேதியன்று மாலையில், சென்னை - அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலைய வாயிலருகே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், அமெரிக்காவின் மேலாதிக்கத்தையும் பா.ஜ.க. அரசின் துரோகத்தையும் எதிர்த்து தோழர்கள் விண்ணதிர முழக்கமிட்டனர். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதன் ஓர் அங்கமாகவே, இத்தகைய வேவு பார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று சிறப்புரையாற்றிய தோழர் விஜயகுமார், நாட்டை விடுதலை செய்ய புரட்சிப் போருக்கு அணிதிரள அறை கூவினார். தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் திரளாகக் கூடி, இந்த ஆர்ப்பாட்டத்தை வரவேற்று ஆதரித்தனர்.**

**— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.**

www.padippakam.com



# அரண்மனைக் கொலைகளும் அரைவேக்காடு அறிஞர்களும்

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில், கடந்த ஜூன் முதல் நாளன்று அந்நாட்டின் முடியாட்சி அதிகார மையமான மன்னர் பிரேந்திராவும், அவரது குடும்பம் மற்றும் உறுவினர்களும் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு, பிரேந்திராவின் சகோதரரான ஞானேந்திரா புதிய மன்னராக முடிசூட்டிக் கொண்டுள்ளார். மன்னர் குடும்பத்தை யார் சுட்டுக் கொன்றார்கள், ஏன் கொன்றார்கள், எப்படிக் கொன்றார்கள் என்று அறியும் பரபரப்பும் அதைத் தொடர்ந்து பதற்றநிலை தணிப்புமாக ஓய்ந்துவிட்ட இந்த நிகழ்ச்சியானது, நேபாளத்தின் அரசியல் - பொருளாதார - சமுதாய அரங்கில் எந்தவொரு முக்கியமான மாற்றத்தையோ திருப்பத்தையோ ஏற்படுத்தி விடவில்லை. இருப்பினும், இக்கொலைகளுக்குப் பின்னே ஏதோ ஒரு அரசியல் காரணம் இருப்பதாகவும், ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டு விட்டதாகவும் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும், அரை வேக்காட்டு அறிஞர்களும் நேபாள விவகாரத்தை வலிந்து முறுக்கேற்றுகின்றனர்.

இந்தியாவின் வடக்கே இமயமலையில் சீனாவை ஒட்டியுள்ள சின்னஞ்சிறு நாடுதான் நேபாளம். நாட்டின் பெரும் பகுதி விளைநிலங்களையும் தொழில் மற்றும் வர்த்தகத்தையும் தமதாக்கிக் கொண்டு ஏகபோக ஆதிக்கம் செலுத்தும் மன்னர் பரம்பரை; முடியாட்சியின் பரம்பரை அமைச்சர்களாகவும் பெருநிலப்பிரபுத்துவ - பெருவணிகர்களாகவும் உள்ள ராணாக்கள்; உல்லாச விடுதிகள், சுற்றுலா, வர்த்தகத் தொழில் நடத்தும் தரகு முதலாளிகள்; கடத்தல், போதை மருந்து என இரகசிய உலகத் தொழிலில் ஈடுபட்டுள்ள 'கிரிமினல் குற்றக் கும்பல்கள்; சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் முதல் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள், ஓட்டுக்கட்சித் தலைவர்கள் வரை அனைத்து கருப்புப் பண பேர்வழிகளின் உல்லாச, சூதாட்ட, விபச்சார களிவெறியாட்ட மையமாக தலைநகர் காத்மண்டு; பின்தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை - கொடுங்கோன்மையால் வறுமையிலும் அடக்குமுறையிலும் அவதிப்படும் நேபாள மக்கள். இதுதான் நேபாளத்தின் சுருக்கமான சித்திரம்.

விருந்து, அந்தப்புரம், களிவெறியாட்டம் என ஆடம்பர சுகபோகத்தில் திளைத்து, ''மாதம் மும்மாரி பொழிகிறதா, மந்திரியாரே?'' என்று சம்பிரதாயமாக விசாரிக்கும் அரச குடும்பம்; உயர்ரக சீமைச் சாராயம், பெண்களுடன் உல்லாசம், ஆடம்பரக் கார்கள், அதிநவீன துப்பாக்கிகள், நகைகள், சொகுசு சாதனங்களை அனுபவிக்கும் பெருமையில் போட்டி போடும் அரசகுடும்ப வாரிசுகள்; அரண்மனை அதிகாரப் போட்டியில் கழுத்தறுப்புகள், திரைமறைவுச் சதிகள்; இந்துக் கடவுள் விஷ்ணுவின் மறுஅவதாரமாக கூறிக் கொண்டு சட்டப்படியான விசாரணைக்கும் தண்டனைக்கும் அப்பாற்பட்ட தெய்வீக நாயகர்களாக வலம்வரும் அரச குடும்பம்; தொழில், வர்த்தகம், வருமானம் அனைத்திற்கும் வரியில்லா சலுகையில் ஊறித் திளைக்கும் முடியாட்சியின் வாரிசுகள்.

விவசாயிகளின் ஜனநாயகப் புரட்சியில் உருவாகாமல், நடுத்தர - மேட்டுக், குடி வர்க்கத்தினர் தமக்கும் அதிகாரத்தில் பங்கு கோரி நடத்திய கலகத்திற்குப் பிறகு உருவான நாடாளுமன்றம்; முடியாட்சியைத் தூக்கியெறியாமல், அதன் தலைமையையும் அதிகாரத்தையும் ஏற்று அரட்டைக் கூடமாக நிலவும் நாடாளுமன்றம்; அதிலே அரசாங்க சலுகைகள், சன்மானங்களைப் பொறுக்கித் தின்பதையே இலட்சியமாகக் கொண்ட நேபாள காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகள்; ஓட்டுக் கட்சிகளின் நாய்ச் சண்டையில், அதிகாரமில்லாத இந்த நாடாளுமன்ற அமைப்புமுறை உருவான பத்தாண்டுகளுக்குள் பத்துமுறை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல், புதிய கூட்டணிகள், பிளவுகள் என தொடரும் அராஜகம்; ஓட்டுக் கட்சிகள் மீது நம்பிக்கை இழந்து வெறுப்பை உமிழும் உழைக்கும் மக்கள்; அதைச் சாதகமாக்கிக் கொண்டு, நாடாளுமன்ற அமைப்பு முறையை கலைத்து விட்டு வரம்பற்ற முடியாட்சியை மீண்டும் நிறுவத் துடிக்கும் அரச குடும்பம்.

தொழில், வர்த்தகம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு இந்தியாவைப் பெரிதும் சார்ந்து நின்று, சுயமான தேசியப் பொருளாதா

**சுட்டுக் கொல்லப்பட்ட நேபாள மன்னர் பிரேந்திரா தனது குடும்பத்துடன்; (நடுவில்) கொலைகார வாரிசு இளவரசன் திபேந்திரா.**



www.padippakam.com

ரத்தைக் கட்டியமைக்காத அவலத்தில் நேபாள நாடு; அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயமடைவதோடு, அதன் உள்விவகாரங்களில் தலையிட்டு மேலாதிக்கம் செலுத்தும் இந்திய ஆட்சியாளர்கள்; ஏற்கனவே இந்தியாவின் பொருளாதார - வர்த்தகத் தடைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு வெறுப்புற்ற உழைக்கும் மக்கள், அண்மையில் இந்திய மேலாதிக்கவாதிகளுக்கு எதிராக நடத்திய கலகம்; மக்களிடம் தனிப்பட நேரிடுமோ என்ற அச்சத்தில் இந்திய எதிர்ப்பு சவடால் பேசும், இந்திய விசுவாச நேபாள ஓட்டுக் கட்சிகள்; உலகமயமாக்கலின் விளைவாக, வர்த்தகம் மற்றும் தொழிலுக்கு சீனாவை நேபாளம் சார்ந்து நிற்கத் தொடங்கிவிட்டால், தமது நலன் பாதிக்குமே என்ற கவலையில் இந்திய ஆட்சியாளர்கள்.

தலைவிரித்தாடும் வறுமை, வேலையின்மையால் இந்தியாவுக்கு வந்து அற்பக் கூலிக்கு காவலர்களாகப் பணியாற்றும் நேபாள உழைப்பாளிகள்; வறுமை காரணமாக கல்கத்தா விபச்சார விடுதிக்குள் தள்ளப்படும் இளம் பெண்கள்; பல்வேறு இன, மொழி, சாதிய வேறுபாடுகளால் பிளவுபட்டுள்ள விவசாயிகள்; நேபாள உழைக்கும் மக்களை புரட்சிக்கு அணிதிரட்டி, அந்நாட்டின் மேற்குப் பகுதியில் மக்களின் ஆதரவோடு ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறிவரும் ''மாவோயிஸ்டுகள்'' என்றழைக்கப்படும் கம்யூனிசப் புரட்சியாளர்கள்.

இத்தகைய அரசியல் - பொருளதார - சமுதாயச் சூழல் நிலவிய நேபாளத்தில் மன்னர் பிரேந்திராவின் மகனும் பட்டத்து இளவரசனுமாகிய திபேந்திரா, தனது பெற்றோரையும் உறவினர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனான். உடனே, அரண்மனையில் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து விட்டதாகப் பீதியடைந்து நாடாளுமன்ற ஓட்டுக் கட்சிகள் தலைமறைவாகி விட்டன.

அரண்மனையிலிருந்து முன்னுக்குப் பின் முரணாகச் செய்திகள் வந்தன. மன்னர் குடும்பத்தை யார் கொன்றார்கள், ஏன் கொன்றார்கள் என்ற உண்மையை அறிய, தலைநகரில் மக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். இராணுவத்தை தனது பொறுப்பில் வைத்துள்ள அரச குடும்பம், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கவில்லை என்று அறிந்த பிறகு, ஓட்டுக் கட்சிகள் மெதுவாகத் தலைகாட்டத் தொடங்கின. பரம்பரை வழக்கப்படி உடனடியாக பிரேந்திராவின் சகோதரரான ஞானேந்திரா மன்னராகப் பதவி ஏற்றார். மக்களிடம் நிலவும் அதிருப்திக்கு வடிகாலாக, விசாரணை நடத்த உத்திரவிட்டார். அரண்மனையின் அதிகாரத் தாழ்வாரங்களில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுப்படி, இளவரசரான திபேந்திரா குடிபோதையில் அரச குடும்பத்தைச் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டதாக விசாரணை அறிக்கையும் வெளிவந்தது. அதை போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சிகளும் விசுவாசமாக ஏற்றுக் கொண்டன.



புதிய மன்னராக முடிசூட்டிக் கொண்டுள்ள ஞானேந்திரா.

நாட்டை வழிநடத்த நாடாளுமன்றத்துக்கு உரிமை கொடு என்று குறைந்தபட்ச முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கையைக் கூட முன்வைத்துப் போராட அவை தயாராக இல்லை. புதிய மன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடாமல் இருப்பதே பெரிய விஷயம் என்று ஆளும் கட்சியான நேபாள காங்கிரசு விசுவாசமாக வாய்மூடிக் கிடக்கிறது. ''புதிய மன்னர் தனது சொத்துப் பட்டியலை வெளியிட வேண்டும்; அரண்மனையை அருங்காட்சியமாக மாற்றிவிட வேண்டும்'' என்று உபதேசித்து வேண்டுகோள் விடுக்கிறது, எதிர்த்தரப்பான போலி கம்யூனிஸ்டு கட்சி.




ஏற்கனவே நீடித்து வந்த அதே அரசியலமைப்பு முறை; அதிகாரமில்லாத அரட்டை மடமாக அதே நாடாளுமன்றம்; அதே நிலப்பிரபுத்துவ - தரகு முதலாளித்துவ உற்பத்தி உறவுகள்; ஒரே ஒரு மாற்றம் - மன்னர் பிரேந்திராவுக்குப் பதிலாக மன்னர் ஞானேந்திரா; அண்ணனுக்குப் பதிலாக தம்பி!

புதிய மன்னர் வரம்பற்ற அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவாரா? அல்லது முடியாட்சியின் அதிகாரங்களைக் குறைத்துக் கொண்டு, நாடாளுமன்ற ஜனநாயகம் தழைக்க உதவுவாரா? அல்லது முடியாட்சி மற்றும் போலி ஜனநாயக நாடாளுமன்றத்தையும் தூக்கியெறிந்து விட்டு, மக்களுக்கே அதிகாரத்தை வழங்கும் புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் மாவோயிஸ்டுகள் முன்னேறுவார்களா? அல்லது இந்தியா இராணுவத் தலையீடு செய்து மேலாதிக்கம் செலுத்துமா? - இப்படி கேள்விகளும் சந்தேகங்களும் ஊகங்களும் எழுப்பப்பட்டாலும், அரண்மனைக் கொலைகளைத் தொடர்ந்து இவற்றுக்கு உடனடியாக சாத்தியமோ, திருப்பமோ ஏற்பட்டு விடவில்லை.

இருப்பினும், நேபாள அரண்மனைக் கொலைகளுக்கு ஏதோ அரசியல் முக்கியத்துவம் இருப்பதாகக் கருதிக் கொண்டு பரபரப்பின் பின்னே வால் பிடித்துச் சென்று வலிந்து காரணத்தைத் தேடுகிறார்கள் சில அரைவேக்காட்டு அறிஞர்கள். பாசிச இந்திரா கொலைக்கும் பாசிச ராஜீவ் கொலைக்கும் பின்னே ஒரு அரசியல் காரணம் இருக்கிறது என்றால், உயர் அதிகார மட்டத்தில் நடக்கும் ஒவ்வொரு கொலைக்கும் பின்னே ஒரு அரசியல் காரணம் இருப்பதாகத் தேடி அலைவது முட்டாள்தனமானது. ஒவ்வொரு பரபரப்பான நிகழ்ச்சிக்கும் ஏதோவொரு அரசியல் முக்கியத்துவம் இருப்பதாகக் கருதுவது அதைவிட அபத்தமானது. பாசிச ஜெயா, தான் கொள்ளையடித்த சொத்தில் ஏற்பட்ட பங்குத் தகராறு காரணமாக, தனது வளர்ப்பு மகன் சுதாகரனைக் கைது செய்து சிறையிலடைத்த விவகாரம் பரபரப்பான செய்தியாக அடிபடுவதால், அதற்கு ஏதோ அரசியல் முக்கியத்துவம் இருப்பதாகக் கருத முடியுமா? நேபாள மன்னர் பரம்பரையும் ஆளும் கும்பலும் ஓட்டுக் கட்சிகளும் இந்திய மேலாதிக்கவாதிகளுக்கு விசுவாசமாக உள்ள நிலையில், அங்கே இந்திய உளவுப் படை ''ரா'' சதி செய்து இக்கொலைகளை நடத்தியதாகவும், அல்லது அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வும், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யும் கூட்டுச் சேர்ந்து சதி செய்ததாகவும் வலிந்து காரணம் கற்பிக்க ஏதாவது அடிப்படை இருக்கிறதா?

ஜனநாயகமில்லாத எந்த இடத்திலி

www.padippakam.com

ருந்தும் உண்மைச் செய்திகள் குறைவாகவே வரும்; கிசுகிசு - வதந்திகளும் ஊகங்களும் அதிகமாக இருக்கும். அப்படித்தான் நேபாள விவகாரத்திலும் நடந்துள்ளது. அதை ஊதிப் பெருக்கி பரபரப்பூட்டி வியாபாரமாக்கும் போட்டா போட்டியில், தமிழகத்தின் நக்கீரன், ஜூனியர் விகடன், தமிழன் எக்ஸ்பிரஸ் முதலான கிசுகிசு, மஞ்சள் பத்திரிகைகள் மட்டுமல்ல; இந்தியா டுடே, அவுட்லுக், தி வீக் முதலான ஆங்கில பத்திரிகைகளும் அவற்றோடு சேர்ந்து கொண்டன. இளவரசர் திபேந்திராவின் காதல் விவகாரம், திருமணத்துக்குப் பெற்றோரின் தடை, அதற்குக் காரணமாக சோதிடம் - பார்ப்பன இந்து மதம் என்று புலனாய்வு செய்கின்றன, சில பத்திரிகைகள். இளவரசர் திபேந்திரா இக்கொலைகளைச் செய்யவில்லை; தற்போது மன்னராக முடிசூட்டிக் கொண்டுள்ள ஞானேந்திராதான் தனது விசுவாச எடுபிடிகளைக் கொண்டு இக்கொலைகளைத் திட்டமிட்டு நடத்தியுள்ளார் என்று துப்பறிந்து பரபரப்பூட்டுகின்றன, வேறுசில பத்திரிகைகள். இவையெல்லாம் உண்மையாகவே இருக்கட்டுமே! அதனால் என்ன அரசியல் முக்கியத்துவம், மாற்றம், திருப்பம் அல்லது சலனம் ஏற்பட்டுள்ளது என்பது தான் கேள்வி!

அரண்மனைக் கொலைகளுக்கு முன்னும் பின்னும் பொருளாதார அடித்தளத்திலோ, அரசியல் மேல் கட்டுமானத்திலோ எவ்வித மாற்றமோ, சலனமோ இன்றி நேபாள சமுதாயம் மீண்டும் அதே பாதையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. பரபரப்புக்குப் பின்னே வால்பிடித்துச் சென்று அரைவேக்காடு அறிஞர்களும் பத்திரிகைகளும் மீண்டும் அதே செக்குமாட்டுப் பாதையில் பீடுநடை போடுகின்றனர்.

• பாலன்

# ஈராக்: அவலத்தின் நடுவிலும் அமெரிக்க எதிர்ப்பு

வளைகுடாப் போர் முடிவுக்கு வந்து 11 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் விதித்துள்ள மிகக் கொடூரமான பொருளாதார - வர்த்தகத் தடைகளால் ஈராக் நாடும் மக்களும் மீள முடியாத வேதனையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். போருக்குப் பின்னர் அமெரிக்காவின் மேலாதிக்கத் தடைகளால் போதிய உணவின்றியும் நோய் தாக்கியும் உரிய மருந்துகள் இல்லாமையாலும் இதுவரை 10 இலட்சத்துக்கும் மேலான ஈராக்கியர்கள் மாண்டு போய் விட்டனர். கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 6000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் சத்துணவின்மையாலும் உரிய மருந்துகள் கிடைக்காமலும் மாண்டு போயுள்ளன.

வளைகுடாப் போரின் போது கொலைகார அமெரிக்கா நடத்திய, சக்தி குறைந்த யுரேனியம் கொண்ட அணுகுண்டுத் தாக்குதல் காரணமாக கதிரியக்கம் பரவி கணக்கற்றோரைப் புற்றுநோய் தாக்கியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் - அதாவது வளைகுடாப் போருக் குப் பின்னர், ஈராக்கில் புற்று நோயாளிகளின் எண்ணிக்கை 5 மடங்கு உயர்ந்துள்ளது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடையின் காரணமாக ஈராக் மருத்துவமனைகளில் புற்றுநோய்ச் சிகிச்சைக்கான உரிய மருந்துகளோ, சாதனங்களோ, போதிய நிதியாதாரமோ இல்லாததால் நோயாளிகள் கொத்துக் கொத்தாக மடிகின்றனர்.

ஈராக்கின் நாசகார ஆயுதங்கள் அழிக்கப்பட்டதும் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கிவிட வேண்டும் என்று ஐ.நா. மன்றப் பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானம் கூறுகிறது. 1998-லேயே ஐ.நா. மன்றத்தின் சிறப்புக் குழு, ஈராக்கின் நாசகார ஆயுதங்களில் 95%-க்கு மேல் அழிக்கப்பட்டுவிட்டதாக அறிவித்துள்ளது. ஆனாலும் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாக, பொருளாதாரத் தடைகள் இன்னமும் நீக்கப்படாமல் தொடருகின்றன.

"ஈராக்கின் நாசகார ஆயுதங்களை ஒழிப்பது மட்டுமல்ல; ஈராக்கில் ஜனநாயக ரீதியிலான அரசாங்கம் உருவாகாதவரை பொருளாதாரத் தடை விதிப்பைத் தொடருவோம்" என்று கொக்கரிக்கிறது அமெரிக்க வல்லரசு. ஈராக் நாட்டில் ஈராக் விமானங்கள் தடை விதிக்கப்பட்டுள்ள பகுதியில் அமெரிக்க - பிரிட்டிஷ் போர் விமானங்கள் திடீரென நடத்தும் குண்டுவீச்சுத் தாக்குதல்களால் கடந்த ஈராண்டுகளில் மட்டும் 400-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒருபுறம் திடீர்க் குண்டுவீச்சுத் தாக்குதல்; மறுபுறம் பொருளாதார - வர்த்தகத் தடைகள் எனத் தொடரும் இம்மேலாதிக்க நடவடிக்கையால் ஈராக்கின் சுயாதிபத்திய உரிமை நசுக்கப்பட்டு, அந்நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவும் மருந்துகளுமின்றி பரிதவிக்கின்றனர். இது, அமெரிக்காவின் பழி வாங்கும் நடவடிக்கை மட்டுமல்ல; தன்னை எதிர்க்கத் துணியும் எந்தவொரு ஏழை நாட்டுக்கும் இந்த கதிதான் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கும் செயலாகும்.

அவலத்தில் உழலும் ஈராக்கியர்களோ, அமெரிக்கா மீது வெறுப்பை உமிழ்கின்றனர். அண்மையில், ஈராக் அதிபர் சதாம் உசேனின் பிறந்த நாளில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திய ஈராக்கியர்கள், தமது உணவு விடுதி கள், அங்காடி கள், வீடுகளின் தரையில் கொலைகாரன் ஜார்ஜ் புஷ்ஷின் உருவப் படத் தைப் பதித்து தமது செருப்புக் கால்களால் மிதித்துத் தேய்த்து அவமானப்படுத்துகின்றனர்.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் தரம் குறையாமல் கவனமாகவும் ஏகாதிபத்திய விசுவாசத்தோடும் செயல்படும் இந்திய அரசு, பட்டினியில் பரிதவிக்கும் ஏழை நாடுதானே என்ற அலட்சியத்தோடு கல்லும் மண்ணும் குப்பையும் நிறைந்த தரமற்ற கோதுமையை 3 கப்பல் அளவுக்கு ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்தது. பட்டினியால் தவித்தாலும், தரமற்ற இக்கோதுமையை ஏற்க மறுத்த ஈராக், கப்பலை திருப்பியனுப்பி விட்டது. அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு ஈராக்கில் கிடைத்துவரும் அவமானத்தை விட, இந்தியாவுக்கு இது பெருத்த அவமானமாகும்.

பாக்தாத் நகர உணவு விடுதியில் ஈராக்கியர்களின் பாதச் செருப்புகளால் பதம் பார்க்கப்படும் முன்னாள் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் உருவப்படம்.



ஈராக்கின் நாசகார ஆயு

www.padippakam.com

# தேர்தல் வன்முறையா? சாதி வெறியாட்டமா?

தி.மு.க ஆண்டால் என்ன? அ.தி.மு.க. ஆண்டால் என்ன? தமிழகத்தில் சாதி வெறியர்களின் கோரப் பசிக்கு தாழ்த்தப்பட்டவர்கள் இரையாவது மாறப் போவதில்லை. பண்ருட்டி அருகே திராசு கிராமத்தில் நடந்துள்ள சம்பவம் இதற்கு மேலுமொரு உதாரணம்.

கடலூரிலிருந்து விழுப்புரம் செல்லும் வழியில் நெல்லிக்குப்பம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிதான் திராசு. இங்கு சுமார் நூறு தாழ்த்தப்பட்டோர் குடும்பங்கள் உள்ளன. அருகிலுள்ள தட்டாம்பாளையம் சுமார் 2000 தலைக்கட்டுகள் கொண்ட வன்னியர்கள் வசிக்கும் பகுதி. தட்டாம்பாளையத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் அம்பிகாபுதி கும்பலுக்கும், திராசு பகுதி தி.மு.க.வைச் சேர்ந்த ரமேஷ் கும்பலுக்கும் முன் விரோதம் இருந்து வந்தது.

கடந்த சட்டமன்ற தேர்தலில் தமது சாதி வெறிக்கும், அரசியல் செல்வாக்குக்கும் பணிய மறுத்த தாழ்த்தப்பட்டோர் மீது 'பறப் பசங்களுக்கு இவ்வளவு திமிரா?' என்று கூறி தேர்தல் முடிந்த மறுநாளே தி.மு.க.வுக்கு ஆதரவாக செயல்பட்ட ரமேஷ் கும்பல் வசிக்கும் திராசு பகுதியில் புகுந்து அம்பிகாபதி கும்பல் தாக்குதல் நடத்தியது. சுமார் 200 பேர் கொண்ட சாதிவெறி கும்பல் கட்டை, கத்தி, கம்பி போன்ற ஆயுதங்களுடன் சென்று, வீடுகளில் இருந்த பாத்திரங்களை அடித்து நொறுக்கியும், பெண்களை அவமானப்படுத்தியும் விரட்டியடித்துள்ளனர். இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் கொளுத்தப்பட்டன. 50 ஓட்டு வீடுகள் நொறுக்கப்பட்டன. போலீசிடம் புகார் கொடுத்ததில், இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்களையும் பெயருக்கு சில வன்னியர்களையும் போலீசு கைது செய்துள்ளது.

**தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டு அ.தி.மு.க. தலைமையில் வன்னிய சாதி வெறியர்கள் நடத்திய தாக்குதலில் எரிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் வீடுகள்.**



இச்சம்பவத்தைக் கண்டித்து ஏசுமரியான தலைமையிலான அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தினர் 11.06.2001 அன்று கடலூரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேரில் பார்வையிட வந்த அதிகாரிகளும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் சுப்ரமணியமும் தொகுப்பு வீடு கட்டித் தருகிறோம் என்று கூறிவிட்டு சென்றதோடு சரி; இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாதிவெறியர்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களோ பயபீதியில் உறைந்து போயுள்ளனர்.

— பு.ஜ. வாசகர்கள்,
கடலூர்.

# வாசகர் கடிதம்

★ நான் பத்திரிக்கை துறையில் நிருபராக வேண்டும் என்பது என்னுடைய வாழ்வின் இலட்சியம். உங்கள் பத்திரிக்கையைச் சமீபத்தில் படித்தேன். நல்ல செய்திகளை நயம்பட குறிக்கும் உங்கள் புதிய ஜனநாயகம் இதழிலே நிருபராக பணிபுரிய ஆசைப்படுகிறேன். நாட்டிற்காக என்னுடைய பேனா மூடிகள் திறக்கப்பட வேண்டும்.

— சி. ஆனந்தகுமார், கரூர்.

★ இந்தியா - வங்காள தேச எல்லை மோதல் இந்திய அரசின் போலி வேடத்தைத் திரை கிழிக்கும் விதத்தில் இருந்தது. கோவை உயிரியல் பூங்கா கட்டுவதன் மூலம் பழங்குடி மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. பு.ஜ. புதிய மெருகு ஏற்றப்பட்டு உணர்வைத் தட்டியெழுப்பும் விதத்தில் உள்ளது.

— வாசகர் வட்டம், கோவை.

★ நாடு சுதந்திரம் அடைந்து 53 ஆண்டுகள் நிறைவடைந்தும் கூட அடிப்படை தேவைகள் இன்னும் பல கிராமங்களில் நிராகரிக்கப்படுவது மிகவும் வேதனை தருவதாகவுள்ளது.

— ஏ.கே. விஸ்வநாதன்,
ஒக்கரைப்பட்டி.




★ கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் அரசியல்வாதிகளையும் நீதி மன்றங்களையும் சுற்றி ஒளிவட்டம் போட்டுக் காட்டியது கருணாநிதி அரசு. அந்த ஒளி வட்டத்தை உடைத்தெறிந்தது தலையங்கம். நான்கைந்து ஆண்டுகளாக புதிய ஜனநாயகம் படிக்கும் மாணவர் ஒருவர், "நான் இதுவரை படித்ததிலேயே சிறந்த கட்டுரையாக இது உள்ளது. அனைத்து விவரங்களையும் சுட்டிக் காட்டியிருந்தது சிறப்பாக இருந்தது" என்றார்.

— வாசகர் வட்டம், திருச்சி.

★ இம்முறை வந்த பு.ஜ. சுவரொட்டி வாசகம் மிக அருமை. ஆனால் பலர், "என்ன ஜெயாவுக்கு நன்றின்னு போஸ்டர் போட்டிருக்கீங்க" என விசாரித்தனர். காரணம் சுவரொட்டியை முழுமையாகவும் நிதானமாகவும் படிக்காததுதான்.

சுவரொட்டி என்பது நின்று நிதானமாக படிக்கக் கூடியதல்ல. போகிற போக்கில் கண்ணில் படுவதுதான். ஆகவே இனி இது போன்ற குழப்பம் ஏற்படுத்தக்கூடிய, எதிர் மறை கிண்டல் வாசகங்களைத் தவிர்ப்பது நல்லது எனக் கருதுகிறோம்.

- பு.ஜ. வாசகர்கள், மதுரை.

www.padippakam.com

# இவரின் மரணம் மலையைவிடக் கனமானது!



**போ**லீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு பாறைகளுக்கு நடுவே முட்புதரில் கைக் குழந்தையோடு பிணமாகக் கிடக்கிறாரே, இந்தப் பெண் ஒரு கிரிமினல் குற்றவாளியாக இருக்கலாம் என்று ஏளனமாக எண்ணி விடாதீர்கள். இவர் ஒரு நக்சல்பாரி வீராங்கனை!

ஆந்திராவின் நலகொண்டா மாவட்டம், மர்ரிகுடம் கிராமத்துக்கு அருகே 3 பெண்கள் உள்ளிட்டு மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த 8 நக்சல்பாரி புரட்சியாளர்களை கடந்த ஜூன் 19-ந் தேதியன்று போலீசார் சுட்டுக் கொன்றனர். நக்சல்பாரி ஒழிப்பு வேட்டைப் படை போலீசார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, காட்டுப் பகுதியில் பாறைகளின் மறைவிலிருந்து நக்சல்பாரிகள் கையெறிக் குண்டுகள், துப்பாக்கிகளுடன் தாக்கியதாகவும், போலீசார் எதிர்த் தாக்குதல் நடத்தியதில் 8 பேர் மாண்டு போனதாகவும், அதில் கைக்குழந்தையுடனிருந்த இந்தப் பெண்ணும் ஒருவர் என்று வழக்கம் போலவே ஆந்திரப் பயங்கரவாதப் போலீசார் கதையளந்தனர்.

''இந்தப் பெண், நக்சல்பாரி வீராங்கனையாக இருக்கட்டுமே! அதனால் எனக்கென்ன? நான் ஏன் இதில் அக்கறைப்பட வேண்டும்?'' - இப்படி நீங்கள் அலட்சியமாக இருந்து விடாதீர்கள். இவர் தனக்காக வாழவில்லை. உங்களுக்காக, நமக்காக வாழ்ந்தார்.

நலகொண்டா மாவட்டத்தில் தீவிரமாகி விட்ட வரதட்சிணைக் கொடுமை, பெண்கள் மீதான அடக்குமுறை - பாலியல் வன்முறை முதலானவற்றுக்கு எதிராக நக்சல்பாரிகள் பெண்களை அணிதிரட்டி வருகிறார்கள்; சாதிவெறி அட்டூழியங்களுக்கு எதிராகப் போராடத் துணிவூட்டுகிறார்கள்; அறியாமையிலுள்ள பெண்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து அரசியல் உணர்வூட்டுகிறார்கள். இதைக் குற்றம் என்கிறது ஆந்திர பயங்கரவாதப் போலீசு. ''இந்தப் பெண் உட்பட அனைவருமே தீவிரவாதிகள்; அதனால்தான் சுட்டுக் கொன்றோம்'' என்று நியாயம் கற்பிக்கிறது. அந்தப் பெண் தீவிரவாதியாகவே இருக்கட்டும்! அவரது பச்சைக் குழந்தை...? ''தீவிரவாதியின் குழந்தையும் தீவிரவாதிதான்! எனவே சுட்டுக் கொல்வதில் தவறில்லை'' என்கிறது ஆந்திர போலீசு.

கைக் குழந்தையோடு கொல்லப்பட்ட இவர் ஓர் இளம்பெண். ''நான் வாழ வேண்டியவள்; இந்த வயதில் அனுபவிக்காமல் பிறகு எப்போது அனுபவிக்கப் போகிறேன்'' என்று அற்ப சுகங்களுக்கு அவர் ஆசைப்படவில்லை.

''நானுண்டு, என் பிழைப்புண்டு; குழந்தையை வளர்த்து 'கான்வெண்ட்'டில் படிக்க வைக்கவேண்டும்; டாக்டராகவோ, என்ஜினியராகவோ ஆளாக்க வேண்டும்; கைநிறைய சம்பளம், வீடு, கார், பேரன் - பேத்திகள் என நிம்மதியாக வாழ வேண்டும்'' என்று அவர் கனவு காணவில்லை. தன்னை விட அவர் நாட்டையும் மக்களையும் நேசித்தார். மக்களைப் போராட்டத்துக்கு அணிதிரட்ட தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

கிராமம் கிராமமாகப் பிரச்சாரம்; உரிய உணவு கிடைக்காது; எந்நேரமும் போலீசு வேட்டை; மக்களை அரசியல்படுத்தி போராட்டத்துக்கு அணிதிரட்ட வேண்டும்; தனது அரசியல் - சித்தாந்த அறிவை வளர்த்துக் கொள்ள படிக்க வேண்டும்; கைக் குழந்தையையும் பராமரிக்க வேண்டும். எத்தனை இடர்பாடுகள்! அத்தனையும் எதிர்கொண்டு உறுதியாக நின்றார் அவர்.

''நான் புரட்சியை நேசிக்கிறேன்; என் குழந்தையையும் நேசிக்கிறேன். அதன் எதிர்கால வாழ்விற்கு ஏற்பாடு செய்துவிட்டு பிறகு போராட்டத்துக்கு வருகிறேன்'' என்று அவர் தயங்கி நிற்கவில்லை.

''எதற்காக இப்படி காடு மேடுகளில் திரிந்து கட்டாந்தரையில் படுத்து கைக் குழந்தையுடன் கஷ்டப்பட வேண்டும்? புரட்சி என்ன நாளைக்கேவா வந்துவிடப் போகிறது? வரும்போது நானும் சேர்ந்து கொள்கிறேன்'' என்று அவர் ஒதுங்கி நிற்கவுமில்லை.

''புரட்சியாளர்கள் யார் யார் என்பதைக் காட்டிக் கொடுத்து சரணடைந்து விடு! கைநிறைய சன்மானம் தருகிறோம்; நிம்மதியாக வாழலாம்!'' என்று ஆசை காட்டி அழைக்கிறது ஆந்திர அரசு. அதற்கு உடன்பட்டிருந்தால், அவரும் அவரது குழந்தையும் உயிரோடு இருந்திருக்க முடியும். ஆனால் அவர் ஊசலாட்டத்தையும் துரோகத்தையும் இழிவாகக் கருதி தனது இலட்சியத்தில் உறுதியாக நின்றார்.

**''நான் வாழ வேண்டியவள்; இந்த வயதில் அனுபவிக்காமல் பிறகு எப்போது அனுபவிப்பது'' என்ற அற்பசுகங்களுக்கு அவர் ஆசைப்படவில்லை. தன்னைவிட அவர் நாட்டையும் மக்களையும் நேசித்தார்.**

இவர் கைக் குழந்தையோடு காடுகளுக்கும் மலைகளுக்கும் போனார். இயற்கையை ரசிப்பதற்காக அல்ல; ஆதிவாசி மக்களிடம் 'நாகரீக' மனிதர்களின் நயவஞ்சகச் சூழ்ச்சிகளைச் சொன்னார். இவர் கிராமம் கிராமமாக வயல் வெளிகளில் அலைந்தார். விவசாயிகளிடம் நிலப்பிரபுத்துவ அடிமைத்தளையறுக்க அறைகூவினார். ஆலைகளில் நுழைந்து வந்தார். தொழிலாளர்களிடம் புரட்சிக்குத் தலைமை தாங்க வேண்டிய அவசியத்தை விளக்கினார். ''உழைக்கும் மக்களே, விரக்தியிலும், வேதனையிலும் முடங்கிக் கிடக்காதீர்கள். உங்களுக்காகப் போராடுங்கள்! ஆயுத மேந்துவோம்! அதிகாரத்தைக் கைப்பற்றுவோம்!'' என்று முழங்கினார்.

இவரும் இவரது சக தோழர்களும் ஒரு துரோகியால் காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆதிவாசி கிராமங்களுக்கிடையே பயணம் செய்யும் போது அல்லது கட்டாந்தரையிலோ பாறையிலோ படுத்துக் கிடந்த போது போலீசு வெறிநாய் கூட்டம் இவர்கள் மீது பாய்ந்திருக்கலாம். ஒரு கிராமத்துக் குடிசையிலே விவசாயத் தோழர்களோடு விவாதித்துக் கொண்டிருக்கும் போது இவர்களை சுற்றி வளைத்து சுட்டுக் கொன்றுவிட்டு, போலீசு வெறியர்கள் காட்டுக்குள் வீசியெறிந்திருக்கலாம்.

www.padippakam.com

இந்த வீராங்கனை தனது அன்புக் குழந்தையோடு கொல்லப்பட்டுவிட்டார். இந்த முடிவு எதற்கும் அவர் அஞ்சவில்லை; கலங்கவில்லை. வாழ்க்கையைத் தொலைத்து விட்டதாக இவர் வருந்தவுமில்லை.

இவரது தியாகம் காடு, மலைகளில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்; வயல்வெளிகளில் வளமான மண்ணாகப் புரளும்; ஆலைகளில் இயந்திரங்களின் ஓசையாய் எழும்பும்; புரட்சிகர கலை நிகழ்ச்சிகளில் இசையாய் முழங்கும்!

இவருக்காக நீங்கள் இரக்கப்படாதீர்கள் - அது இவரை இழிவுபடுத்தும். இவருக்காக நீங்கள் வருத்தப்படாதீர்கள் - அதை இவர் ஒருபோதும் விரும்பியதில்லை. இவருக்காகவும் உங்களுக்காகவும் நமக்காகவும் இவரது உயர்ந்த இலட்சியத்தை எண்ணிப் பாருங்கள். இவரது இலட்சியம் உண்மையானது, புரட்சிகரமானது, மக்களுக்கானது. இந்த இலட்சியத்தை நீங்களும் ஏந்த வேண்டும் - இந்த நம்பிக்கையோடுதான் தனது பிஞ்சுக் குழந்தையோடு இவர் மரணத்தைத் துணிவாக எதிர்கொண்டார் - இவர்தான் ஒரு நக்சல்பாரி புரட்சிகர வீராங்கனை!

• முத்து

**தலையங்கம் தொடர்ச்சி**

அனைவரையும் விடுதலை செய்தது.

இதற்கிடையே ஜெயலலிதா அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் கொஞ்சமும் நியாயமற்றவை, சட்ட விரோதமானவை என்பதை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றமும், உயர்நீதி மன்றமும் அம்பலப்படுத்தின. குற்றஞ்சாட்டப்பட்ட கருணாநிதி, ஸ்டாலின் உட்பட எவரும் கையூட்டுப் பெற்றதற்கான ஆதாரம் கிடையாது, வழக்கும் முறைப்படி, ஆதார - ஆவணப்படி இல்லாமல் அவசர கோலத்தில், பழி வாங்கும் வெறியில் புனையப்பட்டது, ஜெயா அரசு அதிகாரிகள் மூலமே வெளிப்பட்டது. அது மட்டுமல்ல, போலீசு வெளியிட்ட ''வீடியோ'' ஆதாரம் கூட வெட்டி ஒட்டித் தயாரிக்கப்பட்டது என்பதும் நிரூபணமாகியது.

இவ்வளவும் நடந்தும், திருந்தவே திருந்தாத கிரிமினல் கும்பல்தான் என்று ஜெயா-சசி கும்பல் இப்போதும் காட்டி வருகிறது. வேட்டை நாய்களாகச் செயல்பட்ட போலீசு அதிகாரிகளைக் காக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. மத்திய அரசு விடுத்தது ஆலோசனை அறிக்கை தானே தவிர, சட்டப்படியான எச்சரிக்கை கிடையாது என்று சாதித்து வருகிறது. தொடர்ந்து ஜெயலலிதா தனது தொலைக்காட்சி மூலம் கோயாபல்சு பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார். மேலும் ஆரம்ப அதிர்ச்சியைக் கடந்துவிட்ட காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள் ஆகிய போலி மதச்சார்பற்ற - போலி ஜனநாயகக் கூட்டத்தினர் மீண்டும் ஜெயலலிதாவின் பின்னே அணிதிரண்டு ஜெயா அரசை நியாயப்படுத்தும் வேலையைத் துவக்கிவிட்டனர். ஜெயா மீட்புக்கு சங்கரய்யா தலைமையேற்றுள்ளார்.

இனி, எப்படியோ அரசியல் - சட்ட நெருக்கடி தீர்க்கப்பட்டு விட்டது. அரசியல் சூடு தணிந்து விட்டது என்ற ஜனநாயக அபிமானிகளும், ஜெயலலிதா ஆதரவு அனுதாப அலை விரைவிலேயே தடுத்து நிறுத்தப்பட்டு, அவருக்கு எதிரான கருணாநிதி ஆதரவு அனுதாப அலையாக மாறிவிட்டது என்று திமுகவினரும் மனநிறைவு கொள்ள முடியுமா? தமிழ்நாட்டைச் சூழ்ந்த ஜெயா-சசி கும்பலின் போலீசு கிரிமினல் வெறியாட்டத்தில் இருந்து தமிழகம் விடுபட்டு விட்டதா? இது போன்ற இன்னும் பல கேள்விகள் உள்ளன.

''நான்கு முறை, 14 ஆண்டுகள் முதல்வராக இருந்தவர், நாட்டிலேயே பழுத்த அரசியல்வாதிகளில் ஒருவர், 60 ஆண்டுகாலம் பொதுவாழ்வில் ஈடுபட்டவர், 78 வயது தள்ளாத முதியவர், தமிழ்ப் பேரறிஞர் அண்ணா, பெரியார், இராஜாஜி, காமராஜர், இந்திரா போன்றவருடன் அரசியல் நடத்தியவர்; அவருக்கே இந்த நிலை என்றால் சாமானியமானவர்களான எங்கள் கதி என்னவாகும்'' என்று பாமரர்களைப் போன்று படித்த நடுத்தர, மேட்டுக் குடியினரே பதறுகின்றனர்.

இவர்களுக்கும் தி.மு.க. அணியினர் ஆதரவாளர்களுக்கும் ஒன்றைக் கேட்கிறோம்: ஜெயலலிதா மத்தியிலும், ஆளும் கூட்டணியிலும் பங்கேற்றிருந்தால், திமுக எங்கும் அதிகாரத்தில் இல்லாத எதிர்க்கட்சியாக மட்டுமே இருந்தால், இப்பொழுதும் கூட தி.மு.க. மத்திய அரசில் பங்கேற்காமல் - மாறனும், பாலுவும் மத்திய மந்திரிகளாகவும் இல்லாமல் இருந்தால்,

கருணாநிதி, மாறன், பாலு மற்றும் ஆயிரக்கணக்கான கழக உடன்பிறப்புகளின் கதி என்னவாகி இருக்கும்? தெருநாய்களைப் போல அடித்து இழுத்துச் செல்லப்பட்டு, கேள்விமுறையின்றி ''காராகிருக''த்தில் அடைக்கப்பட்டிருப்பர். இதுதான், அதிகாரத்தில் இல்லாத - அரசை எதிர்த்துப் போராடும் அரசியல் கட்சி அணிகளை, எந்த ஆட்சியும் நடத்தும் முறையாக உள்ளது.

அரசியல் அணிகளை மட்டுமல்ல, கோடிக்கணக்கான ஏழை, எளிய மக்களை இப்படித்தான் போலீசு எப்பவும் நடந்து வந்திருக்கிறது. இந்தப்படிக்குத்தான் போலீசு நாய்கள் பழக்கப்படுத்தப்படுகின்றனர். சட்டம் என்பது தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், வரைமுறையற்ற அதிகாரத்தைத் தங்களுக்கு வழங்குவது என்பதுதான் போலீசின் எண்ணம்.

இதையொட்டி அடுத்துவரும் கேள்வி, திமுகவினரும் அதன் தலைமையும் இப்போது பேசும் மனித உரிமை, ஜனநாயக உரிமை, மனிதாபிமானம், போலீசின் அக்கிரமம் இதைப் பற்றியெல்லாம் எப்போதாவது எண்ணிப் பார்த்தது உண்டா? நெல்லை - மாஞ்சோலை தேயிலை தோட்டத் தொழிலாளர்களைக் குழந்தை குட்டிகளோடு தாமிரவருணி ஆற்றில் தள்ளிப் படுகொலை செய்ததோடு, இறந்தவர்களின் பிணங்களைக்கூட நிர்வாணமாக அடுக்கி வைத்தபோது, விருகம்பாக்கம் சித்ராவைக் கற்பழித்து தற்கொலைக்குத் தள்ளிய போலீசை நியாயப்படுத்திய போது, தர்மபுரியில் 3000 போலீசைக் குவித்து நக்சல்பாரி இளைஞர் ரவீந்திரனைப் படுகொலை செய்தபோது, நீலகிரி தேயிலை விவசாய இளைஞர்களை நிர்வாணப்படுத்தி இழுத்துப் போனபோது - இந்த மனித உரிமை, மனிதாபிமானம், போலீசு அக்கிரமம் எல்லாம் தெரியவில்லையா? சாமானியர்களை வேட்டையாடும்போது, போலீசைப் பாராட்டி ஏராளமான சலுகைகள் வழங்கினாரே கருணாநிதி! அதற்குப் பழக்கப்பட்டுப் போனவர்கள்தான், இப்போது ஜெயலலிதா போன்ற பாசிச - வக்கிர வெறியர்கள் ஏவிவிடும் போது திருப்பித் தாக்குகின்றனர்.

1976-77 அவசர நிலைக்குப் பிறகு கருணாநிதிக்கு எதிராக திரும்பத் திரும்ப அரசியல் தாக்குதல் வருவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதுதான் கருணாநிதி நடத்தும் சமரசவாத தற்காப்பு அரசியல். தொழில்முறை அரசியல்வாதியாக இருந்த கருணாநிதியின் குடும்பம் தரகு அதிகார முதலாளி குடும்பமாக வளர்ந்து விட்டதால் ஆளும் வர்க்க அரசியலுக்கு மாறிப் போய்விட்டனர். பலமுறை ஆட்சி கலைக்கப்பட்டும், ராஜீவ் கொலை - கோவைக் குண்டு வெடிப்பு, புலி ஆதரவு, துப்பாக்கிக் கலாச்சாரம், முசுலீம் மதவெறி, வெடிகுண்டு கலாச்சார - பிரிவினைவாத அரசியல் எல்லாவற்றுக்கும் கருணாநிதிதான் காரணம் என்று பார்ப்பன - பாசிஸ்டுகள் செய்துவரும் பிரச்சாரத்தை எதிர்த்துத் தாக்குதல் தொடுக்கும் திராணியற்றதாக கருணாநிதியும் கழகமும் உள்ளது. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு டெல்லியின் ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் மாறி மாறி கூட்டு வைத்துக் கொண்டு அரசியல் நடத்தும் சமரசவாத தற்காப்பு அரசியல்தான் இந்த நிலைக்கு திமுகவைத் தள்ளியுள்ளது.

கருணாநிதியும் அவரது கழகமும் எப்படிப் போனாலும், ஜெயலலிதா போன்ற நாடறிந்த கிரிமினல் குற்றவாளிகள் எவ்விதத் தடையுமின்றி அதிகாரத்தைப் பிடித்து பயங்கரவாத - கிரிமினல் போலீசு ஆட்சி நடத்துவதை சாமானியர்கள் எப்படி எதிர்கொள்வது? கருணாநிதியைப் போல சட்டபூர்வ, சமரசத் தீர்வுக்குக் காத்திருக்க வேண்டுமா? வேறு வழிகளைத் தேடிப் புறப்படுவதா?

•

படிப்பகம்

www.padippakam.com



# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

ஒரு காலத்தில் உலகின் புரட்சி மையங்களாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியம், சீனா ஆகியவற்றின் கம்யூனிசக் கட்சிகளும் கூட வலது அல்லது இடது சந்தர்ப்பவாதத் தவறுகள் செய்திருக்கின்றன; ஆனால், அரசியல் சித்தாந்தத் தவறுகள் எதுவுமே செய்யாத, எப்போதும் இடது, வலது விலகல்களைத் தவிர்த்தும் எதிர்த்தும் சரியான பாதையில் எப்போதும் பீடுநடை போட்டு வரும் கட்சி சி.பி.(எம்) தான் என்று பெருமையடித்துக் கொள்கிறது அக்கட்சித் தலைமை.

ஆனால், கம்யூனிச, சோசலிச சமுதாயங்கள், சோசலிசத்தின் அரசியல், பொருளாதார அமைப்புகள், சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் பாதை – இவை போன்ற பல பிரச்சினைகள் மீது சி.பி.(எம்) கட்சி கொண்டுள்ள கண்ணோட்டம் மிக மிக மேலோட்டமானது; நுனிப் புல் மேய்வது; பாமரத்தனமானது; பல சமயம் கம்யூனிசம் - சோசலிசம் ஆகியவற்றின் எதிரிகள் கொண்டுள்ள கண்ணோட்டத்தோடு ஒத்துப் போவதாகும். நிலமும் ஆலைகளும் அரசுடைமையாக்கப்பட்டிருப்பதே சோசலிசத்துக்கான வரையறுப்பு என்ற சூத்திரத்தையே அக்கட்சி கொண்டிருக்கிறது.

சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலின் மரணத்துக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசின் தலைமையைக் கைப்பற்றிய குருச்சேவ் தலைமை 20-வது மற்றும் 22-வது கட்சிக் காங்கிரசுகளில் சரஞ்சரமான திருத்தல்வாதங்களைப் பிரகடனம் செய்து அமலாக்கியது. இது குறித்து, ''சோவியத் ஒன்றியம் ஒரு சோசலிச நாடுதான். ஆனால் அங்கு சோசலிச அரசு நீடித்திருப்பதற்கு திருத்தல்வாத தலைவர்கள் ஆபத்து விளைவிக்கிறார்கள்'' என்று சி.பி.(எம்) தலைமை 1970-இல் கூறியது.

''கேடு விளைவிக்கும் திருத்தல்வாதக் கொள்கைகள் சோவியத் ஒன்றியத்தில் ஏற்படுத்தும் பொருளாதாரத் தாக்கம் குறித்து விரிவானதொரு ஆய்வை சி.பி.(எம்). மைய குழு செய்யவில்லை என்பதை உணர வேண்டும். சோவியத் ஒன்றியத்தில் சோசலிச அமைப்பு நீடித்திருக்கிறது என்று அறியும் அதே சமயம், முதலாளித்துவ ஊக்கமளிப்பு என்ற கண்ணோட்டம் மற்றும் கொள்கையாலும் தனிநபர் இலாபம் என்ற கருத்தாலும் ஒரு புது வகையான முதலாளித்துவம் மீண்டும் அங்கு நிலைநாட்டப்படுவதற்கான ஆபத்திருப்பதை அது சுட்டிக் காட்டுகிறது'' என்று அதே 1970-இல் சி.பி.(எம்) தலைமை சொன்னது.

சோவியத் ஒன்றியத்தில் சோசலிச அரசு நீடிப்பதற்கு திருத்தல்வாதத் தலைவர்கள் ஆபத்து விளைவிக்கிறார்கள் என்றும், அங்கு ஒரு புதுவகையான முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்படுவதற்கான ஆபத்திருக்கிறது என்றும் கூறிய சி.பி.(எம்) தலைமை என்ன செய்திருக்க வேண்டும்? சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்டு வந்த நிகழ்ச்சிப் போக்குகளை உன்னிப்பாகவும், விமர்சனபூர்வமாகவும் கவனித்து வந்திருக்கவேண்டும் அல்லவா?

கேடு விளைவிக்கும் திருத்தல்வாதக் கொள்கைகள் சோவியத் ஒன்றியத்தில் ஏற்படுத்தும் பொருளாதாரத் தாக்கம் குறித்து விரிவானதொரு ஆய்வை சி.பி.(எம்) மையக் குழு செய்யவில்லை என்று 1970-இல் சொன்ன சி.பி.(எம்) தலைமை, அதன் பிறகு எப்போதாவது அவ்வாறு செய்ததா? அதுவும் தானே கூறியவாறு, அந்நாட்டு திருத்தல்வாதத் தலைவர்களால் ஏற்பட உள்ள ஆபத்துக்கள் பற்றி அறிந்திருந்தும் விரிவானதொரு ஆய்வை சி.பி.(எம்) மையக் குழு செய்யாமலேயே, அங்கு சோசலிச அமைப்பு நீடித்திருக்கிறது என்று சோவியத் ஒன்றியம் கலைக்கப்படும் வரை சி.பி.(எம்) சொல்லி வந்தது சரியா?

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது மற்றும் 22-வது கட்சிக் காங்கிரசுத் தீர்மானங்களைத் திருத்தல்வாதம் என்று ஒருமுறை சி.பி.(எம்) தலைமை விமர்சித்ததோடு சரி; அதுவும் ஒரு கோட்பாடு - கொள்கை ரீதியிலான விமர்சனம்தான். அதன் பிறகு குருசேவ் - புல்கானின், பிரஷ்நேவ் - கோஜிசின் கும்பல்களின் வரிசையில் கோர்பசேவ் வந்து பிரஸ்த்ரோய்க்கா மற்றும் கிளாஸ்நாஸ்ட் என்கிற சீர்திருத்தக் கொள்கையைப் பிரகடனம் செய்து அமலாக்கியபோது கூட, இந்தக் கும்பல்களின் நடவடிக்கைகள் எல்லாம் சோசலிசத்தை கட்டியமைப்பதற்கு அவசியமானவை என்று கூறி சி.பி.(எம்) தலைமை ஆதரித்து நியாயப்படுத்தியது.

குருச்சேவ் காலத்தில் சி.பி.(ஐ) கட்சியோடு மட்டுமே உறவு வைத்திருந்த சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சி பிரஷ்நேவ் காலத்தில் சி.பி.(எம்) கட்சியையும் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது. அதன் பிறகு தூதுக் குழுக்களாகப் போய் வருவதும், சி.பி.(எம்) தலைவர்கள் மருத்துவ சிகிச்சைகளுக்காக மட்டுமின்றி, ஓய்வு - உல்லாச சுற்றுப் பயணம் போய் வருவதும், அவர்களின் வாரிசுகள் கல்வி கற்றுத் திரும்புவதும், சி.பி.(எம்) தேர்தல் நன்கொடை பெறுவதும் என்று சோவியத் ஒன்றியத்துடன் நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொண்டது.

குருச்சேவ் தலைமையால் அறிவிக்கப்பட்டு அமலாக்கப்பட்ட திருத்தல்வாதங்கள், அவற்றால் சோவியத் ஒன்றியத்தின் கட்சி, அரசு மற்றும் சமூகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கம் குறித்து சி.பி.(எம்) மறந்தே போனது. சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சி, அரசுத் தலைமை, மற்றும் அதிகார வர்க்கத்தினரின் முறைகேடுகள், இலஞ்ச ஊழல்கள், அங்கே பெருகிவந்த அரசியல் பொருளாதார நெருக்கடிகள், அவற்றுக்குக் காரணமான இராணுவமயமாக்கல் ஆகியவை பற்றிய உண்மை விவரங்களும் விமர்சனங்களும் கூறப்படும் போது, ''இவையெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகளின் பொய்ப் பிரச்சாரங்கள்'' என்று சி.பி.(எம்) கட்சி அடியோடு நிராகரித்து விட்டது.

ஆப்கானிஸ்தான், தெற்கு ஏமன், எத்தியோப்பியா போன்ற நாடுகளில் இராணுவ அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகள் நடத்தி சோவியத் ஒன்றியத்தின் பொம்மை அரசுகள் நிறுவப்பட்ட போது, அவையெல்லாம் சோசலிசப் புரட்சிகள் என்றும், அந்நாடுகளில் சோசலிச அரசுகள் நிறுவப்பட்டுவிட்டதாகவும் சி.பி.(எம்) கட்சி பிரகடனம் செய்தது.

''அமைதி வழி மாற்றம்'' என்கிற சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சியின் திருத்தல்வாதம், நாடாளுமன்றப் பாதையின் மீது மாயையை ஏற்படுத்துகிறது என்று முன்பு விமர்சித்தது சி.பி.(எம்); ஆனால் சிலியில் நாடாளுமன்றத் தேர்தல்கள் மூலம் அதிகாரபூர்வ சட்டவாத கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் ஆட்சியைப் பிடித்ததை சோவியத் ஒன்றியத்தோடு சேர்ந்து கொண்டு தூக்கிப் பிடித்து நியாயப்படுத்தியது. ஆனால், ஓராண்டுக்குள் அங்கு இராணுவ அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி பாசிச ஆட்சி நிறுவப்பட்டது. அப்போதும் நாடாளுமன்றப் பாதைமீது சிலி நாட்டுத் திருத்தல்வாதிகள் வைத்திருந்த மாயையைத் தோலுரித்துக் காட்டுவதற்கு பதில், ஆட்சிக் கவிழ்ப்பில் அமெரிக்கச் சதி பற்றியே பேசியது.

இந்தியாவில் நேரு - இந்திரா பரம்பரை தலைமை, முதலாளித்துவமற்ற பாதையில் தேசிய ஜனநாயக புரட்சியையும் அதைத் தொடர்ந்து சோசலிச சமுதாயத்தையும் நோக்கிய முற்போக்கு ஆட்சி நடத்துவதாக சி.பி.ஐ. மட்டுமல்ல; சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டு கட்சியும் கூறியது. இதன் காரணமாக அதன் இலஞ்ச ஊழல் - அதிகார முறைகேடு மற்றும் 1975-77 அவசர நிலை பாசிச பிரகடனத்தைக் கூட ஆதரித்தது. அப்போது கூட சோவியத் ஒன்றியத் தலைமையை சி.பி.எம். விமர்சிக்கவில்லை. வெறுமனே தனது வியப்பை மட்டும் அறிவித்தது. சி.பி.(எம்) கட்சியினால் சோசலிச நாடு என்று கருதப்பட்ட சோவியத் ஒன்றியம் ஏன்


படிப்பகம்

www.padippakam.com

இப்படிச் செய்தது என்று பரிசீலிக்கவே இல்லை.

நேரு – இந்திரா அரசுடன் பொருளாதார ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு, இந்தியாவில் அதிகார வர்க்க முதலாளித்துவத்தை வளர்ப்பதற்கு சோவியத் ஒன்றியம் உதவி செய்த போது, அது ஏகாதிபத்திய எதிர்ப்பு சுயசார்புக்கு உதவுவதாக சித்தரித்தது. அதே சமயம் அரசுத்துறைத் தொழில்கள் பெரு முதலாளிகளின் வளர்ச்சிக்குத்தான் உதவுகின்றன என்றும் சி.பி.(எம்) கூறியது. அதாவது அரசுடமை அதிகார வர்க்கப் பொருளாதாரமும் - தொழில்களும் சோவியத் ஒன்றியக் கூட்டுடன் நடந்தால் அவை முற்போக்கானவை, ஏகாதிபத்திய எதிர்ப்பு சுயசார்பு வளர்ச்சிக்கானவை என்றும், அவை பிற மேற்கு ஏகாதிபத்திய கூட்டுடன் நடந்தால் பெருமுதலாளிகளின் வளர்ச்சிக்கானவை என்றும் கூறி இரட்டை நாடகமாடியது.

சோசலிசத்திற்கான அமைதிவழி மாற்றம் என்பதைப் பொதுவிதியாக்கி, ஒரு தரப்பாக அழுத்தம் தருவது திருத்தல்வாத கண்ணோட்டம் என்றும், அது புரட்சிகர உணர்வைக் குன்றச்செய்யும், நாடாளுமன்ற மாயைகளைப் பரப்பும் என்றும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சியின் நிலை பற்றி 1970-இல் விமர்சித்தது சி.பி.(எம்). அதேசமயம் சோசலிசத்திற்கான அமைதி வழி மாற்றம், முதலாளித்துவமற்ற பாதை, நாடாளுமன்றப் பாதை ஆகியவை முதலாளித்துவம் வளர்ச்சியுறாத நாடுகளுக்கும் பொருந்தும் என்றும் அப்போதே சி.பி.(எம்) கட்சி ஏற்றுக் கொண்டது. ஆனால், இந்திய முதலாளித்துவம், பெரு முதலாளித்துவமாகவும், ஏகபோக முதலாளித்துவமாகவும் வளர்ந்து விட்டது; ஆகவே, இங்கு முதலாளித்துவமற்ற பாதை சாத்தியமில்லை என்றும் வாதாடியது.

இதுவும் கூட சி.பி.ஐ. கட்சியைவிட தான், புரட்சிகரமானதென்று வேறுபடுத்திக் காட்டுவதற்காக சி.பி.(எம்) வைத்த வாதம் தானே தவிர வேறொன்றும் இல்லை. முதலாளித்துவமற்ற பாதை இந்த நாட்டில் சாத்தியமில்லை என்று கூறியதைப் போல, சோசலிசத்திற்கான அமைதி வழி மாற்றமும் இங்கு சாத்தியமில்லை; நாடாளுமன்றப் பாதை மூலம் புரட்சியும் சாத்தியமில்லை என்று சி.பி.(எம்) கட்சி திட்டவட்டமாக அறிவிக்க மறுக்கிறது. அப்படிக் கேட்பது எதிரிகளிடம் சிக்க வைக்கும் சூழ்ச்சி என்று மற்றவர் மீது பழிபோட்டு நழுவிக் கொள்கிறது. அதற்குப் பதிலாக அமைதி வழி மாற்றத்துக்கே சி.பி.(எம்) கட்சி விழைகிறது. ஆனால், ஆளும் வர்க்கங்கள் அதற்கு அனுமதித்த தில்லை என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, எச்சரிக்கையாக இருந்து எல்லா நிலைமைகளையும் எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கும் என்று பொத்தாம் பொதுவாகக் கூறி பூசி மெழுகுகிறது. இதன் மூலம் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் இந்திய சி.பி.(ஐ) இன் திருத்தல்வாதத்தை எதிர்த்து நிராகரிப்பதாகக் கூறிக் கொண்டு, அதே பாதையில் சி.பி(எம்) கட்சியும் நடைபோடுகிறது. அக்கட்சி உதயமாகி 35 ஆண்டுகளுக்கு மேலான அதன் நடைமுறை, நாடாளுமன்றப் பாதையின் மீதான அதன் உறுதியையே காட்டுகிறது. அதுமட்டுமல்ல, இந்திய நாடாளுமன்றத்துக்கு வலதுசாரிகளிடமிருந்து ஆபத்து வந்திருப்பதாகக் கூறி நாடாளுமன்ற அமைப்பைப் பாதுகாக்கும் 'புரட்சி'ப் பணியையும் சி.பி.(எம்) தலைமீது ஏற்றிக் கொண்டு சுமக்கிறது.

இவ்வாறு தன்னுடைய கொள்கையும் நடைமுறையுமே திருத்தல்வாதம் என்பதால்தான் சோவியத் ஒன்றியத்தின் சமூக,



இந்தியாவில் "பொதுத்துறை" என்ற போர்வையில் அதிகார வர்க்க முதலாளித் துவத்தை ஊட்டி வளர்க்க உதவிய பிரஷ்னேவ், பாசிச இந்திராவுடன்.

பொருளாதார, அரசியல் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு கொள்ளாமல் கண்ணை மூடிக் கொண்டு சி.பி.(எம்) கட்சி அந்நாட்டில் சோசலிசம் நீடித்திருப்பதாகச் சாதித்து வந்தது. 1991-இல் கோர்பச்சேவ், யெல்த்சின் கும்பல் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி சோவியத் ஒன்றியத்தையும் கட்சியையும் கலைத்துவிட்டது. அதற்கு விளக்கம் கொடுக்கப் புறப்பட்ட சி.பி.(எம்) தலைமை அதற்கு முந்தைய 35 ஆண்டுகால வரலாற்றை அடியோடு மூடி மறைக்கும் முயற்சியில் இறங்கியது. குருச்சேவ் முதற் கொண்டு கோர்பச்சேவ் வரை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சி பின்பற்றி வந்த திருத்தல்வாதங்களை, நடைமுறைகள் அது குறித்து தான் 1970-இல் முன் வைத்த கருத்துக்கள் எல்லாவற்றையும் இருட்டடிப்பு செய்து விட்டு, புத்தம் புதிய' விளக்கமளித்த விழைந்தது.

"வரையறுக்கப்படாத பாதையில் சோசலிசத்தை நிர்மாணிக்கும் போக்கில் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகள் பாரிய தவறுகள் புரிந்துவிட்டன. சோசலிச நிர்மாணத்தின் நீடித்த தன்மை குறித்த தவறான புரிதல்; கட்சி மற்றும் அரசின் பாத்திரம் குறித்த தவறான கருத்தோட்டம்; பொருளாதாரம் மற்றும் அதன் நிர்வாகத்தில் உரிய காலத்தில் மாற்றங்களைக் கொண்டு வரத் தவறியது; அரசு, கட்சி மற்றும் சமூகத்தில் சோசலிச ஜனநாயகத்தை ஆழப்படுத்தத் தவறியது; அதிகாரவர்க்கத்தின் வளர்ச்சி; சித்தாந்த உணர்வு குன்றிப் போகுதல் ஆகியவற்றில் இருந்து இம்மாதிரியான தவறுகள் வருகின்றன" என்று சி.பி.(எம்) கட்சியின் மேம்படுத்தப்பட்ட திட்டம் கூறுகிறது.

இது உண்மையில் "சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளில் நடந்த பாரிய தவறுகள்" பற்றிய ஒரு மேலோட்டமான சித்திரம்தான்; கறாரான ஆழமான வரையறுப்பு கிடையாது. நடந்துவிட்டதாகக் கூறப்படும் தவறுகளின் பட்டியல் கூட கிடையாது; தவறுகளின் தலைப்புகள்தாம். இந்தத் தலைப்புகளுக்குள் ஆழமாகச்செல்வதற்குசி.பி.(எம்) கட்சி மறுக்கிறது.

"சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளில்" நடந்த இந்தப் பாரிய தவறுகள் எப்போதிருந்து, எந்தத் தலைமையினால் நேர்ந்தன. லெனின், ஸ்டாலின் காலத்திலிருந்தே நடந்து வருகின்றனவா? இடையிலிருந்தா? குருச்சேவ் காலத்தில் பிரகடனம் செய்து தொடர்ந்து பின்பற்றப்பட்ட திருத்தல்வாதங்களினால் ஏற்பட்டவையா? அல்லது 'அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையா? "சோவியத் ஒன்றியத் திருத்தல்வாதத் தலைவர்கள் சோசலிச அரசுக்கு ஆபத்து விளைவிக்கிறார்கள், அங்கு ஒரு புதுவகையான முதலாளித்துவம் நிலைநாட்டப்படுவதற்கான ஆபத்திருக்கிறது" என்று 1970-இல் சி.பி(எம்) சுட்டிக் காட்டியதே, அதற்கும், பிறகு அங்கு "நடந்த பாரிய தவறுகளுக்கும் ஏதாவது தொடர்பிருக்கிறதா?"

"சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிசநாடுகளின் சோசலிசநிர்மாணம்" குறித்து 1960-களில் இருந்தே பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன; மாபெரும் விவாதங்கள் நடந்திருக்கின்றன. குறிப்பாக மாசேதுங் மற்றும் உலக மார்க்சிய லெனினிய வாதிகளாலும், கம்யூனிச ஆதரவு அரசியல், சமூகப் பொருளாதார ஆய்வாளர்களாலும் சோவியத் ஒன்றியத் திருத்தல்வாதக் கண்ணோட்டங்களும் நடைமுறையும் விமர்சிக்கப்பட்டுள்ளன. இவை

www.padippakam.com

யெல்லாம் சோவியத் ஒன்றிய சோசலிசத்துக்கு எதிராக அமெரிக்கக் கைக்கூலிகள் செய்யும் அவதூறுப் பிரச்சாரங்கள் என்று சி.பி.(எம்) நிராகரித்து வந்திருக்கிறது. சி.பி.(எம்) கட்சித் தலைவர்கள் பலமுறை சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளுக்குப் பயணம் போய் ''அங்கு நடக்கும் சோசலிச நிர்மாணம்'' குறித்து விமர்சனம் ஏதுமின்றி வானளாவப் புகழ்ந்திருக்கிறார்கள். இப்போது அங்கு நேர்ந்துவிட்ட பாரிய தவறுகள் குறித்து மூன்றாம் மனிதர்களைப் போல ஒதுங்கி நின்று விளக்கமளிப்பது எந்த வகையில் நியாயமானது?

குறிப்பாக, சீனப் புரட்சி வெற்றி பெற்று, மக்கள் ஜனநாயகத்தை நிறுவியபிறகு, சோசலிசக் கட்டுமானத்தில் அடியெடுத்து வைத்த போது, இங்கே சி.பி.(எம்) குறிப்பிடும் பாரிய பிரச்சினைகள் மீதான அரசியல் - சித்தாந்த போராட்டம் துவங்கிவிட்டது. சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலான இருவழிப் போராட்டங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். சோவியத் ஒன்றியத்தில் கட்சி மற்றும் அரசின் தலைமையை குருச்சேவ் கும்பல் கைப்பற்றி, சரஞ்சரமாக திருத்தல்வாதங்களை முன் தள்ளிய போது, சீனத்தில் அதன் சகபாடிகள் லியு சோசி தலைமையில் திரண்டனர். சீனத்தில் கம்யூன் முறையை நிறுவி, மாபெரும் முன்னெடுப்பு இயக்கம் துவங்குவதை அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். சோசலிச சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கும் வீழ்த்தப்பட்ட முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடுதான் பிரதான முரண்பாடு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி தொடர வேண்டும் என்கிற புரட்சிகர நிலையை எதிர்த்தார்கள்.

''சீனத்தில் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றவுடன் வர்க்க முரண்பாடுகளும், வர்க்கப் போராட்டங்களும் முடிவுக்கு வந்துவிட்டன. இங்கு முன்னேறிய சமூக அமைப்புக்கும் பின்தங்கிய உற்பத்திக்கும் இடையிலான முரண்பாடுதான் பிரதானமான முரண்பாடு. ஆகவே, வர்க்கப் போராட்ட பாதையை கைவிட்டு பொருளாதார நிர்மானத்தில்தான் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக தனிநபர் இலாபம், தனிநபர் மூலதன தொழில் ஊக்குவிப்பு ஆகிய பாதையில் முன்னேறுவதுதான் சீனத்தின் முக்கியக் கடமை'' என்று வாதிட்டதோடு பாட்டாளி வர்க்க முன் முயற்சியில் நடைபெற்று வந்த மாபெரும் முன்னெடுப்பு இயக்கத்தை சீர்குலைக்கவும் முயன்றனர். அம்முயற்சி முறியடிக்கப்பட்டபோது, சோசலிச நிர்மாணத்தில் சீனம் பாய்ச்சல் வேகத்தில் முன்னேறியதை உலகமே கண்டு வியந்தது.

அதன்பிறகும் தொடர்ந்த இருவழிப் போராட்டத்தின் போக்கில், சீனத்தில் மாபெரும் கலாச்சாரப் புரட்சி வெடித்தது. 1871 பாரின் கம்யூன், 1917 ருசிய அக்டோபர் புரட்சி, 1949 சீன நவம்பர் புரட்சியைப் போல சீனத்தில் வெடித்த மாபெரும் கலாச்சாரப் புரட்சி மார்க்சிய – லெனினிய வரலாற்றில் மகத்தான மைல்கல். ஒரு முறை புரட்சி வெற்றி பெற்ற பின், வீழ்த்தப்பட்ட முதலாளிகள் இல்லாமல் போய் விடுவதால் முதலாளித்துவ மீட்பு என்பது சாத்தியமே இல்லை என்று சி.பி.(எம்) உட்பட உலகத் திருத்தல்வாதிகள் குருட்டுத்தனமாக நம்பிக் கொண்டிருந்தபோது, கட்சிக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் முதலாளித்துவப் பாதையாளர்களின் முதலாளித்துவ மீட்பு முயற்சிக்கு எதிராக மாபெரும் புரட்சி நடத்திக் கொண்டிருந்தது, மாவோ தலைமையிலான சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி.

சோசலிசத்தை நிர்மாணிக்கும் போக்கில் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகள் புரிந்துவிட்ட பாரிய தவறுகளுக்கான அடிப்படைகளாக இப்போது சி.பி.(எம்) கட்சி பட்டியலிடும் எல்லாத் தலைப்புகளும் உள்ளடக்கிய பிரச்சினைகள் மாபெரும் கலாச்சார புரட்சியின்போது எழுந்தன. இப்பிரச்சினைகள் மீது சீனத்தில், சோசலிசப் பாதையாளர்களுக்கும் முதலாளித்துவப் பாதையாளர்களுக்கும் இடையிலான இருவழிகளுக்கிடையிலான நடைமுறைப் புரட்சிப் போராட்டமாக உக்கிரமாக நடந்து கொண்டிருந்தபோது, உலகமெங்கும் மார்க்சிய - லெனினிய வாதிகளிடையேயும், கம்யூனிச ஆய்வாளர்களிடையேயும் மாபெரும் வாதங்களும் சித்தாந்தப் போராட்டமாகவும் நடந்தது. அப்போது மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் அடிமட்ட உறுப்பினர்கள் அறிந்திருந்த அளவு, அக்கறை செலுத்திய அளவு கூட, சி.பி.(எம்), சி.பி.(ஐ) கட்சிகளின் தலைமைக் குழு உறுப்பினர்கள் இவைபற்றிய அறிவு பெற்றிருக்கவில்லை. சீனத்தில் கலாச்சார புரட்சி என்கிற பெயரில் மாவோ தலைமை புதிய டிராஸ்கிய வாத, குறுங்குழுவாத அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்ற சோவியத் ஒன்றியத் திருத்தல்வாதிகளின் அவதூறுப் பிரச்சாரத்தை சி.பி.(எம்) கட்சி அப்படியே பிரதிபலித்தது. அங்கு லியு-சோசி, தெங்சியாவோபிங் போன்ற உண்மையான கம்யூனிஸ்ட் தலைவர்கள் பழிவாங்கப்படுவதாக குற்றஞ்சாட்டியது. மாபெரும் கலாச்சாரப் புரட்சியைக் கொச்சைப்படுத்தியது.

இவ்வாறு சோவியத் ஒன்றியத்தில் குருச்சேவ் கும்பல் முன் வைத்து தொடர்ந்து அமலாக்கப்பட்ட திருத்தல்வாதங்கள், சீனாவில் முதலாளித்துவ மீட்புக்கு எதிராக நடந்த மாபெரும் கலாச்சார புரட்சி, அவற்றின் மீது சி.பி.(எம்) கட்சி 1970-இல் முன் வைத்த விமர்சனங்கள் எல்லாவற்றையும் முற்றிலும் இருட்டடிப்பு செய்து விட்டு, சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளில் ஏற்பட்ட பின்னடைவு குறித்து முற்றிலும் புதிய விளக்கம் தர சி.பி.(எம்) முயன்றுள்ளது. இதுவும் எந்தவொரு சுயமான ஆழமான ஆய்வின் அடிப்படையில் அல்ல. சோவியத் ஒன்றியம் மற்றும் சீனத்தில் உள்ள திருத்தல்வாதிகளால் முன் வைக்கப்படும் கோட்பாடுகளைத்தான் சி.பி.(எம்) வாந்தி எடுக்கிறது.

— தொடரும்



கலாச்சாரப் புரட்சியின் பொழுது, கட்சிக்குள் இருந்த முதலாளித்துவப் பாதையாளர்களை அவமானப்படுத்தி சீன மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளிடம் நிலமோசடி செய்த கல்லூரி அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

திருச்சியிலிருந்து துறையூர் செல்லும் வழியில் கரட்டாம்பட்டி கிராமத்தில் "ஜெயராம் பொறியியல் கல்லூரி" எனும் சுய நிதிக் கல்வி நிறுவனத்தை நில முதலையான சுப்ரமணியம் என்பவர் நடத்தி வருகிறார். இக்கல்லூரிக்கான நிலம் வாங்கும்போது, இங்கு அரசு கல்லூரி வரப் போகிறது என்று பொய் சொல்லி ஏய்த்து விவசாயிகளிடம் ரூ. 1000, ரூ. 2000 என முன் பணம் கொடுத்து, பின்னர் அரசாங்கத்திடம் சொல்லி முழுப் பணத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறி இக்கல்லூரியின் அதிபர் சுப்ரமணியமும், கரட்டாம்பட்டி முன்னாள் பஞ்சாயத்துத் தலைவரான துரைசாமி ரெட்டியும் விவசாயிகளிடம் கிரயப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு மோசடி செய்துள்ளனர். வாக்களித்தபடி நிலத்திற்கான தொகையை இன்றுவரை அவர்கள் கொடுக்கவில்லை. இது தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தில் பெறப்பட்ட தடை ஆணையையும் மீறி, நில முதலை சுப்ரமணியம் கட்டிடங்கள் எழுப்பி ஆக்கிரமித்துள்ளார். நியாயம் கேட்கும் விவசாயிகளைக் குண்டர்களை ஏவித் தாக்கியும் கடத்தியும் மிரட்டியும் வருகிறார். இவர்களால் ஏமாற்றப்பட்ட விவசாயிகள் பல வழிகளில் போராடிப் பார்த்துப் பலனேதுமில்லாததால், வி.வி.மு.விடம் முறையிட்டனர்.

இப்பிரச்சினையை விளக்கி இப்பகுதி முழுவதும் வி.வி.மு பிரச்சாரம் செய்து சுப்ரமணியம் கும்பலை அம்பலப்படுத்தியதும், பீதியடைந்த இக்கும்பல் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முன்வருவதாக ஒப்புக் கொண்டது. நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கருக்கு ரூ. 2 லட்சமும், இப்பகுதியில் 5 கிராமங்களின் மாணவர்களுக்கு கல்லூரியில் 10% இலவச இட ஒதுக்கீடும் தரவேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கேட்கப்பட்டதை, சுப்ரமணியம் கும்பல் ஏற்க மறுத்தது. தொடர்ந்து 3 முறை பேச்சுவார்த்தை நடத்தியும் இக்கும்பல் மசியாமல், விவசாயிகளை மோசடி செய்வதிலேயே குறியாக இருந்தது.

இக்கும்பலின் மோசடியை அம்பலப்படுத்தி வி.வி.மு. சுவரொட்டிப் பிரச்சாரம் மேற்கொண்டதும், திருச்சி மாவட்ட தி.மு.க பிரதிநிதியும் கரட்டாம்பட்டி முன்னாள் பஞ்சாயத்துத் தலைவருமான துரைசாமி ரெட்டி, இச்சுவரொட்டிகளைக் கிழித்தும், போலீசில் பொய்ப் புகார் கொடுத்தும் சாதிக் கலவரமாக்கி போராட்டத்தைத் திசைதிருப்ப முயன்று தோற்றுப் போனார். அம்பலப்பட்டு போன இக்கும்பல் திருச்சி மாநகர போலீசு துணை ஆய்வாளர் மூலம் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு முயற்சித்தது. அதைத் தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தையிலும், விவசாயிகள் சார்பில் எவ்வளவோ இறங்கி வந்த போதிலும் இந்தக் கும்பல் எந்த உடன்பாட்டுக்கும் வரமறுத்தது. இனி இம்மோசடிக் கும்பலிடம் பேசிப் பயனில்லை என்று வி.வி.மு. விவசாயிகளையும் உழைக்கும் மக்களையும் திரட்டிப் போராடுவதே ஒரே தீர்வு என முடிவு செய்தது.

இதன்படி, ஜெயராம் பொறியியல் கல்லூரியை அரசுடைமையாக்கக் கோரியும், மோசடிக் கும்பலைக் கைது செய்து, விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கருக்கு ரூ. 2 லட்சம் கிரயத் தொகை கொடுக்குமாறும், நிலம் கொடுத்த 5 கிராமங்களுக்கு 10% இலவச இட ஒதுக்கீட்டை முன்னுரிமையாக்கக் கோரியும் துறையூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக, ஜூன் 18-ஆம் தேதியன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை வி.வி.மு. நடத்தியது. துறையூர் வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் பொம்மன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் திரளான விவசாயிகளும் உழைக்கும் மக்களும் பங்கேற்று ஆதரித்தனர். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து பிரச்சாரம் செய்து வரும் வி.வி.மு., அடுத்த கட்டப் போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகிறது.

**நில மோசடிக் கும்பலைக் கைது செய்யக் கோரி வி.வி.மு. தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டம்.**



**தகவல்:**
**— விவசாயிகள் விடுதலை முன்னணி, துறையூர் வட்டம்.**

# அமைதியின் காவலர்களா? போர் வெறியர்களா?

காசுமீரில் போர் நிறுத்தம், நாகாலாந்தில் போராளிகளுடன் சமாதான முயற்சி, பாகிஸ்தானுடன் சமாதானப் பேச்சு வார்த்தை என சமாதானக் காவலர்களாக நாடகமாடி வரும் இந்திய ஆட்சியாளர்கள் அடுத்து வரும் 15 ஆண்டுகளில் ஏறத்தாழ 4,46,000 கோடி ரூபாய்களை இராணுவச் செலவுகளுக்கு ஒதுக்கத் தீர்மானித்துள்ளார்கள். இதில் ஏறத்தாழ 15% தொகையை - அதாவது 70,000 கோடி ரூபாய் அளவுக்கு அணு ஆயுதத் தயாரிப்புக்கும், 500 கோடி ரூபாய் அளவுக்கு அணு ஆயுத வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடத் தீர்மானித்துள்ளனர். தாக்குதல் விமானம், ஏவுகணைகள், எதிர்த்தாக்குதலை முறியடிக்கும் விமானம் முதலியவற்றை வாங்கி வலுப்படுத்தும் திட்டத்துடன் விமானப் படைக்கு ஏறத்தாழ 1,40,000 கோடி ரூபாயும், கப்பற் படைக்கு ஏறத்தாழ 94,000 கோடி ரூபாயும், தரைப்படைக்கு ஏறத்தாழ 1,20,000 கோடி ரூபாயும் ஒதுக்க முடிவு செய்துள்ளனர். நடப்பாண்டில் மட்டும் இராணுவச் செலவுகளுக்காக ரூ. 70,000 கோடியை ஒதுக்கவும் தீர்மானித்துள்ளனர். இந்த விகிதத்தில் ஆண்டுதோறும் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்தால் 15 ஆண்டுகளில் மொத்த செலவு 10,50,000 கோடியாக உயரும். இந்த பூதாகரமான தொகையானது, இந்தியாவின் மொத்த வெளிநாட்டுக் கடன் தொகைக்குச் சமமானது.

தெற்காசியப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியங்களின் துணை வல்லரசாக மேலாதிக்கம் செய்யும் நோக்கத்தோடு இப்படி பல்லாயிரம் கோடிகளைச் செலவிட்டு வெறிபிடித்த ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டு வரும் இந்திய அரசு, அண்டை நாடுகளுடன் சமாதான உறவு கொள்ளும், உள்நாட்டில் மக்களின் சனநாயக உரிமைகளை மதித்து நடக்கும் என்று இனியும் நம்ப முடியுமா?

www.padippakam.com

## தாராளமயத்தின் அடுத்த பலி

# கடலை விவசாயிகளின் கண்ணீர்க் கதை

வயிற்றுவலி. அது மிகக் கொடுமையானது. நவீன மருத்துவ வசதிகளும், சிகிச்சைக்கான ஆரம்ப சுகாதார நிலையங்களும் இருந்த போதிலும் தீராத வயிற்றுவலியின் கொடுமை தாளாமல் ஏழைகள் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஒருவரல்ல, இருவரல்ல; ஆந்திர மாநிலத்தின் அனந்தபூர் மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இப்படித் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானோர் கடலை பயிரிடும் சிறு விவசாயிகள். பூச்சி மருந்துகளில் எது கொடிய நஞ்சானது என்று அவர்களுக்குத் தெரியும். அதிலும் ஆந்திராவில் அரசாங்கமே "மானோக்ரோடோபாஸ்" பூச்சி மருந்தை கடலை விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிப்பதால், அவர்கள் இந்தப் பூச்சி மருந்தைக் குடித்து மலிவான வழியில் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இப்படி, ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்தில் 1997-லிருந்து 2000 ஆண்டு வரை கடலை விவசாயிகள் 1826 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இதில் தீராத வயிற்றுவலியின் காரணமாக பூச்சி மருந்து குடித்து மாண்டவர்கள் மட்டும் 868 பேர். மீதி 900-க்கும் மேற்பட்டோர் தூக்கிலிட்டுக் கொண்டு அல்லது வேறு வழிகளில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த ஓராண்டில் மட்டும் இப்படி தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 577 ஆகும்.

ஆந்திராவில் மட்டும், குறிப்பாக அனந்தபூர் மாவட்டத்தில் மட்டும், அதிலும் குறிப்பாக கடலை விவசாயிகள் மட்டும் தீராத வயிற்று வலியால் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று செய்திகள் வெளியானால் அது நாட்டின் கவனத்தை ஈர்க்கும்; என்ன காரணம் என்ற கேள்விகள் எழும்; விசாரணைகள் தொடங்கும்; இதனால் அரசாங்கத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படும் என்று போலீசார் தமக்கே உரித்தான கிரிமினல் மூளையுடன் பதிவேடுகளைத் தயாரித்தார்கள். இதன்படி, "காதல் தோல்வியால் தற்கொலை, பள்ளி - கல்லூரித் தேர்வில் தோல்வியடைந்ததால் தற்கொலை, கணவன் அல்லது மனைவியின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் தற்கொலை, கள்ளக் காதலனுடன் மனைவி ஓடிப்போனதால் மனமுடைந்து தற்கொலை, ஆசைக்கு மனைவி இணங்க மறுத்ததால் தற்கொலை, குடிகார கணவனால் விரக்தியடைந்து தற்கொலை, குடும்பத் தகராறு காரணமாக நிம்மதி இழந்ததால் தற்கொலை, தீராத நோய் காரணமாக தற்கொலை - என பலதரப்பட்ட கதைகளுடன் போலீசு தயாரித்த குற்றப் பதிவேடுகளின்படி நாளேடுகளில் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் ஆந்திரக் கடலை விவசாயிகளின் சாவுக்கு போலீசார் கூறும் கதைகளோ, தீராத வயிற்று வலியோ உண்மையான காரணமல்ல; அதற்குக் காரணம் ஒரு கொள்ளை நோய்! தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற நாட்டு விரோத, மக்கள் விரோதக் கொள்கையால் விளைந்த கொடிய நோய். அந்த நோய் தாக்கி மீளமுடியாத வேதனையில் தவித்த விவசாயிகள், தற்கொலைத் தீர்வைத் தேடிக் கொண்டார்கள். ஒருவரல்ல, இருவரல்ல, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 1826 பேர்!

ஆந்திர மாநிலத்தின் தென்மேற்கே கர்நாடகத்தை ஒட்டியுள்ள அனந்தபூர் மாவட்டம் குறைந்த அளவுக்கே மழை பெய்யும் வறண்ட பகுதியாகும். குடிநீருக்கே கடுமையான தட்டுப்பாடு நிலவும் அம்மாவட்டத்தில் கோக்கும் பெப்சியும் தாராளமாக கடைகளில் கிடைக்கிறது. பணப்பயிரான கடலை விவசாயம்தான் இம்மாவட்டத்தின் பிரதான தொழில். ஏறத்தாழ 8 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் இங்கு கடலை பயிரிடப்படுகிறது. இருப்பினும் தொடர்ச்சியாக உற்பத்திச் செலவு அதிகரிப்பாலும், கடலைக்கு உரிய விலை கிடைக்காமல் வீழ்ச்சியடைந்ததாலும் கடந்த 4, 5 ஆண்டுகளாக விவசாயிகள் பெருத்த நட்டமடைந்து கடனாளியாகிப் போனார்கள்.

விவசாயிகளுக்கு கடலை விவசாயத்தை விட்டால் வேறு மாற்றுவழி கிடையாது எனவே அடுத்த பருவத்திலாவது நிலைமைகள் மாறும் என்று மீண்டும் கடன் வாங்கினார்கள். ஆனால் 1991-இல் ஒரு குவிண்டால் ரூ. 1100 ஆக இருந்த விதைக் கடலை இப்போது ரூ. 1800-ஆக விலை உயர்ந்தது. ரூ. 180 ஆக இருந்த ஒரு மூட்டை அமோனியம் பாஸ்பேட் விலை இன்று ரூ. 520 ஆக உயர்ந்தது. ஒரு குதிரைச் சக்தி திறன் கொண்ட மோட்டாருக்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ. 95-லிருந்து ரூ. 195-ஆக உயர்ந்தது. மேலும் மின்சாரமும் தொடர்ச்சியாகக் கிடைக்காமல், மின் ஏற்றத் தாழ்வுகளால் பல விவசாயிகளின் மோட்டாரும் எரிந்து போனது. இதனால் பயிருக்கு நீரில்லாமல் பெருத்த பாதிப்பு ஏற்பட்டது. மாவட்டத்திலுள்ள பல ஏரிகள் முறையாகப் பராமரிக்கப்படாமல் தனியார் முதலாளிகளிடம் குத்தகைக்கு விடப்பட்டதால் ஏரி நீர் பாசன வசதியும் குறைந்து விட்டது. பயிருக்கு நீரில்லாமல் தவித்த விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகளை நிறுவத் தொடங்கினார்கள். ஆனால் 300 அடிக்கு கீழேயும் தண்ணீர் கிடைப்பதில்லை. இதனால் ஒரு நடுத்தர விவசாயி தனது 5 ஏக்கர் நிலத்தில் ஏறத்தாழ 12 ஆழ் குழாய் கிணறுகளை நிறுவ வேண்டியதாயிற்று. இதனால் கடன்மேல் கடன் வாங்கி விவசாயிகள் தத்தளித்தார்கள்.

ஆனாலும் கடலைக்கு உரிய விலை கிடைக்கவில்லை. கொள்முதல் விலை சரிந்து கொண்டே போனது. போதாக் குறைக்கு, உலகமயமாக்கலின்படி பாமாயில் இறக்குமதிக்கு பா.ஜ.க. அரசு

'வயிற்று வலியால்' பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்ட கடலை விவசாயி நரசிம்மலுவின் மனைவி லெட்சுமம்மா: தொடரும் துயரம்.



www.padippakam.com

தாராள அனுமதி அளித்து கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கியதும் பாமாயில் வெள்ளமெனப் பாயத் தொடங்கியது. சந்தையில் கடலை எண்ணெயை விட பாமாயில் விலை குறைவாக இருப்பதால், கடலை கொள்முதல் விலை அதள பாதாளத்தில் விழுந்தது. விவசாயிகளின் நம்பிக்கையும் தகர்ந்து போனது.

அடகுக் கடைக்காரர்கள், கந்து வட்டிக்காரர்களிடம் மட்டுமின்றி அரசு வங்கிகளிடமிருந்தும் விவசாயிகள் கடன் வாங்கியிருந்தார்கள். கடலை விலை வீழ்ச்சியால் கடனைச் செலுத்தவோ, வட்டியைக் கட்டவோ விவசாயிகளால் முடியவில்லை. அடகுக் கடை - கந்து வட்டிக்காரர்களின் அட்டூழியம், அனைவரும் அறிந்ததுதான். அவர்களுக்கு இணையாக இப்போது அரசு வங்கிகளும் ஈவிரக்கமின்றி நடந்து கொண்டன. கடந்த மார்ச் - ஏப்ரல் மாதங்களில் கடனைத் திருப்பிச் செலுத்தாத, வட்டி கட்டாத சிறு விவசாயிகளின் அடமானச் சொத்துக்களை ஏலம் விடுவதாக அரசு வங்கிகள் நாளேடுகளில் விளம்பரம் செய்தன.

அரசு வங்கிகள் பெரு முதலாளிகளுக்கும் ஏகபோக வர்த்தகர்களுக்கும் அளித்தள்ள கடனில் வசூலிக்கப்பட முடியாமல் உள்ள தொகையோ ஏறத்தாழ 85,000 கோடி ரூபாயாகும். அம்முதலாளிகளின் சொத்துக்களைக் கைப்பற்ற முன்வராத அரசு வங்கிகள், ஏழை விவசாயிகள் செலுத்தாத, ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த கடனுக்காக அவர்களின் அடமானச் சொத்துக்களை ஏலம் விடுவதில் மட்டும் கறாராக நடந்து கொண்டன.

ஒரு ஏழை விவசாயி தனது மனைவியின் நகையை அடகு வைத்து பெற்ற கடனில் ரூ. 316-ஐ திருப்பிச் செலுத்தாத குற்றத்திற்காக, அடமான நகை ஏலம் விடப்பட்டுள்ளது. சியூடு கிராமத்தைச் சேர்ந்த வெங்கட்ராமையா என்ற விவசாயி ரூ. 20,000 திருப்பிச் செலுத்தாததால், அவரது 10 ஏக்கர் நிலம் ஏலம் விடப்பட்டுள்ளது. அரசு வங்கிகளுக்கு விவசாயிகள் திருப்பிச் செலுத்த வேண்டிய மிகக் குறைந்த தொகையும், மிக அதிக தொகையும் இவ்வளவுதான்! அரசு வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் பாக்கியும் வட்டித் தொகையும் ஏறத்தாழ 15 கோடி ரூபாய்கள் தான். கடந்த பல பத்தாண்டுகளாக பல்லாயிரம் கோடிகளைப் பாக்கி வைத்துள்ள பெரு முதலாளிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசு வங்கிகள், சிறு விவசாயிகளின் அற்பக் கடனை வசூலிக்க மூர்க்கமாக இறங்கியதால், விவசாயிகள் அவமானப்பட்டு மனமுடைந்து போனார்கள்.

ஒருபுறம் அடகுக்கடை - கந்து வட்டிக்காரர்கள்; மறுபுறம் அரசு வங்கிகளின் அடாவடித்தனம்; படித்து முடித்த மகனுக்கு வேலையில்லை; மகளுக்குத் திருமணம் செய்ய முடியவில்லை; பண்டிகை, திருவிழாக்களைக் கொண்டாட முடியவில்லை. கழுத்தை நெறிக்கும் கடன் சுமை, தாளாமல் விரக்தியின் விளிம்புக்கே தள்ளப்பட்ட விவசாயிகள், தேடிக் கொண்ட தீர்வுதான் தற்கொலை!

''இப்பேரு எனும் கிராமத்தைச் சேர்ந்த அனந்தரெட்டி ஏறத்தாழ 200 ஏக்கர் நிலத்தைக் கொண்டுள்ள பெரிய நிலப்பிரபு. கடலை விலை வீழ்ச்சியால் தொடர்ந்து நட்டப்பட்ட அவர் கடனாளியாகிப் போனார். அவரது அடமான நிலங்களும் ஏலம் விடப்பட்டன. அவமானம் தாளாமல் குடும்பத்தோடு அவர் ஊரை விட்டே ஓடிவிட்டார். பாரம்பரியமான அவரது வீடு பராமரிக்கப்படாமல் பூட்டிக்கிடக்கிறது. நிலப்பிரபுவுக்கே இந்த கதி என்றால், எங்கள் நிலைமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை'' என்று குமுறுகிறார் ஒரு சிறு விவசாயி.

இப்படி தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் கொள்ளை நோய் தாக்கி, மீள வழி தெரியாமல் ஆயிரக்கணக்கான கடலை விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனால் தற்கொலை செய்து கொள்வதால் பிரச்சினை தீர்ந்து விடப்போவதில்லை. இதை அனுபவ ரீதியாக உணரத் தொடங்கியுள்ள விவசாயிகள், இப்போது கிராமத்துக்கு வரும் வங்கி அதிகாரிகளை முற்றுகையிட்டு, அவமானப்படுத்தி விரட்டியடித்து, ஏலம் போடுவதை தடுத்து நிறுத்தத் தொடங்கியுள்ளனர். இத்தகைய போர்ட்டம் படிப்படியாக பற்றிப் படர்ந்து வருகிறது.

ஆந்திராவின் அனந்தபூர் மாவட்ட விவசாயிகள் மட்டுமல்ல; உங்கள் பகுதியிலும் விவசாயிகள் சிலர் தற்கொலை செய்து கொள்ளலாம். அதற்கு வயிற்றுவலி அல்லது குடும்பத் தகராறுதான் காரணம் என்று போலீசும் பத்திரிகைகளும் கூறலாம். உண்மையில் அது தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்ளை நோய் காவு கொண்ட பலியாகவும் இருக்கக் கூடும். எனவே எல்லாவற்றையும் சந்தேகியுங்கள்!

• குமார்

**సిండికేట్ బ్యాంక్**

అమరాపురం శాఖ

**బంగారు ఆభరణముల వేలం నోటీసు**

ఈ క్రింద కనబరచిన ఋణగ్రహీతలు మా బ్యాంకు నందు బంగారు నగలు తాకట్టుపెట్టి ఋణము పొందియున్నారు. నోటీసులు పంపినను ఇంతవరకూ ఋణము తిరిగి చెల్లించనందున 7.3.2001 తేదీన మధ్యాహ్నం 3.30 గంటలకు మా శాఖయందు, తాకట్టుపెట్టిన నగలు బహిరంగ వేలం వేయబడును.

| SLNo | JL A/c No. | ఋణగ్రహీత పేరు, చిరునామా | 31.12.2000 నాటికి బాకీ మొత్తం |
|---|---|---|---|
| 1. | 2235/98 | శ్రీమతి శాంతమ్మ, W/o చన్నప్ప అమరాపురం. | 8485 |
| 2. | 2267/98 | శ్రీమతి ఎం.బి.పద్మావతి, W/o బి.తిమ్మప్ప అమరాపురం. | 1830 |
| 3. | 2285/98 | కె.ఎం. కెంచప్ప S/o భీమప్ప తమ్మడేపల్లి. | 316 |
| 4. | 2299/98 | డి.ఎస్.రామచంద్రప్ప S/o చిగరామప్ప గౌడనకుంట | 10390 |
| 5. | 2306/98 | డి.మల్లేశ్వర, S/o డి.మల్లన్న, చిట్నాడుకు. | 1065 |
| 6. | 2002/99 | వి.శ్రీనివాసరెడ్డి, S/o వెంకటరామప్ప మహదేవపురం. | 8874 |
| 7. | 2006/99 | వి.జి.నారాయణప్ప S/o గుజ్జప్ప బసవనపల్లి. | 7735 |
| 8. | 2014/99 | దొడ్డక్క, W/o సిద్దయ్య, అమరాపురం. | 6705 |
| 9. | 2015/99 | డి.ఇ.నాగరాజు, S/o ఈరక్యాతప్ప నాగేనహళ్ళి. | 14700 |
| 10. | 2031/99 | వి.వీరలింగప్ప S/o ఈరప్ప ..ర్దనకుంట. | 16535 |
| 11. | 2036/99 | బి.శివకుమార్, S/o బసవలింగప్ప అరసికెర. | 19812 |
| 12. | 2049/99 | ఎం.చంద్రప్ప S/o కెంచప్ప మద్దనకుంట. | 11794 |
| 13. | 2052/99 | నాగప్ప, S/o దొడ్డరామప్ప వియసముద్రం. | 13970 |
| 14. | 2053/99 | బి.నరసింహమూర్తి, S/o పాపన్న, అమరాపురం. | 2258 |


గమనిక: 1) వేలము వాయిదా వేయుటకు గాని, రద్దు చేయుటకుగాని బ్యాంకు మేనేజరుకు పూర్తి అధికారము కలదు.

2) 1.1.2001 తేదీ నుండి వడ్డీ మరియు ఇతర ఖర్చులు ఋణగ్రహీతలు 31.12.2000 నాటి బాకీతో పాటు చెల్లించవలెను. మరియు బాకీ నిల్వ ఇంకా మిగిలినచో సదరు బాకీ నిల్వను కోర్టు ద్వారా వసూలు చేసుకోబడును.

తేదీ:-26.2.2001 సం/- బ్రాంచి మేనేజరు

சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் பாக்கியைப் பட்டியலிட்டு வங்கிகள் விடுத்துள்ள ஏல அறிவிப்பு விளம்பரங்கள்: தற்கொலைச் சாவுகளுக்கு முன்னறிவிப்பு.

**கடன் சுமையால் திவாலாகி, ஊரைவிட்டே ஓடிவிட்ட இப்பேரு கிராமத்து நிலப்பிரபுவின் பூட்டிக் கிடக்கும் வீடு.**



தொடர் கட்டுரை: பகுதி 4

# தாராளமயத் தாசர்களும் நவீன எட்டப்பர்களும்

இடதுசாரிகள் தொடங்கி வலதுசாரிகள் வரை அனைத்து ஓட்டுக் கட்சிகளின் தாராளமய எதிர்ப்பும் மோசடித்தனம் நிறைந்ததுதான் என்ற போதும் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சுதேசிதான் மிகுந்த அபாயமும், நயவஞ்சகமும் நிறைந்தது. ஏனென்றால், ஆர்.எஸ்.எஸ். மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைச் சிதைத்து இந்து தேசிய வெறியாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கி நடத்தி வருகிறது என்பதை கடந்த இரு தொடர்களில் பார்த்தோம். தனியார்மய - தாராளமய எதிர்ப்புப் போராட்ட அரங்கில், ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு துணையான நய வஞ்சகப் பேர்வழிகள் உண்டென்றால், அவை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தான்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து நடத்தும் போராட்டங்கள், பகுதியளவில் வரம்பிற்குட்பட்டு நடத்தப்படுவதாலோ; இல்லை, அப்போராட்டங்கள் தொடர்ச்சியின்றி விட்டுவிட்டும், மையமான தலைமையின்றி நடத்தப்படுவதாலோ; இல்லை, அவை போராட்டங்களைப் பாதியிலேயே கைவிட்டுச் சமரசம் பண்ணிக் கொள்வதாலோ, நாம் இப்படிக் கூறவில்லை.

முதலாவதாக, எந்தப் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து; உலக வங்கி, உலக வர்த்தகக் கழகத்தை எதிர்த்துத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போராடுகின்றனவோ, அவர்கள்தான் இவர்களின் எஜமானர்களாக, புரவலர்களாக இருக்கின்றனர். ஏழு மலைகளையும், ஏழு கடலையும் தாண்டி மந்திரவாதியின் உயிர் இருப்பதாகக் கூறும் மாயாஜாலக் கற்பனை, இவர்களின் விசயத்தில் நிதர்சன உண்மையாக இருக்கிறது. இந்தியாவைத் தாண்டி, அட்லாண்டிக் கடலை ஒட்டி இருக்கும் ஏகாதிபத்திய நாடுகள்தான், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை உருவாக்கி ஆட்டிப் படைக்கின்றன.

இரண்டாவதாக, மேலிருந்து திணிக்கப்படும் ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கைகளுக்கு கீழிருந்து - மக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்பு எழாமல், மக்களின் மனதை அதற்கு இசைவாக மாற்றுவதுதான் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நோக்கம். சில சில்லறை பொருளாதார சலுகைகளை வாங்கிக் கொடுத்து, மக்களின் உழைப்பைப் பயன்படுத்தி சுய- உதவித் திட்டங்களை நிறைவேற்றி ஏகாதிபத்தியங்களுடன் சமாதான சக வாழ்வு நடத்த முடியும் எனக் காட்டி வறிய மக்களை ஏமாற்றுகின்றன. இதற்காகவே, அவை மக்களை அணிதிரட்டி அவர்களை அரசியல் உணர்வற்றவர்களாக மாற்றுகின்றன. இதனால் தான், தனியார்மயத்தை எதிர்க்கும் பிற ஓட்டுக்கட்சிகளை விட, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு இணையான அபாயகரமானவையாகக் குறிப்பிடுகிறோம்.

உலகெங்கும் நடைபெற்று வரும் தாராளமய எதிர்ப்புப் போராட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கும், தலைமையும் ஊதிபெருக்கப்படும் இவ்வேளையில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் 'உதவி யும், போராட்டமும், மாற்றுத் திட்டமும், இந்தியாவில் ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் மறுகாலனியாதிக்கத்திற்கு எப்படிச் சாதகமாக இருக்கிறது என்பதை இங்கு பார்ப்போம்.

***

நமது நாட்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அல்லது அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடு, இன்று நேற்றல்ல, பிரிட்டிஷாரின் காலனி ஆட்சியின் பொழுதே தொடங்கி விட்டது. 1991-ஆம் ஆண்டின் இறுதியின் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் படி, கிட்டதட்ட 15,000 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இந்தியாவில் இயங்குவதாக மைய அரசு கூறியிருக்கிறது. அரசு சாராத தனியார் ஆய்வின்படி, இந்த எண்ணிக்கை இருபத்தைந்தாயிரத்தைத் தொடுகிறது. ''தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கிட்டதட்ட 250 கோடி ரூபாயை வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியாகப் பெறுவதாக'' 1986-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வாரி வழங்கும் 'கொடை வள்ளல்'களில் குறிப்பிடத்தக்கவர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த ஃபோர்டு கார் நிறுவனம் (ஃபோர்டு பவுண்டேஷன்), எண்ணெய் ஏகபோக நிறுவனமான ஸ்டாண்டர்ட் எண்ணெய் கம்பெனி (ராக்பெல்லர் பவுண்டேஷன்) மற்றும் கெல்லாக் பவுண்டேஷன்.

இந்தியாவில் இயங்கி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஒரு சில, தங்களை ''சுதேசி''களாகக் காட்டிக் கொள்கின்றன. ஆனாலும், ''சுதேசி''களுக்கும் ''விதேசி''களுக்கும் குறிக்கோளில் எந்த வேறுபாடும் கிடையாது. உதாரணத்திற்குப் பார்த்தால், தெலுங்கானா உழவர் போராட்டம் நடந்த பொழுது, அமெரிக்காவின் ஃபோர்டு மற்றும் ராக்பெல்லர் பவுண்டேஷன் இரண்டும், இந்திய விவசாயிகளைச் சாந்தப்படுத்துவதற்காக, 5 கோடி அமெரிக்க டாலர்களை நிதியுதவியாகக் கொடுத்து, கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தின. அதே சமயம், ''சுதேசி'' வினோபாபாவேயும், பல காந்தீய தொண்டு நிறுவனங்களும் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களைத் தானமாகப் பெற்று விவசாயிகளுக்கு வழங்கும் பூமிதான இயக்கத்தைத் தொடங்கின. இவை இரண்டின் குறிக்கோளும் இந்திய விவசாயத் துறையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுவதைத் தடுப்பதைத் தவிர வேறில்லை.

காலனிய ஆட்சியின் பொழுது வறுமையிலும் பிணியிலும் வாடிய இந்திய மக்களுக்கு இளைப்பாறுதல் தந்து உதவிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், 'சுதந்திரத்தின்' பின் ஏகாதிபத்திய நிறுவனங்களின் சமூக வளர்ச்சித் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லும் ஊழியாகச் செயல்பட்டன; இன்றோ, அவை, வரம் கொடுத்த சிவனின் தலையில் கைவைக்க முயன்ற பத்மாசுரன் கதையாக, தாராளமயத்தையும், பன்னாட்டு நிறுவனங்களையும், உலக வர்த்தகக் கழகத்தையும் எதிர்ப்பதாகக் கூறுகின்றன.

தாராளமயத்தை எதிர்க்கும் அரசு சாரா நிறுவனங்கள் ஒன்றிணைந்து ''இந்தியத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் வலைப்பின்னல்'' மற்றும் ''மாற்றுப் பொருளாதாரக் கொள்கைக்கான ஆயத்தக் கமிட்டி'' என இரண்டு அமைப்புகளைக் கட்டியிருக்கின்றன. சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானி வந்தனா சிவா, நர்மதா பாதுகாப்பு இயக்கத் தலைவர் மேதா பட்கர், எழுத்தாளர் அருந்ததி ராய், கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் நஞ்சுண்ட சுவாமி ஆகியோர் தாராளமய எதிர்ப்புப் போராளிகளாக இந்தியா வெங்கும் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். தனியார்மயப் பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றாக, ''மக்கள் பங்கேற்பு'', ''மாற்று வளர்ச்சித் திட்டம்'', ''தக்கவைக்கக் கூடிய வளர்ச்சி'' எனச் சொற்சிலம்பம் ஆடுகிறார்கள்.

## மாற்றுத் திட்டங்களின் முக விலாசம்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கிராமப்புறங்களில் மக்கள் குடிப்பதற்கும், பாசனத்திற்கும் தண்ணீர் வசதி இல்லையென்றால், அவை, பகுதி மக்களை அணிதிரட்டிப் போராடுவது கிடையாது. மாறாக, அவை ஏகாதிபத்தியங்களிடம் தாங்கள் பெறும் நிதியுதவியைக் கொண்டும், கிராம

www.padippakam.com

மக்களின் உழைப்பை இலவசமாகப் பயன்படுத்தியும், சிறு அணைகளைக் கட்டி (Check dams) தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முயலுகின்றன.

இது, வெளிப்பார்வைக்கு ''காலத்தினால் செய்த உதவியை''ப் போலத் தோன்றும். ஆனால், அரசியல்ரீதியில் பார்க்கும்பொழுதுதான் இந்த 'உதவி'யின் பின்னிருக்கும் நயவஞ்சகம் புரியும்.

பொதுநலத் திட்டங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவியைக் குறைக்க வேண்டும் என்பது ஏகாதிபத்தியங்களின் கட்டளை. இந்திய அரசும் இந்தக் கட்டளைப்படி கல்வி, சுகாதாரம், குடிநீர் வசதி போன்ற சமூக நலத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதைப் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்த நிலையில், கிராம மக்கள், தங்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரி போராடாமல், அரசின் நிதியுதவியையும் எதிர்பார்க்காமல், தங்களின் பிரச்சினைகளைத் தாங்களே முயன்று தீர்த்துக் கொள்வது, இந்திய அரசிற்கு பழம் நழுவி பாலில் விழுவது போன்றது. இப்படிப்பட்ட 'தன்னிறைவு' பெற்ற, 'மாதிரி' கிராமங்களைத் தான் ஏகாதிபத்தியங்களும், இந்திய அரசும் விரும்புகின்றன.

இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வழங்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மைய அரசுக்கு உண்டு என அரசியல் சாசன சட்டம் கூறுகிறது. ஆனால், உலக வங்கியின் நிதியுதவியோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட ''அறிவொளித் திட்டம்'' என்ற மோசடி, இந்திய அரசை, அடிப்படை கல்வி வழங்கும் பொறுப்பு, கடமையில் இருந்து கழட்டி விட்டது.

அடிப்படைக் கல்விக்காகப் பதிலாக அறிவொளித் திட்டத்தைத் தூக்கி வந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ரேஷன் கடைகளின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதில் அரசு கைவைத்த பொழுது உள்ளூர் அளவில் கூட்டுறவு விற்பனை நிலையங்களைக் கொண்டு வந்தன; அரசு சுகாதார நிறுவனங்கள் போதிய நிதியின்றி முடங்கிய பொழுது, நாட்டுப்புற மருத்துவமுறைகளை ஊக்குவித்தனர். கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு குறையும்பொழுது, கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களை ஏகாதிபத்திய நிதியுதவியோடு நடைமுறைப்படுத்தின. சமூகப் பொறுப்பைக் கைகழுவும் அரசின் மீது மக்களின் கோபம் பாயாமல், இத்திட்டங்களின் மூலம் அவர்களைச் சாந்தப்படுத்தி, அவர்களின் அரசியல் உணர்வை முடக்கி விடும் சதிகாரத்தனம் தவிர, இது வேறென்ன?

சமூக நலத் திட்டங்களை நிறைவேற்ற பணம் வேண்டும் எனக் கூறிதான், பொது மக்களிடமிருந்து அரசு வரி வசூலிக்கிறது. அப்படி பணம் வசூலித்துவிட்டு, பற்றாக் குறை என சாக்குப் போக்கு சொல்லி, தனது சமூகப் பொறுப்பில் இருந்து அரசு நழுவிக் கொள்ளும்போது, ''சமூக நலத் திட்டங்களை நிறைவேற்று; இல்லையேல் வரி கொடுக்க மாட்டோம்'' எனக் கோரிப் போராடுவதுதான் சரியாக இருக்கும். ஆனால், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மாற்றுத் திட்டங்கள், மக்கள் மீது அரசு திணிக்கும் வரிச் சுமையோடு, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மக்கள் தங்களது சொந்த முயற்சிகளையும், உழைப்பையுமே சார்ந்திருக்க வேண்டும் என்ற இன்னொரு சுமையையும் மக்கள் மீது தூக்கி வைக்கிறது; இதன் மூலம் சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றாமல் அரசுக்குக் கிடைக்கும் பணம் தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு முதலாளிகளுக்கும் வரிச் சலுகையாக் கொடுக்கப்படுவதை உத்தரவாதப்படுத்துகிறது.

தாராளமயத்தை எதிர்த்து போலி புரட்சியாளர்களான லிபரேஷன் குழு - வினாத் மிஸ்ரா குழு என்றழைக்கப்படும் இ.பொ.க. (மா-லெ)யும், பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கூட்டணி அமைத்துக் கட்டியுள்ள ''மக்கள் இயக்கம்'' எனும் அமைப்பு, ''உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து இந்தியா வெளியேறத் தேவையில்லை; அதே சமயம், போராட்டங்களை நடத்தி அரசை நிர்ப்பந்திப்பதன் மூலம், மக்களின் நலன்களைப் பாதுகாப்போம்'' எனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.



**நர்மதா பாதுகாப்பு இயக்கத் தலைவர் மேதா பட்கர் மற்றும் எழுத்தாளர் அருந்ததிராய் (இடது).**

சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ''உலக வர்த்தகக் கழகத்தை ஜனநாயகப் பூர்வமாக மாற்றியமைக்க வேண்டும்'' என்றும், ''ஏழை நாடுகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும்'' என்று கோரியும் போராடுகின்றன; இந்த 'முற்போக்கு' முழக்கமெல்லாம் புண்ணுக்குப் புனுகு தடவும் மோசடித்தனம் தவிர வேறில்லை. மேலும், தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்துத் தன்னார்வக் குழுக்கள் நடத்தும் போராட்டம், தாராளமயத்திற்கே அனுசரணையாக முடிவதற்கு ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

தமிழகத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் நடத்திய பொழுது, ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் நிதி உதவி பெற்று, ஜெகந்நாதன் என்ற காந்தீயவாதி தஞ்சை மாவட்டப் பகுதியில் நடத்தி வரும் ''லாப்டி'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமும் இறால் பண்ணைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்தியது. அவ்வியக்கம் இறால் பண்ணைகளை எதிர்த்து வழக்கும் தொடுத்தது. இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், சில வரையறைகளை உருவாக்கி, இதற்குக் கட்டுப்பட்டு இறால் பண்ணைகளை நடத்த வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை ''லாப்டி'' தனது சாதனையாகக் கூறியது. அதாவது லாப்டியின் சாதனை, சமூக விரோத இறால் பண்ணைகளுக்கு, ஒரு சட்டபூர்வத் தன்மை ஏற்படுத்தித் தந்த அயோக்கியத்தனத்தைத் தவிர வேறில்லை.


தாராளமயத்தை எதிர்க்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் வர்க்கத் தன்மை, சொத்துடைமை உறவுகள், உற்பத்தி - விநியோகத்தின் மீது முதலாளிகளுக்கு இருக்கும் கட்டுப்பாடு குறித்தெல்லாம் வாயே திறப்பதில்லை. தங்களை இடதுசாரி ஜனநாயக சக்திகளாகக் காட்டிக் கொள்ள ''மக்கள் பங்கேற்பு'' எனத் தம்பட்டம் அடிக்கும் அவர்கள், தங்களின் அமைப்புகளில் வர்க்க அரசியல் பேசுவதைத் திட்டமிட்டுத் தவிர்த்து விடுகிறார்கள். இதன் மூலம் பகுதி மக்களை அரசியல் உணர்வற்றவர்களாக்கி, அவர்களின் சமூக அர்ப்பணிப்பு உணர்வைப் பலமிழக்கச் செய்கிறார்கள். மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு புரவலர்களுக்குத்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, உள்நாட்டு மக்களுக்கு அல்ல. இவ்வகையில், அந்நிறுவனங்கள் ஜனநாயகத்தை இழிவுபடுத்துகின்றன.

''தலித்தியம்'', ''பெண்ணியம்'', ''மனித உரிமை மீறல்'', ''சுற்றுப்புறச் சூழல்'' என்ற பல தரப்பட்ட சமூக அரங்குகளில் செயல்படும் பல ஆயிரக்கணக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இப்பிரச்சினைகளை உருவாக்கும் ஒட்டு மொத்த சமூக அமைப்பின் மீது அக்கறை செலுத்துவது கிடையாது. ஒரே அரங்கில் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூட, அப்பிரச்சினையைத் 'தீர்க்க' தனித்தனியாகத் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டு வெளிநாட்டு நிதியுதவியைப் பெற ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்றன. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, தங்கள் பிரச்சினைக்குக் காரணமான சமூக நிலை பற்றித் தெரிந்து கொள்ளாமல், அதற்கு எதிராகப் போராட ஒருங்கிணைய முடியாமல் சிதறடிக்கப்படுகின்றனர்

www.padippakam.com

தென் அமெரிக்க நாடுகளில் செயல்படும் அரசு சாரா நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்த ஜேம்ஸ் பெட்ரோஸ் என்ற பேராசிரியர், ''அரசு சாரா நிறுவனங்கள் வலியுறுத்துவது திட்டங்களைத் தானே ஒழிய, இயக்கங்களை அல்ல. இவை, சுய உதவித் திட்டங்களுக்காக மக்களை ஒன்றுபடுத்தினாலும், உற்பத்திச் சாதனங்களையும், செல்வத்தையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப் போராடுவதில்லை. அவை கவனம் செலுத்துவது திட்டங்களுக்கான தொழில்நுட்ப நிதியுதவிகளின் மீதுதான். மக்களின் அன்றாட வாழ்வை சீர்குலைக்கும் அமைப்பியல் நிலைமைகளின் மீது அல்ல. அவற்றின் செயல்பாடு நவதாராள அரசு அனுமதிக்கும் வரையறைக்குள் சிறிய வட்டங்களில் சமூக வாழ்வை மிகக் குறைந்த ஆதாரங்களைக் கொண்டு மாற்றப் பார்ப்பதுதான்'' எனக் குறிப்பிடுகிறார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் இந்த திடீர் ஏகாதிபத்திய எதிர்ப்பு கூட, அந்த அமைப்புகளின் தலைவர்களின் மண்டையில் உதித்தது கிடையாது. ''யு.எஸ்.எய்ட்'' (USAID) என்ற அமெரிக்க நிறுவனம் இருபது ஆண்டுகளுக்கு முன்பே, தன் னார்வத் தொண்டு நிறுவனங்களை 'ஏகாதிபத்திய எதிர்ப்பு'க்குப் பயன்படுத்தும் நரித்தனத்தைத் தொடங்கி வைத்தது. இதற்காக, அந்நிறுவனம் 1981-ஆம் ஆண்டு 90 இலட்சம் அமெரிக்க டாலர்களை 50 நிறுவனங்களுக்கு வழங்கி, ''பசி மற்றும் வறுமையின் ஆணிவேரைப் பற்றியும், கல்வி உள்ளிட்ட வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும்'' ஆய்வு நடத்தக் கூறியது.



தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சென்னையில் நடத்தப்பட்ட கைவினைப் பொருட்கள் விற்பனைக் கண்காட்சி.

தாராளமயத்தை எதிர்ப்பதாகக் கூறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஓர் உயர்ந்த சமூக அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே எண்பதுகளில் ஐ.நா. சபையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்த கண்காணிப்புக் கமிட்டியும், உலக வங்கி - தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு கமிட்டியும் உருவாக்கப்பட்டன.

மார்க்சியத்தைத் துறந்த ஓடுகாலிகளும், சி.பி.எம்., லிபரேஷன் குழுவினர் உள்ளிட்ட நவீன திரிபுவாதிகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசியல் அங்கீகாரம் அளிப்பதன் மூலமும், அந்நிறுவனங்களோடு இணைந்து பணியாற்றுவதன் மூலமும், அந்நிறுவனங்களுக்கு ஒரு வகையான புரட்சிகரத் தோற்றத்தை அளிக்கின்றன.

ஐ.நா. சபையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஆலோசனைத் தகுதி வழங்கப்பட்டிருப்பதோடு, அவை பல்வேறு சமூகப் பிரச்சினைகள் குறித்து இணையான சர்வதேசக் கருத்தரங்குகள் நடத்திக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றன. இதனடிப்படையில், இந்திய அரசு வாஷிங்டனில் நடந்த அணு ஆயுதப் பரவல் தடுப்பு மாநாட்டிற்கு, தனது சார்பாக ''பாதுகாப்பு கல்வி நிறுவனம்'' என்ற அரசு சாரா நிறுவனத்தை அனுப்பி வைத்தது. இப்படி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச அதிகார வட்டத்தோடு மிகவும் நெருக்கமாகப் பிணைந்திருப்பதால், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை எளிதாக நிறுவனமயமாக்கி வருகின்றன.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நிதியுதவிக்காக மட்டுமின்றி, தகவல்கள், ஆவணங்கள், திட்டங்கள், அமைப்பு பலம் போன்றவற்றுக்கும் கூட ஏகாதிபத்திய நிறுவனங்களைத் தான் சார்ந்துள்ளன. 1960-களில் தென் அமெரிக்காவில் பௌலோ ஃபிரையரியால் உருவாக்கப்பட்ட ''ஒடுக்கப்பட்டவர்களின் போதனை முறை'', பிலிப்பைன்சில் சௌல் ஆலின்ஸ்கியால் உருவாக்கப்பட்ட ''மக்கள் பங்கேற்பின் மூலம் அதிகாரமயமாக்கல்'' உள்ளிட்டு பல்வேறு மார்க்சிய விரோத அறிஞர்களின் எழுத்துக்களை ஒன்று கலந்து, அதனையே தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சித்தாந்த அடிப்படையாக உருவாக்கிக் கொடுத்ததும் ஏகாதிபத்திய நிறுவனங்கள்தான். ஏகாதிபத்தியங்கள், ஏழை நாடுகளில் ''சுய உதவித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மட்டும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்துவதில்லை. அரசியல் - இராணுவ உளவு வேலை பார்ப்பதற்காகவே, இவை, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடையே ''ஊழியர் பரிமாற்றத் திட்டத்தை'' நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இப்படிப்பட்ட நயவஞ்சகமான தேசத் துரோகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், முற்போக்கானதாக மட்டுமல்ல, கம்யூனிசத்திற்கு மாற்றாகவும் காட்டப்படுகின்றன. அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் மிகப் பெரிய தன்னார்வ - ஏகாதிபத்திய தொண்டு நிறுவனமான ஃபோர்டு பவுண்டேஷனிடம் காசு வாங்கிக் கொண்டு ''லோகாயன்'' என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வரும் ரஜினி கோத்தாரி, உலக நடுத்தர வர்க்கமே, ஒன்றுபடுங்கள் என அறைகூவல் விடுக்கிறார்; மேலும், ''மக்களை, கட்சி சார்பற்ற அரசியல் வழிமுறைகளின் மூலம், செயல் நோக்கங் கொண்ட நடுத்தர வர்க்க வல்லுநர்கள் வழிநடத்த வேண்டும்'' என்றும் உபதேசிக்கிறார்.

குட்டி முதலாளித்துவ - நடுத்தர வர்க்கத்தினரை மக்களின் தலைவர்களாகத் திணித்து விட கோத்தாரி போன்ற ஏகாதிபத்திய அடிவருடி சிந்தனையாளர்கள் முயலுவதற்குக் காரணம், இந்தியாவில் புரட்சிகரமான சமூக மாற்றம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதைத் தவிர வேறில்லை. உலக நாடுகளின் வரலாறை எடுத்துப் பாருங்கள். மக்களின் புரட்சிகரப் போராட்டங்கள் கம்யூனிஸ்டுகள் தலைமையில் நடந்த நாடுகள், தங்களின் விடுதலையைச் சாதித்திருப்பதையும், கம்யூனிஸ்டுகளின் தலைமையில் நடக்காத நாடுகளில், விடுதலை என்ற பெயரில், அந்நாடுகள் அரைக் காலனி, நவகாலனி நாடுகளாக மாற்றப்பட்டிருப்பதையும் அறிய முடியும்.

தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்து இந்திய மக்கள் தீவிரமாகப் போராடத் துவங்கியுள்ள இவ்வேளையில், ஏகாதிபத்திய ஏவல் நாய்களான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளாகக் காட்டிக் கொள்ள முயலுகின்றன. இந்த ஐந்தாம் படைக் கும்பலை எதிர்த்து வீழ்த்தாமல், நாடு மீண்டும் அடிமையாக்கப் படுவதைத் தடுக்க முடியாது; அதற்கு, நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையை விட்டால் வேறு வழியும் கிடையாது.

— முற்றும்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா


இந்தப் படத்தில் நாம் காணும் சிறுமிகளில் பெரும்பாலோர் குழந்தை தொழிலாளர்கள். தாங்களும் மற்றவர்களைப் போல படித்துப் பெரிய ஆளாக வேண்டும் என்ற நியாயமான ஆசையினால், ''எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி வசதி செய்து கொடு'' எனக் கோரி, அவர்கள் சென்னையில் ஊர்வலம் நடத்தினார்கள்.



இந்தியாவில் இருந்து கொண்டே புகழ் பெற்ற அயல் நாட்டு பட்டப்படிப்புக்களைக் கூடப் படித்துக் கொள்ளும் அளவிற்கு ''கல்வி வசதி பெருகிவிட்ட'' இந்தக் காலத்தில், அரசிடம் ஆரம்பக் கல்வி கேட்டுப் போராடுவது விசித்திரமானதாகத் தெரிகிறதா? இதுவே விசித்திரம் என்றால், ''இன்னும் சில ஆண்டுகளில், உலகிலேயே அதிக அளவு எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் வாழும் நாடு இந்தியாதான் என்ற பெருமை நமக்குக் கிடைத்துவிடும்'' என்ற உண்மையை எப்படி ஜீரணிக்கப் போகிறீர்கள்?

''சுதந்திரமடைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னும்...'' என்று ஒப்புக்காக இழுப்பதெல்லாம் பழைய கதை. தனியார்மயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ''மெட்ரிகுலேஷன்'' பள்ளிகள் கிராமங்களில் கூட ஊடுருவிவிட்ட பிறகும், இதுதான் கல்வியில் நமது நாட்டின் வெட்கக்கேடான நிலை. ''ஏன்?'' என்று அப்பாவித்தனமாகவோ, இல்லை அகங்காரத்தோடோ கேட்கப்படும் கேள்விக்கு, ''பணமும் வசதியும் இருந்திருந்தால், இந்தக் குழந்தைகள் ஏன் தெருவில் இறங்கிப் போராடுகிறார்கள்?'' என்பது தான் பதில். கல்வியில் புகுந்துவிட்ட தாராளமயமும், தனியார்மயமும் ஏழைக் குழந்தைகளின் கல்வி வாய்ப்பை மட்டுமா தட்டிப் பறிக்கிறது?

இதோ இந்தப் படத்தில் நாம் காணும் இரு இளைஞர்களும், தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு வடமாநிலங்களில் 'நடத்தப்பட்ட' ''வின்டெக்'' என்ற தனியார் கணினி கல்வி நிறுவனத்தின் முன்னாள் மாணவர்கள். ''இங்கே படித்துவிட்டு, அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ வேலை தேடிக் கொண்டு, உல்லாசமாக வாழ்க்கையை ஓட்டலாம்'' என இருவரும் கனவுகளோடு, இந்த நிறுவனத்தில் படிக்க பத்தாயிரக்கணக்கில் பணம் கட்டினார்கள்.




ஆனால், கடந்த மாதம் ''வின்டெக்''கும், அதன் சகோதர நிறுவனமான ''சாப் இன்ஃபோ டெக்கும்'' மூடப்பட்டதால், அவர்களின் பணமும் பறி போய் விட்டது; ஆசைக் கனவிலும் மண் விழுந்து விட்டது. இவர்களைப் போல, ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஏமாந்து போய், கட்டிய பணமாவது திரும்பக் கிடைக்குமா? என அலைகிறார்கள். 8 கோடி ரூபாய் செலவு செய்து, அமெரிக்கா / ஆஸ்திரேலியா என ஆசை காட்டி விளம்பரம் செய்து, இந்தத் தனியார் கல்வி நிறுவனம் அடித்த பகற்கொள்ளை கிட்டத்தட்ட இருநூறு கோடி ரூபாய்.

''எல்லா தனியார் கல்வி நிறுவனங்களும் இப்படி மோசடித்தனமாக மூடப்படுவதில்லை'' என்று சிலர் நியாயம் பேசலாம். ஆனால், மெட்ரிக்குலேஷன் பள்ளி தொடங்கி பொறியியல்/மருத்துவக் கல்லூரிகள் வரை அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களிலும் கட்டணம் என்ற பெயரில் மாணவர்களிடம் பகற்கொள்ளை அடிப்பது நடக்கிறதா, இல்லையா என்பது தான் நமது கேள்வி.

கல்வி தனியார்மயமானதால், அடிப்படை கல்வி கூட மறுக்கப்படும் கூலித் தொழிலாளர்களின் குழந்தைகள் ஒருபுறம்; இன்னொரு புறமோ, கணினிக் கல்வி என்ற கவர்ச்சியின் மூலமும், கல்விக் கட்டணம் என்ற கொள்ளை மூலமும் ஏமாற்றப்படும் சுரண்டப்படும் நடுத்தர வர்க்க மாணவர்கள். இந்த அநீதியும், மோசடியும் இனியும் தொடர அனுமதிக்கலாமா?


Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalingam Nagar, Chennai - 600 083

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG-544/2001




படிப்பகம்